Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என் தந்தை

ஆசிரியை :
சகுந்தலா பாரதி
(பாரதியாரின் புதல்வி)

பாரதி தமிழ்ச் சங்கம்
(பதிவானது)
93-ஏ, ராஷ் விஹாரி அவெனியூ,
கல்கத்தா-29

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
कृपया पुस्तक के ऊपर कोई निशान आदि
न लगायें।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय हरिद्वार
वर्ग संख्या ------ आगत सं० ------
पुस्तक - वितरण की तिथि नीचे अंकित है ।
इस तिथि सहित 15वें दिन तक यह पुस्तक पुस्तकालय
में वापिस आ जानी चाहिए । अन्यथा 15 पैसे के
हिसाब से विलम्ब - दण्ड लगेगा ।

கல்கத்தா-29

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
कृपया पुस्तक के ऊपर कोई निशान आदि
न लगायें।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

...ERNMENT OF INDIA ... CULTURE

என் தந்தை

ஆசிரியை :
சகுந்தலா பாரதி
(பாரதியாரின் புதல்வி)

பாரதி தமிழ்ச் சங்கம்
(பதிவானது)
93-ஏ, ராஷ் விஹாரி அவெனியூ,
கல்கத்தா-29

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உ

சங்க வெளியீடு 15
முதற்பதிப்பு மார்ச் 1974

விலை ரூ. 4-00

அச்சிட்டோர் :
இன்டஸ்ட்ரியல் இகானமிஸ்ட் பிரிண்டிங் பிரஸ்
1/124, லாயிட்ஸ் ரோடு, சென்னை-86.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded with Compliments From
THE DEPARTMENT OF CULTURE
GOVERNMENT OF INDIA.

வாசகர்களுக்கு

எங்கள் சங்கத்தின் பதினைந்தாவது வெளியீடாக வருகிறது இந்நூல். கவியரசர் பாரதியின் நினைவில் பிற மாநிலத்தில் தொண்டாற்றி வரும் சங்கம் பாரதி பற்றியப் பசுமை நினைவுகள் நிறைந்த இந்நூலை வெளியிடுவதில் பெருமை கொள்கிறது. ஓர் இலக்கியத்தை பூரணமாக அறிந்து கொள்ள அதை ஆக்கிய கவிஞனது வாழ்க்கையை நன்கு அறிந்து கொள்வது தேவை என்பது மேநாட்டு அறிஞர்களின் கருத்து. அந்த முறையில் பாரதியின் வாழ்க்கையில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளையும் நினைவு கூர்கிறார் அவரது அருமைப் புதல்வி. அது மட்டுமன்றி, நமது நெஞ்சை யள்ளும் அவரது பல பல பாடல்கள் எந்தப் பின்னணியில் எழுந்தன என்றெல்லாம் நமக்குச் சொல்லுகிறார் சகுந்தலா அவர்கள். பாரதி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மிக மிகப் பயனுள்ளது இந்நூல் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

பாரதி நினைவுக்குச் சங்கம் செய்யும் பணியைப் பாராட்டும் வகையில் தான் திருமதி சகுந்தலா பாரதி அவர்கள் இந்நூலை வெளியிடும் வாய்ப்பை எங்களுக்கு நல்கினார்கள் என்றே நம்புகிறோம். அதற்காக அவர்களுக்கு மிகவும் கடமைப் பட்டுள்ளோம். பாரதியின் கவிதை மொழிபெயர்ப்பு, கட்டுரை மொழிபெயர்ப்பு, விமர்சனங்கள், இவற்றை ஆங்கிலத்திலும், ஹிந்தியிலும் வெளியிட்டுள்ள இச் சங்கம் மேலும் பாரதி ஆராய்ச்சியில் ஈடுபட்டோர்க்கு வழங்கியுள்ள இந்த அருமையான நூலைத் தமிழன்பர்கள் நல்ல முறையில் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

இந்நூலைக் குறுகிய காலத்தில் மிகச் சிறப்பாக அச்சிட்டு உதவிய திரு விசுவநாதன், திரு இராமமூர்த்தி ஆகிய இருவருக்கும் எங்கள் நன்றி.

கல்கத்தா
மார்ச் '74

பாரதி தமிழ்ச் சங்கம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded with Compliments from THE DEPARTMENT OF CULTURE GOVERNMENT OF INDIA.

என் தந்தை

"எந்தாய்! நீதந்த
இயற்பொருள் எல்லாமிழந்து
நொந்தார்க்கு நீயன்றி
நோவழிப்பார் யாருளரே?"

—பாரதி

1940-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 11-ந் தேதி அவர் இறந்த நாள் பாரதி தினமாகக் கொண்டாடப்பட்டதை இரண்டாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள நான் ரேடியோ மூலமாகக் கேட்டேன். அவரது கவிதைத் திறமையை, அவர் தம் உயரிய தேச பக்தியை ஜனங்கள் அறிந்து பக்தி செலுத்துகிறார்கள். ஆனால், அவர் தம் கவிதையின் மூலமாக தம் கருத்துக்களை வெளியிட முடியாமல் கட்டுண்டு கிடந்ததை நினைந்து மனம் நொந்து மருகியதை யாரறிவார்?

அவர் ஓர் க்ஷத்திரியனைப்போன்று வீர மரணத்தை விரும்பினார்! "போர் முனையிலே முன்னணியில் நிற்பேன். துண்டிக்கப்பட்டு விழுந்த என் சிரசைப் பல்லக்கில் வைத்துக் கொணர்வார்கள்! செல்லம்மா! அப்போது ஜனங்கள் உனக்கு சேனைத்தலைவனுடைய மனைவிக்குரிய மரியாதை செய்வார்கள்" என்பார். "நரை கூடிக் கிழப்பருவமெய்தி கொடுங்கூற்றுக்கிரையெனப் பின்மாயும் பல வேடிக்கை மனிதரைப்போல நான் வீழ்வேனென்று நினைத்தாயோ?" என்று பராசக்தியிடம் ஒவ்வொருநாளும் ஸ்நானம் செய்யும் போது கோபத்துடன் கேட்பதுபோலப் பாடுவார். சிறு குழந்தையான என் மனத்தில் அவரது வார்த்தைகள் பசுமரத்தாணிபோலப் பதிந்தன.

என் தகப்பனாரைப்பற்றி என் நினைவுகளையும் எழுதலாமென்று எண்ணி ஆரம்பித்தேன். எதிலிருந்து தொடங்குவது?

"ஓடித்தவறி உடைவனவாம் சொற்களெலாம்,
கூடி மதியிற் குவிந்திடுமாம் செய்தியெலாம்."

எனக்குப் பொழுதுபோவதற்காக எண்ணற்ற கதைகள் சொல்லுவார். தமிழ்க்கதைகள் முடிந்துவிடும். பஞ்சதந்திரம், மற்றும் சம்ஸ்கிருதக் கதைகள், 'லாபோந்தேன்' எழுதிய பிரெஞ்சுக் கதைகள். அவைகளும் முடிந்து விடும். புதிய புதிய கதைகள், அப்போதைக்கப்போது கற்பனை செய்துகூடச் சொல்வார். நட்சத்திரக் கதைகள் கடலலைக்கதைகள் எனப் பல பல.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என் தந்தையிடம் நான் விளையாட்டுப் பொருள்கள், பொம்மைகள் கேட்டது கிடையாது. புதிய புதிய கதைகள், பாடல்கள் இவைதாம் அவர் எனக்குக் கொடுக்கும் பரிசுகள். ஒரு பழைய கருப்புத் தகரப் பெட்டி, அதில் அவருடைய கையெழுத்துப் பிரதிகளும், பத்திரிகைகளிலிருந்து வெட்டி ஒட்டப்பட்ட வியாசங்களும் அடங்கியிருக்கும். அவற்றை எங்களுக்கு லட்ச ரூபாய் ஆஸ்தி என்று சொல்வார். உண்மைதானே!

சாதாரணமாக, குழந்தைகளுக்குத் தாய்தந்தையரிடம் மிக்க அன்பு இருக்கத்தான் செய்யும். ஆனால், நான் அவரிடம் கொண்டிருந்த அன்பு, மதிப்பு, பக்தி எல்லையற்றவை. "அண்ணன் ஒருவனை அன்றியே புவியத்தனைக்கும் தலையாயினேம் என்னும் எண்ணம் மனதிடைக் கொண்டவன்" என்று பாஞ்சாலி சபதத்தில் துச்சாதனனை அவர் வர்ணிப்பதைப் போல, எனக்கு அவர் ஏது கூறினாலும் என்ன சொன்னாலும் வேதவாக்கு என்ற நம்பிக்கை.

எனக்குத் தந்தையிடம் மிக்க சலுகை உண்டு. அதனால், ஒரு நாள், என் தாயார் சொல்லியதைக் கேளாமல் மறுத்துரைத்தேன். "தாய் சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா" என்று பாடினார். 'நான் செய்ய வேண்டியதற்கெல்லாம் ஒருபாட்டு இப்பொழுது எழுதிக் கொடு' என்று கேட்டேன். உடனே 'பாப்பா பாட்டு' எழுதிக் கொடுத்தார்.

முதன் முதலாக எனக்கு என் தந்தை கதை சொல்ல ஆரம்பித்த சம்பவம், மூன்று வயதாக இருந்தபொழுது நிகழ்ந்தது. அதன் விவரம் என் தந்தையார் சில ஆண்டுகளுக்குப் பிறகு தமது உற்ற நண்பர் ஒருவரிடம் சொல்லியதை அப்படியே எழுதுகிறேன்.

"செல்லம்மாவுக்கு உடம்பு குணமில்லை. வைத்தியர் புதுவை நகரிலுள்ள 'ஆர்டிஷன் வெல்ஸ்' நீரூற்றில் தினமும் ஸ்நானம் செய்தால் நல்லது என்று சொன்னார். அதிகாலையில் வேலைக்காரி அம்மாக்கண்ணுவைத் துணைக்கு அழைத்துக்கொண்டு நீரூற்றில் ஸ்நானம் செய்வதற்காகச் செல்லம்மா போய் விட்டாள். குழந்தை, பாப்பா தூங்கிக்கொண்டிருந்தது. 'குழந்தை விழித்தவுடன் வெங்கலச் செம்பில் மூடிவைத்திருக்கும் பாலை அதன் பக்கத்தில் வைத்திருக்கும் சின்னக் கெண்டியில் விட்டு பாப்பாவுக்கு கொடுங்கள்' என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள். ஆனால் நேரமாக ஆக எனக்கு ஒரு சந்தேகம் தோன்றி வளர்ந்துகொண்டே வந்தது. குழந்தை எழுந்து அம்மாவைக் காணோம் என்று அழுதால் என்ன செய்வது? நமக்கோ குழந்தையைச் சமாதானப்படுத்த வழி தெரியாது. இதுவரை இம்மாதிரி ஒரு சங்கடமான நிலைமை ஏற்பட்டதில்லை. குழந்தை சந்தோஷமாகச் சிரித்து விளையாடும்போது எடுத்து முத்தமிட்டு மகிழ்ந்ததுண்டு. சரி பார்ப்போம். குழந்தை அழுதால் எடுத்துக் கொண்டு போய் முருகேசப் பிள்ளை வீட்டில் அண்ணியம்மாளிடம் கொடுத்து விடுவோம். நல்ல வேளையாக அவர்கள் வீடு மிகச் சமீபத்தில் இருக்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"இப்படியாக நான் யோசித்துக்கொண்டிருக்கும் போதே அந்த அற்புதம் நிகழ்ந்தது. பாப்பா கண்ணை விழித்தது என்னைப் பார்த்துப் புன்னகை செய்தது. நான் உடனே சந்தோஷத்தோடு 'பாப்பா கண்ணே! உனக்குப் பால் வேண்டுமா?' என்று கேட்டேன். "வேண்டும்" என்று சொல்லிற்று. கெண்டியில் பாலை ஊற்றி, பாப்பாவை மடியில் எடுத்து வைத்துக்கொண்டு குழந்தையின் கையில் கெண்டியைக் கொடுக்கப்போனேன். பாப்பா கலீர் என்று சிரித்தது பாப்பா சொல்லுகிறது "கெண்டியை நான் தொடக்கூடாது கைசுடும். நீ கெண்டியைப் பிடித்துக்கொள்" என்றது. பால் சாப்பிட்டாயிற்று. பிறகு என்ன செய்வது? 'பாப்பா உனக்கு நான் ஒரு பாட்டுப் பாடட்டுமா?' என்று கேட்டேன். பாப்பா மறுபடி சிரித்தது. 'பாட்டு, தூங்கப்பண்ணும் போது பாடவேண்டும். இப்போது பேசு' என்றது. என்ன பேசுவது? குழந்தையிடம் எதைப்பற்றிப் பேசுவது? ஒருகணம் யோசித்தேன். அதற்குள் பாப்பாவே விடை கண்டு பிடித்துவிட்டது. 'அப்பா! கதை சொல்லு' என்றது.

மூன்று வயதிலிருந்து ஏழு வயதுவரை நாலு வருஷங்கள் அப்பா கதைகள் சொன்னார். ஏழு வயதில் நான் தமிழ் நாவல் படிக்க ஆரம்பித்துவிட்டேன். அப்பா சொன்ன கதைகள் அவற்றில் சில அவராலேயே எழுதப்பெற்று பத்திரிகைளில் வெளிவந்திருக்கின்றன. ஆனால் அப்பா சொன்ன அபூர்வமான கதைகள் எத்தனை எத்தனையோ உள்ளத்தினடியில் எங்கோ புதைந்து மறைந்து கிடக்கின்றன. என்றோ ஒருநாள் அவை மனத்தின் அடித்தளத்திலிருந்து மேலே மறைத்திடும் எண்ண அலைகளைக் கிழித்தெறிந்து மூடியிருக்கும் மறதியைக் களைந்து வெளியில்வரும்.

மண்ணின் அடியில் புதைந்து போன புராதனச் சின்னங்களைத் தேடிக் கண்டு பிடித்து அவை சொல்லும் அதிசயக் கதைகளையெல்லாம் அறிஞர்கள் கண்டு பிடித்து நமக்குத் தருகிறார்கள் அல்லவா? அது போல என் தந்தையாரின் கற்பனைக் கதைகளும் தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்குக் கிடைக்கக்கூடும். அப்பா கதை சொல்லுவார். ரோஜாப்பூமாலையும் எலுமிச்சம் பழமும் வாங்கிக் கொண்டு வந்து அப்பாவைக்காணச் சில அன்பர்கள் வருவார்கள்.

அவர்கள் வீடு திரும்பிய பின் அன்றைக்குக் கதையில் ரோஜாப் பூவும் எலுமிச்சம் பழமும் பேசும். அந்தக்காலத்தில் வாழ்ந்திருந்த மனிதர்களின் பழக்க வழக்கங்களைப் பற்றி அவை கதைபேசும். அந்தக்கதையிலிருந்து அப்பாவின் உள்ளம் ஒரே தாவாகத்தாவி நாட்டின் சரித்திரத்தின் மீது பாயும். ரோஜாப்பூவிலிருந்து அத்தர் பிறந்த கதை, பின் மொகலாயச் சக்கரவர்த்திகள் தமிழ் நாட்டை ஆண்ட கதைகள் இப்படி எத்தனையோ கதைகள் நம் நாட்டிலுள்ள பாஷைகளில் தந்தையாருக்குத் தெரிந்திருந்த பாஷைகள் அனைத்திலும் அவர் படித்திருந்த எண்ணற்ற கதைகள் தவிர, ஆங்கிலத்திலும் பிரஞ்சு பாஷையிலும் அவர் படித்திருந்த கதைகளையும் சொல்லுவார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அப்பா கதை சொல்லுவதில் எந்தத் தேசத்துக் கதையாக இருந்தாலும் அதையெல்லாம் அவர் சொல்லி முடிக்கும் போது நமது பாரத நாடு அன்னியர் ஆதிக்கத்தின் கீழ் அவலமடைந்திருந்த நிலையை விளக்கும் ஓர் உதாரணமாவது ஒரு சொற்றொடராவது அதில் இல்லாமற்போகாது. நண்டு வளை தோண்டும் கதையாய் இருந்தாலும் சரி, நட்சத்திரக் குவியலின் கதையாய் இருந்தாலும் சரி அதில் பாரத நாடு சுதந்திரமடைய வேண்டுமென்ற கருத்து கலந்தே இருக்கும்.

என் தந்தையார் தம் தேசத்தின் மீதுள்ள அன்பிற்கு அடுத்த தாக என் மீது பிரியம் செலுத்தினர். சிலர், 'பாரதி, மனைவி மக்கள் மீது பற்றற்று சன்யாசிபோல் வாழ்ந்தார்' என்று சொல்வதைக் கேள்விப்படுகிறேன். அது முற்றிலும் தவருனது. காசாசையும் சுய நலமும் கொண்டு தன் மனைவி மக்களுக்குப் பொருள் சேர்ப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ள மனிதர்களின் கணக்குப்படி வேண்டுமானல் அவர் சம்சாரத்தில் பற்றற்றிருந்ததாகக் கொள்ளலாம். என் தந்தை எங்கள் மீது வைத்திருந்த அன்பு சுயநலமற்றது, களங்க மற்றது, எல்லையற்றது.

எனக்கு ஐந்து வயதாக இருக்கும்போது ஒருசமயம் கடுஞ்சுர நோய் கண்டது. காய்ச்சலின் வேகத்தால் நாக்குழறிவிட்டது. என் தந்தையின் உண்மை சிநேகிதருள் ஒருவரும், என் வளர்ப்புத் தந்தை யாக நான் கருதியவருமான ஸ்ரீ பொன்னு முருகேசம்பிள்ளை என்னைப் பார்க்க வந்தார். என் தந்தை, 'பாப்பா, யார் வந்திருக்கிருர்கள், பார்' என்ருர். முருகேச பிள்ளை என்று சொல்ல எண்ணிய எனக்கு, சுர வேகத்தால் நாக்குழறிப் போயிற்று. 'முருகேழ பிள்ளை' என்று சொன்னேனும். என் தந்தை சுவரில் மோதிக்கொண்டார், புலம்பினர். 'பாப்பா, நீ கடற்கரை மேடையிலிருந்து சிங்கம் கர்ஜிப்பது போலப் பிரசங்கம் செய்யப்போகிருய் என்று எண்ணியிருந்தேனே! என்ன குற்றம் செய்ததினல் குழந்தைக்கு இக்கதி நேர்ந்தது? தாய் தந்தையரின் செய்கைகள் மக்களைப் பாதிக்கின்றன. சரீர வாதனை யைத் தான் அனுபவிப்பதைவிடத் தன்னில் இனியார் தம்மக்கள் அனுபவிப்பதைப் பார்ப்பது பதின்மடங்கு கொடியது. நான் என்ன குற்றம் செய்தேன்? என்னிடமுள்ள கெட்ட பழக்கம் நான் புகையிலை போட்டுக்கொள்வது ஒன்றுதான். அதையும் இன்றுடன் விட்டேன்,' என்று சபதங்கூறினர். காய்ச்சல் "டைபாயிட்" சுரமாதலால் குணமாக மூன்று மாதமாயிற்று. கொஞ்சம் குணம் தெரிந்தவுடன் எழுதிய பாட்டுத்தான்.

"பக்தியினலே-இந்தப்
பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடி!

என்ற பாட்டு. என் தாயார் செல்லம்மாளுக்காக எழுதியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தப்புவிக்கே—இங்கோர், ஈசனுண்டாயின்
அறிக்கையிட்டேனுன்றன்
கந்தமலர்த்தாள் - துணை காதல் மகவு
வளர்ந்திடவேண்டும் என் சிந்தையறிந்தே
அருள் செய்திடவேண்டும்
என்றால் அருளெய்திடும்.

(பக்தியினாலே)

எனக்கு வயது ஏழு, அல்லதுஎட்டு இருக்கும். எங்கள் வீட்டில் ஸ்வாமி விவேகானந்தரின் பிறந்தநாள் கொண்டாடுவது வழக்கம். முதன் முதலாக, அப்பா எனக்குப் பிரசங்கம் செய்யக் கற்றுக்கொடுக்கும் பொருட்டு ஸ்வாமி விவேகானந்தருக்கு வணக்கமும் விவேகானந்தர் சரித்திரத்தின் சுருக்கமும எழுதிக்கொடுத்துப் படிககும்படி செய்தார். ராமகிருஷ்ணரின் சரித்திரம், தேவி நிவேதிதாவின் சரிதை இவற்றைச் சிறிய கதைகள் போல எனக்குச் சொல்வார்.

1907ம் ஆண்டு, என்று நினைக்கிறேன். ஸ்ரீ விபின சந்திரபாலரை வேண்டி சென்னைக்கு அழைத்துவரும் பொருட்டு அப்பா கல்கத்தாவுக்குச் சென்றிருந்தார். அப்பொழுது அங்கு ஸ்ரீ நிவேதிதா தேவியைக் கண்டு வணங்கி அவரிடம் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது, தேவியார், 'மகனே, உனக்குத் திருமணம் முடித்தாயிற்றா?' என வினவினாராம். என்தந்தை, தமக்கு விவாகமாகி ஒரு பெண குழந்தையும் பிறந்திருப்பதாகச் சொன்னாராம். தேவியார், 'அப்படியானால் என்னைக் காண்பதற்கு நீஏன் உன் மனைவியை அழைத்துவரவில்லை? என்று கேட்டார். 'சென்னையிலிருந்து நான் மட்டும் தான் கல்கத்தா வந்திருக்கிறேன். தேசீய காரிய நிமித்தம் வந்ததால் மனைவி மக்களை அழைத்துவரவில்லை' என்றார். உடனே தேவியார் 'மகனே, நீ போகுமிடத்திற்கு உன் வலதுகரம் இல்லாமல் போவாயா? யாது வேலையாயினும் உன் தர்மபத்தினியை உடனழைத்துப் போவதுதான் சரி. அதுதான் கிரஹஸ்தாச்ரமத்திற்கு உகந்தது' என்றார் ஸ்ரீ நிவேதிதா தேவியார் தாம் இமயமலைக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள மரத்தின் இலையொன்றைத் தம் ஞாபகார்த்தமாக அளித்திருந்தார். அதை என் தாயார் தம் நகை (இல்லாத) பெட்டியில் வைத்திருந்தார்.

சிறு வயதில் எங்களுக்குத் தெய்வ பக்தியைப்பற்றிப் பலவாறு உபதேசம் செய்வார். மற்றும் அவரைக் காணவரும் நண்பர்களுக்கு உபதேசம் செய்வதையும் சிலரோடு தர்க்கம செய்து வென்று அவர்களுக்குத் தம் பக்தி வழியைப் போதிப்பதையும் பலமுறை கேட்டிருக்கிறேன். அவரவர் தம் விருப்பத்திற்கிணங்க கடவுளை எந்த ரூபத்தில் வேண்டுமாயினும் வணங்கலா மென்பதே அவர் கொள்கை எங்கள்வீட்டில் முக்கியமாகக் கொண்டாடுவது சரஸ்வதி பூஜையும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மறுநாள் ஆயுத பூஜையும் தான். அதை 'சக்தி பூஜை' என்று சொல்வோம் பகல் முழுவதும் மௌன விரதமிருந்து புதியதொரு பாடலியற்றுவார். அவைதாம் "மாதா பராசக்தி". 'உஜ்ஜயினி' முதலிய பாடல்கள். ஒருமுறை, சக்தி பூஜையன்று மகரிஷி அரவிந்தரும் எங்கள் வீட்டிற்குவிஜயம் செய்திருந்தார். நண்பர்கள் யாவரும் சூழ்ந்திருக்கஎன் தந்தை காளிகா தேவிக்குப் பூஜை செய்தார்.

சாக்தமதக் கொள்கையே அவர் பெரிதும் மேற்கொண்டவர். 'சக்திதாஸன்' 'காளிதாசன' என்ற புனை பெயரோடு அவரது வியாசங்கள் பல பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. நான் ஒரு நாள் கேட்டேன். 'அப்பா, நம் நாட்டில் வைஷ்ணவம், சைவம் என்று இரண்டு மதங்கள் தாமே இருக்கின்றன, நீயோ சக்தி மதம் என்று சொல்கிறாய். மூன்றாயிற்று. ஆனால் என் மனத்திலோ விநாயகர் மீதுதான் அதிக பக்தி தோன்றுகிறது. நான் எந்த மதம்?' என்று, என் தந்தை உற்சாக மேலிட்டவராக ஸ்ரீ சங்கராச்சாரியார் ஆறு மதங்கள் ஸ்தாபித்ததைப் பற்றி உபதேசம் செய்தார். அத்துடன் 'மகாராஷ்டிரத்தில் காணபத்திய மதத்தை இப்பொழுதும் கொண்டாடுகிறார்கள். அதனால் நம் வீட்டில் பாப்பா காணபத்திய மதம்' என்றார். எனக்குப் பள்ளிப் பிள்ளையார் சிந்தனையைப் படிப்பித்தார் அதைத தினந்தோறும் சாப்பிடுமுன் ஒருமுறை சொல்லி நான் வணங்குவது வழக்கம்.

பிறகு, புதுவை மணக்குள விநாயகர் மீது 'விநாயகர் நான்மணி மாலை' எழுதினார். சாதாரணமாக, புதுவையில் வேறு கோயில்களுக்கு என் தந்தையார் அடிக்கடி போவதை நான் கண்டதில்லை. ஆனால் புதுவை வெள்ளைக்காரத் தெருவில் உள்ள சிங்கப் பிள்ளையார் கோயிலுக்கு மட்டும் நாங்கள் போவோம் கணபதி மீது சிறு குழந்தைக்குள்ள பக்தியை வளர்ப்பதற்காக அவ்வாறு செய்தாரென நான் எண்ணுகிறேன்.

தற்காலம் புதுவை அரவிந்தாச்ரமத்து 'அன்னை' யென்று அழைக்கப்படுபவரான 'மதாம் ரிஷர்' அம்மையார் அந்த நாளில் தம் கணவருடன் புதுவைக்கு வந்த பொழுது, அவரைக் காண்பதற்காக நாங்கள்போயிருந்தோம். மேல் நாட்டாரது வழக்கப்படி கை குலுக்க வந்த 'மதாம் ரிஷர்' அவர்களை, தந்தையார் கைகூப்பி வணங்கினார். பிறகு அவரிடம் நம் ஹிந்து சமூகத்தின் பழக்க வழக்கங்களையும் அவற்றின் மேன்மைகளையும் பற்றி வெகு நேரம் சம்பாஷணை நடந்தது. 'மதாம் ரிஷர்' எனக்கு உண்பதற்கு நிலக்கடலையும் வாழைப் பழமும் தந்தார். அத்துடன் பச்சைப்பாசி மணியால் செய்த மாலையொன்றையும் எனக்குப் பரிசாக அளித்தார்.

ஒரு சமயம். என் தந்தை சாதாரணமாகக் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கும் முறைப்படி எனக்கு முதல்பாடப் புத்தகத்தைப் படிப்பிக்க ஆரம்பித்தார் சிறிய குழந்தைகளுக்குக் கணக்கும், பாடமும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கற்பிப்பது எத்தகைய சிரமமான காரியம் என்பதை அப்பொழுது தான் உணர்ந்தார். "குறைந்தது பத்து வருடங்கள் படித்தவர்களுக்குத் தான் என்னுல் பாடம் சொல்ல முடியும் ஆனுல் நம்முடன் கூட இருந்து பழகுவதிலேயே தனியே படிப்பு வரும். கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும், என்ற வசனம் போல. கொஞ்சம் பெரிய வர்கள் ஆன பிறகு நான் படிப்பித்தால் போதும்" என்று நிறுத்தி விட்டார். எனவே, என் தாயார் தான் எனக்குப் பால பாட புத்தகத்தை எழுத்துக் கூட்டிப் படிக்கக் கற்றுக் கொடுத்தார். அடுத்ததாக நான் வாசித்த புத்தகம் பண்டித நடேச சாஸ்திரியார் எழுதிய "தலையணை மந்திர உபதேசம்." திடீரென்று நான் பெரியதொரு கதைப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்கிய காரணம் என் தமக்கை நாங்கள் விளையாடும்போது அவள் சொல்படி நடக்கா விட்டால் ஒரு கதைப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வாசிக்கப்போய் விடுவாள் வாசிக்கும் போதும் எழுதும் போதும் எக்காரணத்தைக் கொண்டும் அவர்களிடம் பேசி இம்சை செய்யக் கூடாதென்பது எங்கள் வீட்டில் சட்டம். அதனுல் நான் தனிமையாகப் பொழுது போகாமல் உட்கார்ந்திருக்க நேரும். கையில் அகப்பட்ட புத்தகங்களை எழுத்துக் கூட்டி வாசித்து நாளடைவில் நன்ருக வாசிக்கப் பழகினேன். பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் கற்பிப்பதால் என்னைப் பள்ளிக்கு அனுப்ப என் தந்தையார் மறுத்து விட்டார். "அடிமையுணர்ச்சியை உண்டாக்கும் பள்ளிக்கூடச் சரித்திரப் பாடங்கள் படிப்பதானுல்தான் இளைஞர்களுக்குத் தேச பக்தியேற்படுவதேயில்லை யென்பார்.

எனக்கும் என் தமக்கைக்கும் சண்டை வராமலிருக்க என் தந்தை ஒரு வழியேற்படுத்தினர். பெரியவர்கள் சொல்வதை சிறியவர்கள் தட்டாமல் கேட்க வேண்டும். ஆனுல், சிறியவர்கள் கேட்கும் விளையாட்டுப் பொருள்களையோ தின்பண்டங்களையோ பெரியவர்கள் கொடுத்து விட வேண்டும்.

எனக்குக் கிட்டத்தட்ட ஆறுவயதாக இருக்கும் போது நானும் என் தாயாரும் என் தாயின் பிறந்தகமான கடையத்துக்குப் போயிருந்தோம், அங்கு என் தாயாரின் சிறிய தந்தையார் (போலீஸ் வேலையாயிருந்து என் தந்தையின் தேசபக்தியின் நிமித்தம் வேலையை ராஜிநாமாச் செய்தவர்) இருந்தார். எனக்கு சாப்பிடும் போதும் தூங்கு முன்பும் எப்பொழுதும் அப்பா கதை சொல்வது வழக்கம். அந்த முறைப்படி கடையத்தில் என் பாட்டனர் கதைகள் சொல்லுவார். குரங்குக் கதை, யானைக்கதையெனப் பல கதைகள் ஆனுல் அவை யெனக்குப் போதிய திருப்தி அளிக்காது. வீரசிவாஜி, ராணி லட்சுமி பாய் முதலிய கதைகளை என் தந்தை எனக்குக் கொஞ்ச நாட்களுக்கு முன்புதான் சொல்லியிருந்தார். எனவே சரித்திர சம்பந்தமான கதைகள் சொல்லும்படி கேட்பேன். அது அவரால் கூடவில்லை. ஆகையினுல் அவர் புதியதொரு விளையாட்டு ஏற்படுத்திக் கொடுத்தார். அதில் நான்தான் ராணி (ஜான்ஸி ராணியைப் போல) அவர் தாம் என்னுடைய சைனியம். கிராமத்திலுள்ள குழந்தைகள் எங்களுடன் விளையாட வருவார்கள்—அவர்கள் எதிரிகள்; போர் தொடங்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கும். ஒவ்வொரு குழந்தையாகத் தூக்கித் திண்ணையில் ஏற்றிச் சிறை செய்த பிறகு, வெற்றிகரமாக விளையாட்டு முடிவடையும்.

என் சிறிய பாட்டனார் மிகுந்த பலசாலி. 'வள்ளி வாண தீர்த்தம் ஆடியது' என்ற கதையில் என் தந்தை அவரைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார். உணவில் மிக்க விருப்பமுள்ளவர். என் தந்தை சொற்ப ஆகாரமே உண்பதைக் கண்டு பழகியிருந்த எனக்கு அவரது பெரிய சாப்பாடு ஆச்சரியத்தை உண்டாக்கும். சில சமயங்களில், அவர், 'ராணி அம்மா, சைன்யத்திற்குப் பசி வந்து விட்டது. உடனே தக்க ஆகாரம் தேடிக் கொடுக்காவிடில் எதிரிகள் பக்கம் சேர்ந்து விடும்' என்பார். என் மனம் பதறும். உடனே ஓடிப்போய் என் பாட்டியிடம் கேட்டுத் தின்பண்டங்கள் வாங்கி வந்து கொடுப்பேன். அவர் தம் பசி தீர்ந்ததாக ஒப்புக் கொண்ட பிறகு தான் என் மனம் ஆறுதலடையும்.

எனக்கு ஏழு வயதாக இருக்கும்போது காசியில் என் பெரிய தாயாருடனிருந்த என் தமக்கைக்கு வயது பனிரெண்டு ஆகிவிட்டபடியால் கல்யாணம் செய்யவேண்டுமென்று அவர்கள் பிரயத்தனம் செய்வதாகக் கடிதம் வந்தது. அத்தனை சிறுவயதில் விவாகம் செய்து கொடுக்க என் தந்தையார் ஒப்பவில்லை. அதனால் அவளைப் புதுச்சேரிக்குக் கொண்டு வந்து விடும்படி கடிதம் எழுதினார். அதுவரை தனியே ஒற்றைக்குழந்தையாக வளர்ந்த எனக்குத் தமக்கையின் வருகை பெரிதும் ஆறுதலாயிருந்தது.

என் தந்தைக்கு முன்கோபம் மிகவும் அதிகம். அது அவருடைய பல நல்ல குணங்களால் அத்தனை தூரம் அவருடன் பழகியவர்களுக்குக் கஷ்டமாகயிருந்ததில்லை. அவர் மனமறிந்து குற்றேவல்கள் செய்ய எனக்கொரு துணை வந்ததைக் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன். தவிர, சில சமயங்களில், என் தந்தையார் எங்களுக்குப் பலவிதமான பாடங்கள் கற்றுக் கொடுப்பார். ஆனால் அவைகளைத் தொடர்ச்சியாக நடத்துவதில்லை. வான சாஸ்திரம், யாப்பிலக்கணம் போன்ற பல வகைகள். அதில் கஷ்டமான கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய சமயத்தில் நான், தாகத்திற்குத் தண்ணீர்குடிக்கப் போவதாகச் சொல்லிவிட்டுப் போவேன். நான் கீழே போய்த் திரும்ப வருமுன் அக்கா அதற்கு பதில் சொல்லிவிடுவாள். பாடம் வெகு தூரம் முன்னால் போய்விடும். கலாசாலையில் படிக்கும் மாணவர்களுககுக் போதிப்பதைப் போலப் பிரசங்கம் செய்துகொணடே போவார். ஒரு வேளை, நான் போய் வந்ததை, 'அடிக்கடி கீழே போக வேண்டிய காரணம் என்ன? ஒருவேளை உடம்பு குணமில்லையோ? என்று கவலைப் பட ஆரம்பித்துவிடுவார். அதனால் சாக்குசொல்வதையும் கவனமாகச் சொல்ல வேண்டும்.

உலக மகாயுத்தத்தின் போது—அதில் முதல் இரண்டு வருஷங்கள் எனக்கு சரியாக ஞாபகமில்லை—தினந்தோறும் நானும் என் தமக்கையும் காலையில் எழுந்தவுடன் கடற்கரையிலுள்ள தபாலாபீசுக்குப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போய் தினசரிப் பத்திரிகைகள் வாங்கிவருவோம். அவை முக்கியமாக 'சுதேசமித்திரனும்' 'ஹிந்து' பத்திரிகையும். தபால்காரர் காலை ஒன்பது மணிக்குத்தான் எங்கள் தெருப்பக்கம் வருவார். நாங்கள் தகப்பனுர் எழுவதற்கு முன்பே போய் பத்திரிகை வாங்கிவந்து, அதில் முதல்பக்கம் கடைசிப்பக்கம் இவற்றை வேருக எடுத்துவிட்டுத் தயாராக வைப்போம். ஏனெனில், கொடூர வியாதிகளுக்கு மருந்துகள், தொத்துநோய்களின் பெயர்கள் இவற்றின் விளம்பரங்கள் அவர் கண்ணில் பட்டால், அன்று முழுவதும் மனவெறுப்புடன் இருப்பார். பெரிய காய்ச்சல் படுகாயம் இவற்றை அவர் அஞ்சுவதில்லை. ஆனுல் சிரங்கு, சருமநோய் முதலியவைகளைப் பற்றிக் கேட்டாலும் மனம் நடுங்குவார்.

ஒருசமயம், என் தந்தையின் ஆப்த சிநேகிதரில் ஒருவர் சிறையிலிருந்து வெளி வந்தவுடன் என் தந்தையைப் பார்ப்பதற்காகப் புதுவைக்கு வந்தார். வெகுநேரம் தங்கி உணவருந்திய பின் ஊருக்குத் திரும்பப் புறப்படுகையில் நான் வெளியிலிருந்து வந்தேன். என்னைத் தூக்கி மடிமீது வைத்துக்கொண்டு சில நேரம் வார்த்தையாடின பிறகு விடைபெற்றுச் சென்றுர். என் தந்தைக்கோ, துர்பாக்கியவசத்தால் கொடூர நோய்க்குள்ளான நண்பர் மனம் வருந்தும்படி 'குழந்தையைத் தொடக்கூடாது' என்று சொல்லவும் நாவெழவில்லை; அவர் குழந்தையைத் தொட்டெடுத்துக் கொள்வதும் மனம் பிடிக்கவில்லை. வெகு கஷ்டத்துடன் பொறுத்திருந்தாராம். நண்பர் சென்ற பிறகு, எனக்கு மண்ணெண்ணை ஸ்நானம் நடத்தினுர். ஆனுல், பிற்காலத்தில் நோயாளிகளைக் கண்டு வெறுப்படையும் தம் மனத்தைத் திருத்திக் கொள்வதற்காகச் சில நோய்கொண்ட சாமியார்களிடம் நெருங்கிப் பழகி அதை நிவர்த்திசெய்து கொண்டார்.

எனக்கு சுமார் ஐந்து அல்லது ஆறு வயதாகவிருக்கும் போது நாமும் அப்பாவைப் போல பாட்டுக் கட்ட வேண்டுமென்று ஆசை தோன்றிற்று. சரியாக எழுதப்படிக்கத் தெரியாது. ஆனுலும். ஓயாமல், கவிதைகளின் நடுவே பழகியதால், பாட்டுக் கட்டுவது அத்தனை சுலபமாகத் தோன்றியது. கீழ்க் கண்ட பாடலை என் தாயிடம் பாடிக் காண்பித்தேன்.

பாட்டு :

மாணிக்க மேடையில் மான் விளையாடையில்
—சகியே
நாமிருவரும் செல்வோமே !

குயில்கள் மயில்கள் எல்லாம் குடியிருக்கும்
சோலையில்

2

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மகிழ்ந்து நாமிருவரும் மலர் கொய்யப்
போவோம்.

ஆண்களில்லாக் காட்டில் பெண்கள் அரசாட்சி
யில்—சகியே

நாமிருவரும் செல்வோமே!

மற்றொரு நாள் காலை 'பாப்பா நீயும் நானும் சேர்ந்து ஒரு பாட்டு எழுதுவோம்' என்றார். 'சரி' யென்று எங்கள் வீட்டு மாடியில் போய் உட்கார்ந்தோம். விஷயம் பாப்பா சொல்ல வேண்டியது. அந்தப் பாட்டுத் தான் 'காலைப் பொழுது' என்ற பாடல் தவறுதலாக 'காதற் பாட்டுக்கள் என்ற தலைப்புடன் வெளியிடப்பட்டிருக்கிறது. என் தந்தையின் கையெழுத்துப் பிரதியில் 'சகுந்தலா பாப்பாவும் சுப்பிரமணிய பாரதியும் எழுதியது' என எழுதப்பட்டிருக்கும் பாட்டின் இறுதியிலே, கண்டிருந்தோம். நாங்கள இதை', 'நாங்கள் இதைப் பாட்டிசைத்தோம்' என்று வருகின்ற வரிகளில் 'நாங்கள்' எனக் குறிப்பிட்டிருப்பது என்னையும் என் தந்தையுமாகும்.

குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் எழுத்துக் கூட்டி வார்த்தை சேர்க்கும் விளையாட்டைப் போல, ஒருநாள், என் தந்தை எங்களுக்கும் மற்றும் சில மாணவர்களுக்குமாகச் சேர்த்து, 'பாட்டுச் சேர்ப்பது, என்று ஒரு விளையாட்டுக் கற்றுக்கொடுத்தார். அதில் ஒவ்வொரு பதம் சொல்லுவோம். அவற்றை என் தந்தை வரிசைக் கிரமமாக அர்த்தம் தோன்றும்படி பாட்டிசைத்துத் தருவார். உதாரணமாக

முதல்வர் : சக்தியை
இரண்டாமவர் : கொண்டாடு
மூன்றாமவர் : தினந்தோறும்
அப்பா : 'சக்தியை நித்தமும் கொண்டாடு'
முதல்வர் : கவலையில்லாமல்
இரண்டாமவர் : சக்தியின் பாதங்களில்
மூன்றாமவர் : முத்துமாலைகள்
நான்காமவர் : ரத்தினஹாரங்கள்
ஐந்தாமவர் : வைத்துப் பணிந்திடு

பாட்டு

அப்பா :

சக்தியை நித்தமும் கொண்டாடு

சஞ்சலம் நீக்கி —சக்தியை

முத்து மாலைகள் ரத்னஹாரங்கள்

சக்தி பதத்தில் அணிந்து பணிந்திடு—சக்தியை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என் தந்தை, சங்கீதத்தில் மிக்க விருப்பமுள்ளவர். மகாவைத்தி நாதய்யர், பூச்சி அய்யங்கார் முதலிய மகாவித்வான்களின் கச்சேரி கள் பலமுறை கேட்டு மகிழ்ந்திருக்கிருராம். ஆனுல், அவர் புதுவை யில் அடைபட்டிருந்த நாளில் நல்ல சங்கீதம் கேட்பது மிக்க சிரம சாத்தியமான காரியம். யாராவது ஒரு தனவந்தரான செட்டியார் வீட்டில் கல்யாணம் நடக்கும். அப்பொழுது ஒரு பாட்டுக் கச்சேரியோ அல்லது கதா காலக்ஷேபமோ நடைபெறும். அவ்வளவுதான்.

புதுவையை அடுத்து ஒரு சிறிய ஊர். அதில் ஒரு பெருமாள் கோயிலுண்டு. அங்கு வருஷம் ஒரு முறை பத்து நாட்கள் திருவிழா நடைபெறும் அது மிக்க செல்வம்படைத்த கோயில். அதற்கு பொட்டுக்கட்டின தேவ தாசிகளின் எண்ணிக்கைஅதிகம். அநேகமாக உத்ஸவம் பத்துநாட்களிலும் பரதநாட்டியம் நடைபெறும்.

பரதநாட்டியத்தில் என் தந்தை மிக்க ஆவல் கொண்டவர். கோபாலக்ருஷ்ண பாரதியாரின் 'ஆனந்த நடனம்' என்ற பாடலை அவர் அடிக்கடி பாடிப் பரவசமடைவார். 'தகதக தக தகவென்ரு டேரமோ' முதலிய பாட்டுக்களில் அவர் மனத்தில் ததும்பிய நாட்டிய பரவசத்தின் மேன்மை வெளியாகின்றது. பரதநாட்டியக்கலை பற்றி அவர் கூறுவார்.

"பரதநாட்டியம்" என்ற மாபெருங்கலை, தற்காலம் தனித்து ஒதுக்கப்பட்ட ஒரு வகுப்பினரால் கைக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதனுல், அதன் மேன்மை சகலரும் கண்டு ஆனந்திக்கத்தக்கதாக இருந்தபோதிலும், நம்முள் நாமே சிறிது வெட்கத்துடன் மறைமுக மாக அனுபவிக்கவேண்டியதாக இருக்கிறது. அந்த தெய்வீகக்கலை யை நம் வீட்டில் தாய்மார்களும் சகோதரிகளும் நடத்திஞல், நாம் பகிரங்கமாகக் கண்டு ஆனந்திக்கலாம்" என்பார். அதைத் தாம் நடத்திக் காண்பிப்பதற்காகத் தம் மக்களுக்கே நாட்டியம் பயில்விக்க விரும்பிஞா. அவர் அதைச் செய்விக்க முடியவில்லை. தமக்கு இயற் கையில் அமைந்துள்ள சங்கீதஞானத்தை விருத்தி செய்து கொள் வதற்கு ஒரு வித்வானுடன் நெருங்கிப் பழகிப் பயிற்சிபெற அவருக்கு வசதியில்லை. தாமே தேடிக்கொண்ட சிறையில் பத்து வருஷங்கள் கட்டுண்டு கிடந்தாரல்லவா!

ஸ்ரீ.ஸி. ஆர். சீனிவாசய்யங்கார் தியாகராஜ கீர்த்தனங்களுக்கு ஸ்வரம் எழுதிய புத்தகம் ஒன்று அவரிடம் இருந்தது. அதை வைத்து தாமே பாடிக் கற்றுக்கொள்வார் 'நகுமோமு', 'மாருபல்க', நிதிசால ஸுகமா' முதலிய கீர்த்தனைகள் மீது அவருக்குள்ள பிரியம் அளவிட முடியாது. என் தந்தை தெலுங்கும் நன்ருகக் கற்றறிந்தார். அதஞல் அவ்வார்த்தைகளின் அர்த்தத்தை, அவை அமைந்துள்ள அழகை,

Forwarded with Compliments from THE DEPARTMENT OF CUL... GOVERNMENT OF I...

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவற்றில் ததும்பும் பாவத்தைச் சொல்லி இன்புறுவார். 'மாருபல்க' என்ற கீர்த்தனத்தின் மீது அவருக்குள்ள இன்ப மிகுதியை, அவர் தம் 'சந்திரிகையின் கதை' என்ற நவீனத்தில் கதாநாயகி விசாலாக்ஷி பாடுவதின்மூலம் காட்டியிருக்கிறார்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்' என்ற அவரது பாட்டின் உண்மையைத் தமிழ் மக்களுக்கு அறிவிக்கத் தமது வாழ்நாளை யெல்லாம் செலவிட்டார். தமிழைப் போன்ற உன்னத பாஷை வேறில்லை. பச்சைத் தமிழிலே நினை. ஆங்கிலத்தில் நினைத்துப் பின் மொழிபெயர்க்காதே', என்று தம்மிடம் வரும் நண்பர்களுக்குச் சொல்வார். தம்மையடுத்தோரும் தம் வீட்டிலுள்ளோரும் தமிழன்றி வேறு பாஷை பேச சம்மதிக்கமாட்டார். ஆனால், சங்கீதம் என்பது வேறு கலை. அதற்குப் பாஷை யென்ற கட்டுப்பாடு கிடையாதென்பதே அவர் அபிபபிராயம். உதாரணமாக, சங்கீத விஷயத்தைப் பற்றி, என் தந்தை தம் கட்டுரையொன்றில், தியாகப்பிரும்மம் தன் பாடல்களுக்கு அதன் கருத்துக்கிசைய அமைத்திருக்கும் இசை வல்லமையையும் பின்னாளில் ஏற்பட்ட தெலுங்குக் கீர்த்தனைகள் சில அவ்வாறு செய்யப்படாமல் முரணாகயிருப்பதையும குறிப்பிடுகிறார். 'தியாகய்யரின், 'நன்னு ப்ரோவ நீகு இந்த தாமஸமா' என்ற பாடலுக்கு இசை எத்தனை பொருத்தமாக அமைந்திருக்கிறது. ஆனால், பின்னாளில் பட்டணம் சுப்பிரமணியஅய்யர் இயற்றிய 'வரமுலொஸகி' என்ற பாடலில் வித்துவான், வரங்கொடுத்துக்காப்பது உனக்கு அரிதா' என்று கேட்கிறார். இசை சண்டைத் தாளம் போடுகிறது' என்பார்.

'ஸிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டி விளை யாடி வருவோம்'

என்ற பாடலைப்பற்றி நான் ஒருநாள் என் தந்தையிடம், 'ஏனப்பா தெலுங்கில் பாட வேண்டும்? நீதான் தமிழில் நல்ல நல்ல பாட்டுக்கள் உண்டாக்கியிருக்கிறாயே! அவற்றைப் பாடினால் என்ன?" என்று கேட்டேன். அவர் புன்சிரிப்புடன் பின்வருமாறு மறுமொழி கூறினார்:– 'பாப்பா, தமிழ்பாட்டும் பாடலாம்; ஹிந்துஸ்தானியிலும் பாடலாம். பெரிய பெரிய மகத்தான கவிகள் நம் தமிழ் நாட்டில் இருந்திருக்கிறார்கள். ஆனால் பாடுதற்குரிய முறையில் பாடலை இசையுடன் அமைத்து அதைச் சுவையுடன் பாடக்கூடிய சங்கீத வித்துவான்கள் நம் தமிழுலகில் அதிகம் இல்லை. சங்கீதத்தில் தெலுங்கு என்றும் உருது என்றும் வேற்றுமை கிடையாது. ஆங்கிலேயர் தேசாபிமானம் முற்றி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யவர்கள்: பாஷாபிமானத்திலும் கரை கடந்தவர்கள். ஆனுல், சங்கீதத்தில ஜெர்மன் சங்கீதமும் இத்தாலிய சங்கீதமும் உயர்ந்த தென்பதை அவர்கள் மறுப்பதில்லை. தவிர, வடதேசத்திலுள்ள அழகிய சிந்து நதியின் மீது, தென் தேசத்திலுள்ள அழகிய சேர நாட்டுப் பெண்களுடன் தமிழ் நாட்டினர்களாகிய நாம், சங்கீதத்துக் குகந்த அழகிய பாஷையான தெலுங்கில் பாடி மகிழ்வோம் என்றதின் கருத்து நம் இந்திய தேச முழுவதையும் ஒன்ருக்கும் நோக்கத்திஞல் தான்,' என்ருர். மேலும், சங்கீதத்துக்கு பாஷை இன்பம் உண்டே யல்லாது பாஷைக் கட்டுப்பாடு கிடையாது, எந்த பாஷையில் பாடினு லும் அதன் அர்த்த பாவம் வீணுகாமல் பாட வேண்டுமென்பதே அவர் அபிப்பிராயம்

'நான் படும்பாடு' என்ற ராமலிங்க ஸ்வாமிகளின் பாடலை கேதார கௌள ராகத்தில் அவர் அடிக்கடி பாடுவதைக் கேட்டிருக்கிறேன். குளிக்கும்போதும் சாப்பிடும் போதும் எப்பொழுதும் பாடிக்கொண்டே யிருப்பார். அவர் பாடக்கூடிய பாட்டுக்கள் எந்த பாஷையாக இருந்த போதிலும் அந்த பாஷைக்குரிய, அந்த பாட்டுக்குரிய அர்த்தம், பாவம் இவை ததும்பிநிற்கும்.

என் தந்தையாருக்கு 'குவளைக் கிருஷ்ணன்" என்ஞெரு சீடன் உண்டு. அவர் அதிகாலையில் எழுந்ததும், வைஷ்ணவ கோயில் பாணியில் 'திருவாய்மொழி' பாடுவார். கிருஷ்ணு, நீ காலையில் திரு வாய்மொழி பாடுவதில எனக்கு ஆக்ஷேபமிலலை, ஆனுல், ஏனடா, திருவாய் மொழி 'அழுகிருய்' என்று ஒருநாள் என் தநதை அவரைக் கோபித்தார். குவளைக்கிருஷ்ணன், உடனே 'ஸ்வாமி தாங்கள் திரு வாய்மொழி பாடவேண்டும்: நான் கேட்டு ஆனந்திக்க வேண்டும்,' என்ருர். என் தந்தைக்குத் திருவாய்மொழிப் பாடல்கள் பாடமில்லை! குவளைக்கிருஷ்ணன் எங்கோ போய் ஒரு பெரிய புஸ்தகம் கொணர்ந்து தந்தார். 'பொலிக பொலிக பொலிக; போயிற்று வல்லுயிர் சாபம் நலிவும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை, என்ற பாடல், மன்னு பெரும்புகழ் மாதவன் மா மணிவண்ணன் மணி முடி மைந்தன் என வரும் பாடலையும் அர்த்த பாவம் ததும்பும் நல்லிசையில் பாடிக் காண்பித்தார். குவளைக்கருஷ் ணனுக்கு இதைக் கேட்டதும் உண்டான மகிழ்ச்சிக்கும் திருப்திக்கும் அளவேயில்லை. உடனே, என் தந்தையைப் பார்தது, 'ஸ்வாமி' தாங்கள் சொல்லுகிறபடி தான் திருவாய்மொழியைப் பாட வேண்டும், என்ருர்.

ராமபக்தியில் லயித்திருந்த தியாகப்பிரும்மம், அதற்கேற்ப வித விதமாக, அணியணியாகக் கீர்த்தனங்களைப் பாடினுர். என் தந்தை யோ தேசபக்தி என்பதையே மறந்து பல்லாண்டுகள் வாழ்ந்துவந்த ஒருசமுதாயத்தில் நம் தாய்நாடு நமக்கு உரிமை எனும் உணர்ச்சி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மக்களிடையே புதிதாக வளர்ந்து வரும் ஒருகாலத்தில் ஜனங்களை உற்சாகமூட்டும் பாடல்கள், அவர்களை மேலும் தேச சேவையில் ஈடு படத் தூண்டும் பாடல்கள் இயற்றினர். அதற்கு அவர் பழைய முறைப் படி வழக்கத்திலுள்ள வர்ண மெட்டுகளை அமைக்க ஒப்பவில்லை. உதாரணமாக 'என்று தணியுமிந்த சுதந்திர தாகம்' என்ற பாடலை, என் தந்தை பாடும் பொழுது நேரில் கேட்டிருப்பவர்கள் அதை நடைமுறையில் கமாஸ்ராகத்தில் பல சங்கதிகளுடன் பாடுவதில் அதன் சுவை அதன் உருக்கம் எத்தனை குறைந்துள்ளது என்பதை அறிவார்கள். என் தந்தை தமது பாடல்கள் முழுவதையும் ஸ்வரப் படுத்தி எளிதில் பாடுவதற்குரியதாக ஒரு புத்தகம் வெளியிட ஆசைப்பட்டார். ஆனால் அக்காலத்துத் தமிழுலகம் அவரது பாடல் களைப் பாடுவது மட்டுமல்ல மறைவாக வீட்டினுள் இருந்து படிப்பதற் கே போதிய துணிவற்றதாக இருந்தது

என் தந்தை பாட்டு இயற்றுங்காலையில் அதற்குராகம், ஒரு மெட்டு அமைக்க ஒரு உதவியும் நாடுவதில்லை. ஏதேனும் ஒரு மெட்டில் தானே பாடிப்பார்ப்பார். அந்த மெட்டு அவருக்குப் பிடித்திருந்தால் அந்த இசை எந்த ராக ஸ்வரங்களுக்குப் பொருத்தமாக இருக்கின் றதோ அந்த ராகத்தின் பெயர் மட்டும் எழுதி வைத்திருப்பார். தாள கதி தானே வந்து அமைந்து கொள்ளும்.

ஒரு சமயம் ரசிகமணி டி.கே.சி. அவர்கள் குற்றலக் குறவஞ்சி யைப் பற்றிக் கூறும்போது, 'தமிழ்ப் பாடல்கள் அவற்றின் இசை அவற்றின் அமைப்பு தாளத்துக்கு ஒப்ப தாமே அமைந்துள்ளன' என்றார். அதன் உண்மையை 'பாரதி' பாடல்களில் சுலபமாகக் காணலாம்.

தாளங்கள் எட்டு எண்ணிக்கை, நான்கு எண்ணிக்கை, மூன்று எண்ணிக்கை அல்லது இரண்டு எண்ணிக்கை இவைகள் முறையே அந்தப் பண்ணின் பாங்குக்கு ஒப்ப அமையும். எனவே, காம்போதி நாட்டைக்குறிஞ்சி எனப்போடப்பட்டிருக்கும் பாட்டுக்களின் ஸ்வரங் கள் மட்டும் அவைகளுக்கு உரியன. பாடும் மெட்டு நடைமுறைப் பழக்கத்தில் உள்ளது போன்றதல்ல.

தாம் எழுதிய பாடல்களை என் தந்தை தம் ஆப்த நண்பர்கள் சிலரிடம் பாடிக்காண்பிப்பார். ஸ்ரீ வ. வே சு. அய்யர் கண்ணன் பாட்டுக்கு எழுதித்தந்துள்ள முகவுரையில், 'கற்பனை பாவத்தோடும், சிருஷ்டி உற்சாகத்தோடும் ஆசிரியர் தம்பாடல்களைப் பாடும்போது கேட்டிருப்பவர்கள் அவற்றை அக்ஷரலக்ஷம் பெறுமானதாக மதிப்பர்,' என்றார். என்தந்தை தம் குயில் பாட்டில் 'காதல் காதல் காதல்' என்ற பாட்டைக் குயில் பாடியதாகக் கூறும்போது, 'அந்தப் பொருளை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவனிக்கு உரைத்திடுவேன் ; விந்தைக் குரலுக்கு மேதிநியீர் என் செய்வேன்' என்றார். ஆனால், அந்த அவரது கற்பனைக்குயில் காதலிக்குள்ள குரலினிமை ஒரு வேளை அவருக்கு இல்லாமல் போயிருக்கலாம். அவரது கம்பீரமான குரலினிமையை — அந்த அற்புதமான உச்சரிப்பை...ஒரு கிராமபோன் இசைத்தட்டு மூலமாக பல நாள் கேட்டு அனுபவிக்கும் பாக்கியம் நானும் எங்கள் குடும்பத்தாரும்—ஏன்? தமிழ் நாட்டாருமே - பெறவில்லை !

'பெண்கல்வி,' 'பெண்கள் முன்னேற்றம்,' 'பெண்விடுதலை' இவற்றில் தன் கருத்தை என் தந்தை பல கட்டுரைகள், கவிதைகள் மூலம் வெளியிட்டுள்ளார். தேசபக்தி, தமிழ் வளர்ச்சி இவற்றையே தம் வாழ்க்கையின் இலட்சியமாகக் கருதி வேறெதிலும் மனத்தைச் செலுத்தாத என் தந்தைக்குத் தம் மகள்—காசியில் என் பெரிய தாயாரால் வளர்க்கப்பட்டிருந்த என் சகோதரி தங்கம்மாள்—புதுவைக்குத் தன் பனிரெண்டாம் பிராயத்தில் திரும்ப வந்தவுடன் அவளுக்கு விவாகம் செய்விக்க பந்துக்கள் முயற்சிசெய்யத் தொடங்கியதும், பால்ய விவாகத்தை வெறுத்துவந்த என் தந்தைக்கு, நம் நாட்டில் பெண்கள் நிலைமையும், அதை மாற்றியமைப்பதின் அவசியமும் தோன்றிற்று. எங்கள் வீட்டில் ஒரு சிறு மாதர் சங்கம் ஏற்படுத்தினோம். சுமார்முப்பது வருஷங்களுக்கு முன் அச்சபைக்கு, ஒன்றிரண்டு பெண்கள்-பெண்கள் விடுதலையில் பேரவாக் கொண்டவர்கள். ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை' என்றெண்ணியிருந்த தங்கள் உறவினர் அனுமதியின்றி வருவதும் உண்டு. 'பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்' என்ற பாடலை அவர்கள் பாடி மகிழும் காட்சி என்னால் என்றும் மறக்கவியலாது, அதுபோல, ஆண்மக்களும் பெண்கள் முன்னேற்றத்தில் ஊக்கம் செலுத்த வேண்டுமென அவர்களுக்கு உத்ஸாக முண்டாக்க ஒரு பாடல் எழுதினார். 'பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா' என்ற பாடல் அவர்களுக்காக எழுதப்பட்டது.

'மானத்தைக் காக்க ஓர் நாலுமுழத்துணி வாங்கித்தரவேண்டும். தானத்துக்குச் சில வேட்டிகள் வாங்கித்தரவும் கடனுண்டே', என என் தந்தை கண்ணன்பாட்டில், 'ஆண்டை' யிடம் முறையிடுகிறார். தன்னிடம் யாசிப்பவர்களுக்குத் தன்வசமுள்ள எதையும் கொடுக்க அவர் பின்வாங்கமாட்டார். தனக்குச் சாப்பிட அன்னமில்லாவிடினும் பொருட்படுத்தமாட்டார். பிச்சையெனக் கேட்போருக்குக் கொடுக்க அரிசி இல்லையென்று நினைத்தே வருந்துவார். அவரது மனநிலைக்கு ஒப்பவே அவரது நண்பர்கள் அவர் கேளாமலே தேவையான பொருளைக் கொடுத்து உதவுவார்கள். ஒரு தீபாவளியன்று நடந்த சம்பவம் இன்று எனக்கு ஞாபகம்வருகிறது,

Forwarded With Compliments From
THE DEPARTMENT OF CULTURE
GOVERNMENT OF INDIA.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதல் நாள், ஜவுளிக்கடை சொந்தக்காரரான நண்பர் ஒருவர், வழக்கம் போல, என் தந்தைக்கு வேஷ்டிகள், எனக்குப் பாவாடை சட்டை, என் தாயாருக்குப் புடவை இவற்றை இனமாக அனுப்பி வைத்தார். அன்பிற் சிறந்த சீடர் பலர், எனக்கு தேவைக்கு மிஞ்சி யே, பட்டாஸ், மத்தாப்பு, வாணவகைகளும் மற்றும் பூ, வெற்றிலை, பழங்கள் யாவும் கொணர்ந்து தந்தார்கள. தீபாவளியன்று இரவு, நாங்கள் குதூகலமாக விளையாடிவிட்டுத் தூங்கப்போய் விட்டோம்.

என் தந்தைமட்டும், ஆழ்ந்த யோசனையுடன் உட்கார்ந்திருந்தார் கவிதை எழுத யோசிப்பதானால் அவர் அங்குமிங்கும் உலாவுவார். பிறகு எழுதத் தொடங்கினால். கை சளைக்காமல் எழுதிக் குவிப்பார். எனவே அவர் யோசனையுடன் உட்கார்ந்திருப்பதிலிருந்தே அவர். எதையோ நினைத்துக் கவலைப்படுகிறார் என்று அறியலாம்.

நடுநிசி. இரண்டு நண்பர்கள் வந்து கதவைத் தட்டினார்களாம் என் தந்தை தாமே போய்க் கதவைத் திறந்தார். வந்தவர்களில் ஒருவர், ஓரணாவும் இரண்டணாவுமாக மாற்றிப்பணச்சுருள்களை என். தந்தையின் பாதத்தில் வைத்து நமஸ்கரித்தார். அவர் வியப்புடன் "நான் பணம் வேண்டுமென்று யாரிடமும் சொல்லவில்லையே! நீங்கள் எவ்வண்ணம் என் உள்ளக் கருத்தையுணர்ந்து சில்லரை மாற்றிக் கொணர்ந்தீர்கள்?" என்று கேட்டாராம். வந்தவர்கள் பணக்காரர்கள் அல்ல, சாதாரணக் குடும்பத்தில் பிறந்து. துணி நெய்யும் தொழிலாளிகள். அந்த அன்பர்களில் ஒருவர் பின் வருமாறு பதிலளித்தாராம்.

"சுவாமி நாங்கள் யாவரும் சாப்பிட்டுப் படுத்து நித்திரைபோய் விட்டோம் என் கனவில், மாதா பராசக்தி காளிதேவி தோன்றி, 'அடே, உத்திராவதி! எழுந்திரு. என் பக்தன் பாரதி நாளைக் காலையில் தன்னைக்காணவரும் ஏவலர் தொழிலாளிகள், நண்பர்களுக்குப் பரிசளிக்கக் கையில் காசில்லாமல் நொந்து மனம் வருந்துகிறான். உடனே உன் கையிலுள்ள பணத்தைச் சில்லரையாக மாற்றி எடுத்துக் கொண்டுபோய்க் கொடு" என்று சொன்னாள். நான் உடனே எழுந்து என் கையிலிருந்த ரூபாய் பத்துக்கும், காசுக்கடை செட்டியாரை எழுப்பி, சில்லரை மாற்றிக்கொண்டு, தனியேவரப் பயமாக இருந்தால் என் சிநேகிதனையும் உடனழைத்துக் கொண்டு வந்தேன்." என்றார்.

தமக்குத் தேவையான துணி முதலியன இருந்தும் மறுநாள் காலையில் தன்னைக் காணவரும் வேலையாட்கள். ஏழைகள் முதலானவர்களுக்குக் கொடுக்க ஓர் பைசாக்கூட இல்லாததை நினைத்து, எங்கு யாரிடம் போய்க் கடன் வாங்கி வருவது என்று என் தந்தை வருத்தத்துடன் யோசித்துக் கொண்டிருந்தாராம். பராசக்தியருளால் அந்தத் தீபாவளி மனக்கவலையின்றிக் கொண்டாடப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"கொடிய வெந்நாக பாசத்தை மாற்ற
மூலிகை கொணர்ந்தவ னென்கோ?
இடிமின்னல் காக்கும் குடை செய்தா னென்கோ?
என் சொலிப் புகழ்வதிங் குனையே!"

என்று மகாத்மா காந்தியடிகள் அஹமதாபாத் காங்கிரஸில் தலைமை வகித்து ஒத்துழையாமை இயக்கத்தை நிலை நிறுத்த வந்தபோது, என் தந்தையார் அவருக்கு வாழ்த்துப் பாடினர்.

பல வருஷங்களுக்கு முன், ஏழை இந்தியர் துயரம் தீர்க்க, மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில சத்தியாக்கிரகம் செய்த போது, புதுவையில் காவலில் கட்டுண்ட என் தந்தை தாம் எவ்வாறேனும் அவ்வியக்கத்திற்கு உதவி செய்ய வேண்டுமென்று தீவிர முயற்சி செய்தார். தர்ம சிந்தனையுள்ள ஓர் அம்மையார் ரூபாய் நூறு என் தந்தைக்கு அளித்தார். அதைக் கொண்டு 'மாதா மணிவாசகம்' என்ற பெயருடன் தமது பாடல்கள் சிலவற்றை என் தந்தையார் பதிப்பித்து அதை விற்று வந்த பணம் முழுவதையும் தென்னாப்பிரிக்காவுக்கு அனுப்பின". பல உண்டியல்கள் தயாரித்து, வீடுதோறும் சென்று, பணம் சேகரித்து வருமாறு நாங்களும் எங்கள் நண்பர்களும் போவோம். சிறிய ஊரான புதுவையில், சர்க்கார் எதிர்ப்பிற்கு உட்பட்டுக் கிடந்த என் தந்தை அப்போது வேறொன்றும் செய்ய முடியாதவராகவே இருந்தார்.

மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தைப் போலவே, அவரது அஹிம்ஸா தர்மமும், என் தந்தைக்கும அவர் பால் மிக்க பக்தி செலுத்தக் காரணமாய் இருந்தது. சுதேசியம் அவர் மனதில் ஊன்றிய நாள் முதல் என் தந்தை அந்நிய நாட்டு ஆடைகளை அணிய மாட்டார். கையில் பணமில்லாமல் பெரிதும் வறுமை வாய்ப்பட்டுக் கஷ்டப்படும் நாளில் கூட நம நாட்டில் செய்த பட்டுத் துணிகளையே பெரும்பாலும் வாங்கி உபயோகிப்பார்.

பின்னொரு நாள், திடீரென அவருக்குத் தான் செய்வது பாவம் எனத் தோன்றியதாம் 'ஒரு மனிதன் தான் அழகாக ஆடையணியும் நிமித்தம் பல்லாயிரக்கணக்கான பட்டுப்பூச்சிகளைக் கொல்வதற்குக் காரணமாகிறான். மனமறிய பல பூச்சிகளை வளர்த்து, அவற்றை வதை செய்து, அந்த நூலினால் செய்யபபடும் ஆடைகளையணிவது எத்தனை கொடூரமான செய்கை. அதனால் நான் இனி பட்டு உபயோகிப்பதில்லை,' என்று மில் நூலால் செய்யப்பட்ட நம் நாட்டுத் துணிகளையே அணிந்து வந்தார். இந்த நிலைமையில் தோன்றிய மகாத்மா காந்தியின் நூல் நூற்றல், கதர் உற்பத்தி இவை அவருக்குச் சொல்லொணாத ஆனந்தமளித்தன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என் தந்தை பொய் சொல்பவர்களைக் காணவும் சகிக்க மாட்டார். எல்லாக் குற்றங்களையும் விட அது பெரியது என்பார். ஒரு நாள் மாலையில் பத்திரிகைக்கு எழுதிய முக்கியமான கட்டுரை ஒன்றைத் தபாலில் சேர்க்கும்படி என் தந்தை எங்களிடம் கொடுத்தார் அன்று எங்கள் சிநேகிதர்களும் சில குழந்தைகளும் வீட்டுக்கு வந்தார்கள். அவர்களுடன் சேர்ந்து எல்லோருமாகக் கடற்கரைக்குப் போனோம். அன்று மௌன விரதமாகையால் என் தந்தை எங்களுடன் வரவில்லை. கடற்கரையில்தான் தபாலாபீஸ். இரவு எட்டு மணிக்கு வீடு திரும்பும் போது தான் எங்களுக்குக் கட்டுரை ஞாபகம் வந்தது. அதைக் கொண்டுவர மறந்துவிட்டோம்; தந்தையின் மனம் வருந்தாதிருக்கும் படி அவர்தம் கோபத்துக்கு அஞ்சி, (அவருக்கு முன்கோபம் அதிகம் பின்னால் தானே மிக்க வருத்தப்படுவார்) 'கடிதத்தைத் தபாலில் சேர்த்தாய் விட்டது' என்று பொய் சொல்லிவிட்டு மறுநாள் காலையில் தபாலில் சேர்த்து விடலாம் என்று நானும் என் தமக்கையும் தீர்மானம் செய்து கொண்டு வீட்டுக்கு வந்தோம் வாசற் கதவைத் திறப்பதற்காக தந்தையார் கீழே வந்தார். அவர் தம் களங்கமற்ற கம்பீரமான முகத்தைப் பார்த்தவுடனேயே, எங்களுக்கு அவரிடம் அந்த சிறு பொய்கூட சொல்ல மனம் வரவில்லை. அவரது மாசற்ற விழிகள் எங்களை உண்மை கூறும்படி வற்புறுத்தின. 'அப்பா நாங்கள் தபாலாபீசுக்குப் போக மறந்து விட்டோம், நாளை காலையில் தவறாமல் முதல் கட்டில் சேரும்படி ஆறு மணிக்கே நானே போய் போட்டு விடுகிறேன் மன்னிக்க வேண்டும்' என்று நான் சொன்னேன். (எங்கள் வீட்டில் பெரியவர்களாயினும் சிறியவர்களாயினும் யாரா யிருந்தாலும் தப்பிதம் செய்தால் உடனே மன்னிப்புக் கேட்க வேண்டும். அது எத்தகைய குற்றமானாலும் மன்னிப்புக் கேட்டால் கட்டாயம் வழங்கப்படும்). என் தந்தை, 'நானே உங்களிடம் சொல்ல மறந்து போனேன். அதில் ஒரு திருத்தம் செய்ய வேண்டியிருந்தது. நாளை அனுப்பினால் போதும்.' என்று ஒரு கடிதத்தில் எழுதிக் காண்பித்தார். அவரிடம் நாங்கள் பொய் சொல்ல நினைத்ததை இன்று நினைத்தாலே என் மனம் பதறுகிறது. தெரியாமல் செய்த குற்றத் திற்கு அது எத்தனை பெரிய தவறாக இருந்தாலும் மன்னிப்பு உண்டு. பொய் சொல்லுதல். ஏமாற்றுதல் இவற்றை என் தந்தை ஒரு நாளும் மன்னிக்க மாட்டார்.

'பொய் சொல்லக்கூடாது பாப்பா—என்றும்
புறஞ் சொல்லலாகாது பாப்பா ;
தெய்வம் நமக்குத் துணை பாப்பா—ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா.'

என்ற பாடல் என் மனத்தை விட்டு அகலவேயில்லை. ஒரு சிறு பிழை செய்யும் போதும் என் தந்தையின் முகம், அவர் தம் வீர விழிகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என் மனக்கண் முன் தோன்றும்.

எனக்கு ஞாபகம் தெரிந்த நாள் தொட்டு, என் தந்தை வறுமையால் பீடிக்கப்பட்டு இருந்தார். ஆனால், மிக்க கஷ்டமான சில சமயங்கள் தவிர, மற்ற நேரங்களில் அவர் அதைப்பற்றி நினைப்பதுகூடக் கிடையாது. எப்பொழுதும் உற்சாகமாகப் பாடிக்கொண்டுதானிருப்பார். ஒரு நாள் மிகக் கஷ்டமான நிலையில், அவர் தம் மனோநிலையை ஒப்பிட ஓர் ராஜபுத்திர அரசனின் கதையை எங்களுக்குச் சொன்னார். அக்பரால் ராஜ்யத்தை விட்டுத் துரத்தப்பட்ட ராஜபுத்திர அரசன் ஒருவன் தன் மனைவியுடனும் குழந்தையுடனும் காட்டில் ஒளிந்து, மறைந்து, அருகிலுள்ள கிராமத்திற்குச் சென்று, அங்கிருந்து சிறிது தானியம் கொணர்ந்து அதை மூன்று ரொட்டிகளாகச் செய்து ஆளுக்கு ஒன்றாகச் சாப்பிட்டார்களாம். ஒரு நாள் பகல், அரசனும் மனைவியும் ரொட்டிகளைத் தின்றுவிட்டனர். குழந்தை ஓர் மரத்தடியில் உட்கார்ந்து ரொட்டியைக் கையில் வைத்துக்கொண்டு மெதுவாகத் தின்று கொண்டிருந்தது. அப்போது ஓர் பறவை குழந்தை கையிலிருந்த ரொட்டியைக் கௌவிக்கொண்டு போய்விட்டது. குழந்தை அழத் தொடங்கிற்று. அதைச் சமாதானம் செய்ய, அதன் பசியைத் தீர்க்க ஒரு வழியுமில்லை. வணங்கா முடி மன்னன் ராஜபுத்திர அரசனின் மனம் இடிந்துவிட்டது. அக்பரின் ஆளுகைக்குட்பட்டுச் சிற்றரசனாக சம்மதிப்பதாகக் கடிதமெழுதி ஓர் குடியானவன் மூலமாக அக்பர் அரண்மனைக்கு அனுப்பினானாம்!

புதுவையில் பாரதியார்

'காலை யிளம் பரிதி வீசும் கதிர்களிலே
நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்
மோகனமாஞ் சோதி பொருந்தி முறைதவறு
வேகத் திரைகளினால் வேதப் பொருள்பாடி
வந்து தழுவும் வளஞ்சார் கரையுடைய
செந்தமிழ்த் தென்புதுவை என்னும் திருநகரின்
மேற்கே, சிறு தொலையில் மேவுமொரு மாஞ்சோலை'

என்று 'குயில் பாட்'டில் புதுவை நகரின் சௌந்தரியத்தை தந்தையார் வர்ணித்திருக்கிறார். ஆனாலும், அத்தகைய புதுவை நகரை விட்டு வெளிவரக் கூடாதென்ற அரசாங்க ஆக்ஞையினால் கூண்டில் அடைபட்ட சிங்கம் போல என் தந்தை தவித்து மறுகினார்.

' இன்று கட்டுண்டோம், பொறுத்திருப்போம்; காலம் மாறும்;
தருமத்தை யப்போது வெல்லக் காண்போம்,
தனுவுண்டு, காண்டிபம் அதன்பேர்,' என்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு பாஞ்சாலி சபதத்தில் அர்ச்சுனன் கூறியதாக என் தந்தை யார் எழுதியுள்ள பாடலைப்பற்றி, ஸ்ரீ வ. வே. சு. ஐயர் தம் முகவுரையில் பரவசத்துடன் எழுதியிருப்பதைக் காணலாம். அந்தப் ஓரடிப் பாடலுக்கு அவர் அத்தனை பெரிய மதிப்பு அளித்ததன் காரணம் என் தந்தையின் பாவன்மைக்காக மட்டுமல்ல. புதுவையில் அவர்கள் அடைபட்டுக் கிடந்தபோது. அந்தப் பாட்டு அவர்களுக்கு எவ்வளவு பொருத்தமாயிருந்தது என்பதுதான். அந்தப் பாடலை ஸ்ரீ அய்யர் தனிமையில் தமக்குள், பாடிப்பாடி மகிழ்வதை நான் கேட்டிருக்கிறேன்.

'ஸ்வாமி! சாம்பாரும் சாதமும் சாப்பிட்டுக்கொண்டு எத்தனை நாள் இவ்வாறு அடைந்து கிடப்போம்,' என்று மிக்க மனவெறுப்புடன ஸ்ரீ ஐயர் ஒரு நாள் தந்தையிடம் கேட்டார். அதற்கு மறுமொழியாக தாம் புதிதாய் அப்பொழுதுதான் எழுதி முடித்திருந்த பாஞ்சாலி சபதத்தில் அர்ஜுனன் கூறிய மேற்கண்ட பாடலை என் தந்தை வீராவேசத்துடன் பாடினர்.

புதுச்சேரியில் அஞ்ஞாதவாசம் செய்த தேசபக்தர்களுக்கு அவ்வூரார் 'சுதேசிகள்' எனப் பெயரிட்டு வழங்கினார்கள். அங்கு குடும்பத்தோடு வசித்து வந்த சுதேசிகள் மூவர் மட்டும் தான். என் தந்தை, ஸ்ரீ வ, வே. சு. அய்யர், ஸ்ரீ சீனிவாசாச்சாரியார்.

ஸ்ரீ ஆச்சாரியார் தம் வாழ்நாளில் மகத்தான தியாகங்கள் செய்து. பெருந்துன்பங்களையும் இம்சைகளையும் பொறுமையுடன் தாங்கித் தம்புகழ் பிறர் அறியாமல் வாழ்ந்த தேசபக்தர்களுள் ஒருவர். செல்வத்தில் பிறந்து செல்வத்திலே வளர்ந்த ஸ்ரீ ஆச்சாரியார் புதுவையில் வறுமைவாய்ப்பட்டு குறுகிய இடத்தில் தம் குடும்பத்தாரோடு வசிக்க நேர்ந்த போது சிறிதும் மனக்கலக்கமில்லாமல் தம் நேரத்தை, மேன்மேலும் அறிவை வளர்க்கக்கூடிய படிப்பிலும், தற்காலச் செலவிற்குத் தேவையான பணமளிக்கக்கூடிய வியாபார விஷயத்திலும் செலவிட்டார்.

திடகாத்திர சரீரமும். எதற்கும் அஞ்சாத வீர நெஞ்சமும் கொண்ட ஸ்ரீ ஐயர், அந்த பொறுத்தற்கரிய தன்மையை திருக்குறள் கம்பராமாயணம் பாலகாண்டம் இவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் முயற்சியிலே கழித்தார்.

என் தந்தையோ தமது தளைகளை உதறியெறிந்து வெளிவரப் பலமுறை முயன்றும், கைகூடாமல், கட்டுப்பட்ட தம் வாழ்நாளைக் கவிதை எழுதுவதிலும், இயற்கை அழகைக் கண்டு களிப்பதிலும் கடத்தினர். தொலைக்க முடியாத பெருஞ்சுமையாகத் தோன்றும் சில

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாட்களை தம் குயில் பாட்டில் கூறியுள்ள மாந்தோப்பிற்குச் சென்று கழிப்பதுண்டு. மாந்தோப்பிற்குப் பக்கத்தில் குளங்கள் இருக்கும். புதுவை வாசிகள் அவற்றை 'மடுக்கள்' என்பர். காலையிலெழுந்து கட்டுச்சாதம் எடுத்துக்கொண்டு மடுவுக்குப் போவோம். நாள் முழுவதையும் அங்கு சந்தோஷமாகப் பாடுவதிலும், விளையாட்டிலும் கழிப்போம். அருகேயுள்ள சேரியிலிருந்து என் தந்தையின் ஆதி திராவிட நண்பர்கள் இளநீரும் மாங்கனியும் கொணர்ந்து தருவார்கள். அதிக மனித சஞ்சாரமில்லாத சோலைகள், குளங்கள், பறவையினங்கள் ஆகியவை என் தந்தைக்குத் தம் கஷ்ட நிலையை மறந்து, ஏகாந்தமாக மனச்சாந்தியுடன் பாட்டுக்கள், கதைகள் எழுத ஏற்ற துணையாக இருந்தன.

'தனிமை கண்டதுண்டு—அதிலே
சாரமிருக்குதம்மா'

என்ற பாடல் அதுமாதிரியான சந்தர்ப்பம் ஒன்றில்தான் எழுதப்பட்டது.

ஒரு நாள் தந்தை காலையில் வெளியில் போனவர் சாயங்காலம் வரை திரும்பிவரவில்லை. எங்கள் வீட்டில், என் தந்தையாரின் சாப்பாட்டுக்கு ஒரு குறிப்பிட்ட நேரம் கிடையாது. அதனால் நாங்கள் சாப்பிட்டு முடிந்ததும் இரவு அவருக்குத் தேவையான சாப்பாட்டைத் தயாராக மாடிமீது கொணர்ந்து வைத்துவிடுவோம். அன்றிரவு அவர் திரும்பிவந்தபோது அன்று தம் மனம்பட்ட பாட்டை ஒரு பாட்டாக எழுதிக்கொணர்ந்தார். 'கண்ணன் என் காதலன்' என்ற தலைப்பில் வரும்,

'தூண்டிற் புழுவினைப் போல்—வெளியே
சுடர் விளக்கினைப் போல்
நீண்ட பொழுதாக—எனது
நெஞ்சம் துடிக்குதடி.'

என்னும் நாலுவரிதான் அந்தப்பாட்டு. இதை எழுதி முடித்ததும் அவர் மனம் சோர்வு நீங்கி உற்சாகமடைந்து விட்டதாம். பின்பு பாடல் முழுவதையும் தம் காதலனை கண்ணனை நினைந்துருகும் காதலியின் பாட்டாக எழுதினர்.

புயற் காற்று

கார்த்திகை மாதம். புதுவையில் நாங்கள் குடியிருந்த விளக்கெண்ணெய் செட்டியார் வீடு மிகப் பழைய வீடு. அதை முழுதும் பிரித்துக்கட்டிச் செப்பனிட்டாலன்றி குடி இருக்க வசதியில்லாத நிலைமையில் இருந்தது. அதற்கு நேர் எதிர் வீடு நல்ல கெட்டி மச்சு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வீடு. அதில் ஓர் போலீஸ் உத்தியோகஸ்தர் குடிவரப்போவதாகப் பிரஸ்தாபம் ஏற்பட்டது. என் தந்தைக்கு அது மிக மனக்கஷ்டத்தை உண்டு பண்ணியது. போலீஸ் உத்தியோகஸ்தர் குடிவராமல் தடுக்க வேண்டுமானால் நாங்களே அந்த வீட்டுக்குக் குடிபோக வேண்டும். ஆனால் செலவுக்கோ போதுமான பணம் கிடையாது. எதிர் வீட்டு வாடகை மாதம் பனிரெண்டு ரூபாய். அப்பாவுக்கு மாத வருமானம் சுதேசமித்திரனிலிருந்து முப்பத்தைந்து ரூபாய் மட்டும்தான். விளக்கெண்ணெய் செட்டியார் வீட்டைக் காலி செய்துவிட்டால் போதிய சௌகரியமில்லாத அந்த வீட்டிற்கு போலீஸ் உத்தியோகஸ்தர் வர விரும்பமாட்டார். வேறு யாராவது நம்மைப் போன்ற ஏழை மனிதர் குடிவருவதில் அப்பாவுக்கு ஆக்ஷேபணையும் கிடையாது. எப்படியும் பராசக்தி வழி ஏற்படுத்துவாள் என்று எதிர் வீட்டுக்குக் குடிவந்தோம்.

மறுநாளிரவு புயற்காற்று! நானும் என் தமக்கையும் எங்கள் அறையில் படுத்து நிம்மதியாய்த் தூங்கினோம். என் தாயும் தந்தையும் இரவு முழுதும் கண்விழித்துக் கடவுளைப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்களாம் நடு இரவில் மரங்கள் முறிந்துவிழும் 'சடேர் சடேர்' என்ற சப்தம் கேட்டு நான் விழித்துக் கொண்டேன. 'பெரிய காற்றும் மழையும் அடிக்கிறது, பாப்பா—வேறொன்றுமில்லை. நீ பயப்படாதே!' என்று என் தந்தை என்னை மறுபடி தூங்கச் செய்து விட்டார். மறுநாட் காலை ஆறுமணிக்கு என்னை அழைத்துக் கொண்டு தந்தை வெளியில் புறப்பட்டார். ஆஹா! வாயுதேவனின் விளையாட்டை என்னவென்று சொல்வேன்! சாலையிலுள்ள மரங்களெல்லாம் வேரோடு பிடுங்கப்பட்டுச் சாய்ந்திருந்தன ஆயிரக்கணக்கான காக்கைகள், மற்ற பட்சியினங்கள் கூட்டம் கூட்டமாக மடிந்து கிடந்தன. பரிதாபமான காட்சி! இயற்கை தேவியின் பயங்கரக் கோலம்! வழி நெடுக தந்தி மரங்கள் அறுந்து விழுந்து கிடந்தன. வாசலில் வரிசையாக நின்ற தென்னை மரங்கள் அத்தனையும் விழுந்து விட்டன. புயற்காற்றுக்குப் பின் சுமார் நாலு மாதம் வரை புதுவையில் தேங்காய்க்கு விலை கிடையாது.

'கா வென்று கத்திடுங் காக்கை—என் கண்ணுக்கினிய கரு நிறக் காக்கை

எத்தித்திருடு மந்த காக்காய்—அதற்கு இரக்கப்படவேணும் பாப்பா?

என என் தந்தை எனக்கு விளையாட்டுக் காண்பிக்கும் காக்கை கூட்டம் அடியோடு அழிந்து விட்டது என நினைத்து கண்ணீர் சிந்தினேன்.

புதுவையை யடுத்த சேரிக்குப் போனோம் குடிசைகளின் கூரைகளைக் காற்று அப்படியே தனியாக தூக்கிக் கொண்டு போயிருந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சில இடிந்து கீழே கிடந்தன. முழு உடம்பையும் மூடத் துணியில்லாத மனிதர்களும், முழுவதும் நிர்வாணமான குழந்தைகளும் சிறுவர்களும் 'கோ' வென்று அழுதவாறு குடிசைக்கு முன்னால் சேற்றில் நின்று கொண்டிருந்தார்கள். என் தந்தையைச் கண்டதும் ஓடி வந்து சூழ்ந்து கொண்டு காலில் விழுந்து கதறியழுதார்கள். தம்மால் கூடுமானவற்றைச் செய்வதாக வாக்களித்துவிட்டு என் தந்தை, தமக்கு அறிமுகமான பெரிய மனிதர்கள் மூலமாகவும், தமது சீட கோஷ்டியினரின் உண்டியல் மூலமாகவும் அரிசியும் பணமும் சேர்த்து முதலில் அந்த ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்தபின், குடிசைகள் கட்டிக் கொடுக்கவும் ஏற்பாடு செய்தார்.

மறு நாள் கேட்ட பலபல விஷயங்களில் ஒன்று மட்டும் இப்பொழுது நினைவில் நிற்கிறது ஸ்ரீ கனக சுப்பரத்தினம் (பாரதிதாஸன்) புதுவைக்கு அருகிலுள்ள் கரடிக்குப்பத்தில் ஒரு சிறு பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராக இருந்தார். அவர் சாயங்காலம் வழக்கம் போல புதுவைக்குத் திரும்பி வரும்போது, காற்று அவரைத் தூக்கிக்கொண்டு போய் ஓர் பாழுங்கிணற்றில் தள்ளியதாம், 'ஓம் சக்தி, சக்தி, சக்தி யென்றுசொல்லு,' என என் தந்தை படிப்பித்திருந்தபடி பராசக்தியை ஜபம் பண்ணிக் கொண்டேயிருந்தாராம். காற்று ஒருவாறு ஓய்ந்த பிறகு புதுவை வந்து சேர்ந்தாராம்.

ஏற்கனவே விழக்கூடிய நிலையில் நின்ற எங்கள் வீடு—அதாவது 'விளக்கெண்ணெய் செட்டியார்' என்று என் தந்தை பிரியமாகக் கூறும் சபாபதி செட்டியார் (சபாபதி செட்டியார் வாடகைப் பணம் வாங்குவதிலும் சரி, வீடு செப்பனிடுவதிலும் சரி, எதற்கும் வழ வழ வெனக் கண்டிப்பில்லாமல் பேசும் வழக்கத்தினால் அவருக்கு என் தந்தை 'விளக்கெண்ணெய் செட்டியார்' என்று பெயர் கொடுத்தார்.) வீட்டில் தென்னை மரங்கள் சாய்ந்து, கண்ணாடி ஜன்னல்கள அத்தனையும் உடைந்து முழுவதும் பாழாகி விட்டன.

புயற்காற்று இரவில் ஒரு கணவனும், மனைவியும் பேசியதாக ஒரு பாட்டு எழுதினார்.

பாட்டு

மனைவி

காற்றடிக்குது கடல் குமுறுது
கண்ணை விழிப்பாய் நாயகனே!
தூற்றல் கதவு சாரளமெல்லாந்
தொளைத்தடிக்குது பள்ளியிலே.

கணவன்

வானஞ் சினந்தது ; வைய நடுங்குது ;
வாழி பராசக்தி காத்திடவே !
தீனக்குழந்தைகள் துன்பப்படாதிங்கு
தேவி, அருள் செய்ய வேண்டுகின்றோம்.

THE DEPARTMENT OF CULTURE
GOVERNMENT OF INDIA.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனைவி

நேற்றிருந்தோ மந்த வீட்டினிலே, இந்த
நேரமிருந்தாலென் படுவோம் ?
காற்றென வந்தது கூற்றமிங்கே, நம்மைக்
காத்தது தெய்வ வலிமையன்றோ!

பின் ஓர் கட்டுரையில் 'வேணு முதலி பாடுகிறார்' என்ற 'அண்டங் குலுங்குது தம்பி' என்று ஒரு பாடல் எழுதினார்.

பாட்டு

'அண்டங் குலுங்குது தம்பி—தலை
ஆயிரந் தூக்கிய சேடனும் பேய் போல்
மிண்டிக் குதித்திடுகின்றான்—திசை
வெற்புக் குதிக்குது வானத்துத் தேவர்
செண்டு புடைத்திடுகின்றார்—என்ன
தெய்வீக காட்சியைக் கண் முன்பு கண்டோம்
கண்டோம், கண்டோம், கண்டோம் . ...இந்தக்
காலத்தின் கூத்தினைக் கண்முன்பு கண்டோம் !
தக்கத்தக தக்கத்தக தித்தோம், என்பதே

பின்னர் 'பிழைத்த தென்னந்தோப்பு' என்ற ஒரு பாடல் எழுதினார்.

எதிராஜ் ஸுரேந்த்ரநாத் ஆர்யா

ஸ்ரீ ஸுரேந்த்ரநாத் ஆர்யாவைப் பற்றி எல்லோரும் நன்கு அறிவார்கள். ஆஹா! எத்தனை தேச பக்தர்கள் அஞ்சா நெஞ்சுடன் அரசாங்கத்தை எதிர்த்தவர்கள், தேசத்திற்காகத் தங்கள் ஆஸதியையும், செல்வத்தையும், யௌவனத்தையும்—ஏன் தம் வாழ்நாள் முழுவதையுமே தியாகம் செய்தவர்கள், இருந்த ஞாபகம் கூட இல்லாமல் மறைந்து விட்டார்கள். ஸ்ரீ ஆர்யாவின் சரித்திரம் முழுவதும் எனக்குச் சரியாக ஞாபகம் இல்லை. ஒரு சில குறிப்புகள் மட்டும் தான் என் ஞாபகத்திலிருக்கின்றன, அவரது வீர வாழ்க்கை சரித்திரம் முழுவதும் சமீபகாலம் வரையில் புதுவை அரவிந்தாச்ரமத்தில் வசிந்திருந்த ஸ்ரீ எஸ். துரைசாமி அய்யருக்குத் தெரியுமென நம்புகிறேன்.

ஸ்ரீ ஆர்யா 1907–ம் ஆண்டில், ராஜீயக் கிளர்ச்சி சென்னையில் இளைஞர்களிடையே மும்முரமாகப் பரவி வரும்போது, தேசத் தொண்டில் ஈடுபட்டார். 'ஞான ரத' த்தில் என் தந்தையார் குறிப்பிட்டிருக்கும் சென்னை ஜன சங்கத்தில் ஓர் அங்கத்தினர். காங்கிரஸ் மகாசபை சூரத்தில் கூடிய போது சென்னையிலிருந்து என் தந்தையுடன் நண்பர்கள் சிலரும் போயிருந்தார்கள். சபையில் தீவிரவாதிகளுக்கும் மிதவபதிகளுக்கும் ஏற்பட்ட பிரிவினையால் நேர்ந்த கலகத்தை என்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தந்தை ஒரு கதையாகச் சொல்வார், இளைஞர்களின் தலைவரான லோகமான்ய பாலகங்காதர திலகர் வீரசிங்கம் போல கர்ஜித்துக் கொண்டு மேடைமீது பேச, அனுமதியளிக்காமல் உட்காரும்படி சொல்லப்பட்டார். லோகமான்யர் அதைப் பொருட்படுத்தாமல் 'என் பிரசங்கத்தை முடித்த பிறகு தான் உட்காருவேன்' என்றார். ஸ்ரீ திலகரை மேடையிலிருந்து பலாத்காரமாக கீழே தள்ளும்படி மிதவாதிகளில் சிலர் முயன்றார்கள். உடனே சபையிலிருந்து திலகர் கோஷ்டியார் எழுந்தார்கள். அடிதடி, பெரிய கலகம், கையில் வேறு ஆயுதங்கள் இல்லாமையினால் நாற்காலிகளும், காலில் அணிந்துள்ள சப்பாத்துக்களும் உபயோகிக்கப்பட்டன காங்கிரஸ் மறுபடி கூடாமல் இரு கட்சிகளாகச் சண்டையுடன் கலைந்தது. காங்கிரஸ் சபையின் சரித்திரத்தை முப்பத்திரண்டு வருஷங்கள் வரையும் என் தந்தை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்துக் கொடுத்தார். அது 'சுதேசமித்திரன்' பத்திரிகை காரியாலத்தாரால் புஸ்தக ரூபமாக வெளியிடப்பட்டதாக எனக்கு ஞாபகம்

ஸ்ரீ விபின் சந்திர பாலரை கல்கத்தாவிலிருந்து சென்னைக்கு வரும்படி அழைத்தார்கள். கடற்கரைப் பிரசங்க மேடைக்குப் போகும் வரை பெரியதொரு ஊர்வலம். ஸ்ரீ சந்திர பாலர் ஏறியிருந்த வண்டியை இளைஞர்கள் தாமே இழுத்துச் சென்றனர். ஊர்வலத்தின் முன்னால் அன்னை பாரததேவியின் கொடி. அந்த ஊர்வலத்தின் வர்ணனையை 'தாயின் மணிக்கொடி பாரீர்' என்ற பாட்டில காணலாம். ஸ்ரீ விபின் சந்திர பாலரின் பிரசங்கத்தை நேரில் கேட்டிருப்பவர்களுக்கு, அன்று அவர் செய்த பிரசங்கம் சென்னை வாலிப தேசபக்தர்கள் மனதில் எத்தகைய ஆவலையும் உற்சாகத்தையும் உண்டாக்கியதென ஊகிக்கலாம். சென்னை விஜயத்திற்குச் சில நாட்களுக்குப் பின், ஸ்ரீ விபின் சந்திர பாலர் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைபட்டார்.

தாய் நாட்டிற்காக எந்தத் தியாகமும் செய்ய பின் வாங்காத இளைஞர்கள் சிலருள் ஒருவரான ஸ்ரீ சுரேந்திர நாத் ஆர்யா, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் வாயிலில் செய்ததொரு பிரசங்கத்திற்காக ராஜத்ரோகக் குற்றம் சாட்டப்பட்டு ஐந்து வருடங்கள் சிறை தண்டனையடைந்தார். ஆங்கில சர்க்காரின் நீதிபதிகளால் விசாரிக்கப்பட்டு, ஐந்து வருஷ தண்டனை மட்டுமே விதிக்கப்பட்ட போதிலும் சிறைச்சாலையில் கீழ்ப்படியாமல் நடந்து கொண்ட குற்றத்திற்காக மற்றும் ஒரு வருஷ தண்டனையும் அவருக்குக் கிடைத்தது.

ஆறு வருஷம் கடுங்காவல் தண்டனையனுபவித்து விட்டு ஸ்ரீ ஆர்யா வெளி வந்தார். வந்தவுடன் என் தந்தை புதுவையிலிருப்பதைக் கேள்விப்பட்டு, உடனே அவரைப் பார்ப்பதற்காக புதுவைக்கு

4

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்தாராம். அடிமை இந்தியாவில் பிறந்த வாலிபனுக்கு சுதந்திர உணர்வு ஏற்படலாமா? அந்த பெருங்குற்றத்திற்காக, அவர்பட்ட துன்பங்களை, அவரின் அருந்தியாகத்தையறிந்து, அதற்குரிய மதிப்பு செலுத்துவார் யார்? ஸ்ரீ ஆர்யா போன்ற வீரர்களின் சரித்திரத்தைப் பிற்கால இந்திய வாலிபர், பல நூற்றுண்டுகளுக்குப் பின் படித்துணர்ந்து போற்றுவர். ஸ்ரீ ஆர்யா, தாம சிறைச்சாலையில் பட்ட துன்பங்களை என் தந்தையிடம் கதை கதையாகச் சொன்னார். அவற்றில் சில சம்பவங்கள் எனக்கு நன்ருக ஞாபகமிருக்கின்றன. ஆனால், அவர் ஜீவ வந்தராக இருக்கையில் அவரது வாழ்நாளையே மாற்றிய அச்சமபவங்களை அவரது அனுமதியின்றி பிரசுரிக்க முடியாததால அவற்றை இங்கு எழுத முடியவில்லை. ஒன்று மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன்.

சிறைச்சாலைகளில் கடுங்காவல் தண்டனையடைந்து, தனியறைகளில் வைக்கப்பட்டிருக்கும் போது, கைதிகளுக்கு, அவர்களை பரிசோதித்து அவர்களின் உடல் நலனுக்கான வைத்தியம் செய்ய வைத்தியர் ஒருவரும், அவர்களின் ஆத்மாவின் நலனுக்கு ஏற்றதை போதிக்க மதகுரு ஒருவரும், சில நிமிஷங்கள் அவர்களுடன் பேச அனுமதியுண்டு. அம்மாதிரியான சந்தர்ப்பங்களில் ஸ்ரீ ஆர்யா தமக்கு மனசசாந்தியளிக்க தமது இந்துமத குரு ஒருவரைத தன்னிடம் அனுப்பும்படி வேண்டினாராம்.

ஹிந்து மதப் பிரச்சாரம் :

ஒருவன் தன் மனேவமைதி குன்றியிருக்கும் போதோ, சந்தேகத்துக்கிடமான திச்சயமில்லாத வழிகளில் இறங்க முற்படும் போதோ, நம் ஹிந்து சமூகத்தில் அவர்களுக்கு மனச்சாந்தி அடையும வண்ணம் உபதேசம் செய்ய, தற்கால ஹிந்து மதத்தின குருக்களின பிரதிநிதிகளான புரோகிதர்களை (உபாத்தியாயர்களை)க் கூப்பிடும வழக்கமில்லை. ஒருக்கால், யாரேனும் செய்ய வேண்டினாலும அதற்குகந்த வகையில் அவரது ஆத்ம சாந்திக்குரிய சாதனங்களைப் பற்றிப் போதிக்கத் தெரிந்தவர்கள் நூற்றில் ஒருவர் கூட இருக்கமாட்டாரென்பதில் ஐயமில்லை.

வீண் டாம்பீகத்தால் அடையும் பெருமையைத் தவிர, வேறு பயனில்லாத அனுவசியமான கிரியைகள் செய்வதினால், வீணாகப் பொருளும் நேரமும் நஷ்டமாவதைத் தவிர, கண்ட பலன் யாதொன்றுமில்லை. கவனித்துப் பார்க்கும் போது, மாதந்தோறும் பூஜைகளும், சமாராதனைகளும், பிராமண சந்தர்ப்பனைகளும் பல வீடுகளில் வெகு விமரிசையாக நடப்பதில் குறைவில்லை. ஆனால், மனேவமைதி குன்றியவர்களைத் தூய வழியில் நடக்கும் வண்ணம் போதிக்கவோ,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விவாதங்களின் மூலம் விளக்கிச் சொல்லி அவர்கள் மனதைத் திருப்பி நல்வழியில் செலுத்தும் வண்ணம் செய்யவோ ஒரு விதமான திட்டமும் வகுக்கப்படவில்லை. நமது புரோகிதர்கள் பலர், தாம் உச்சரிக்கும் மந்திரங்களுக்கு அர்த்தம் தெரிந்து கொள்ளாமலே, மனப்பாடம் செய்தவற்றை கிளிப்பிள்ளைகளைப் போல ஒப்பித்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள் எவ்வாறு ஆத்ம சாந்திக்கு உபாயம் கற்றுக் கொடுக்க முடியும்? இத்தகைய பாழடைந்திருக்கும் ஹிந்து சமூகத்திலே, இராஜீயக் கைதிகளைத் தொத்து வியாதியெனக் கருதி பகிஷ்கரித்து வந்த அந்த நாளிலே — கடுஞ்சிறை வாசத்தினால் தம் மன வலிமை குன்றி, எதிலும் நம்பிக்கையற்றுப் போகும் தருவாயில், அவர் புண்பட்ட மனம் ஆத்ம சாந்தியை அடையும் வழியைத் தேடி உழன்றதில் ஆச்சரியம் ஏதும் இல்லை.

எனவே, ஸ்ரீ ஆர்யாவின் வேண்டுகோள் பலனளிக்கவில்லை. கிருஸ்துவப் பாதிரிமார்கள் தங்கள் முறைப்படி தமது மதத்தைப் போதித்து, அதன் மூலம், கடவுளின் மன்னிப்புக்கு ஆளாக முடியும், எனப் பிரசாரம் செய்தார்கள். இருட்சிறையில் வீழ்ந்து அறிவை யிழக்கும் தன்மையிலிருந்தபோது, குருடனுக்கு ஒரு ஊன்று கோல் போல சிறிது நம்பிக்கையளித்த குருமாரின் உபதேசத்தால் தமது புனிதமான ஹிந்து மதத்தை விட்டு அன்னிய மதமான கிருஸ்துவ மதத்தைத் தழுவினர்.

புதுவையில் தம் நண்பரைக் கண்டு தாம் பட்ட பாடனைத்தும் சொல்லி மனவாறுதலடைந்தபின், மறுபடி திரும்ப சென்னைக்குப் போய், அங்கிருந்து பாதிரிமார்களின் உதவியால் அமெரிக்காவுக்குப் போக எண்ணினர். ஆனால், சென்னை போவதற்கு ரயில் சத்தம் கொடுக்கப் போதிய பணங்கூட அவரிடம் கிடையாது. என் தாயார் காதிலணிந்திருந்த கம்மல்களை, வீட்டில் வேலை செய்யும் அம்மாக் கண்ணுவிடம் கொடுத்து, அதை அடகு வைத்து ரூபாய் ஏழு வாங்கி அவருக்கு ரயில் சத்தம் கொடுத்தார்களாம். அத்தகைய வறுமை நிலையில் தான் என் தந்தை இருந்தார். பூர்வ புண்ணிய வசத்தாலும் தமிழ்த் தாயின் அதிர்ஷ்டத்தினாலும், சென்னையில் தம்மைப் பிடிக்க அரசாங்கத்தார் முயல்கிறார்கள் என்ற வதந்தி கேட்டவுடன், என் தந்தை ஸ்ரீ பாலகங்காதர திலகரைப் போல, ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையைப் போல தாமும் சிறை செல்ல வேண்டும் என்று தீர்மானிக்காமல், முதலில் பிரெஞ்சு சர்க்காரிடம் அடைக்கலம் புகுவது — பின் வேறு முயற்சிகள் செய்வது—என்று நண்பர்கள் கூறியதை ஆமோதித்துப் புதுவை செல்ல ஒப்புக் கொண்டார். "பாரதி புதுவையில் ஒரு மகரிஷி போல வசிக்கிறார்; தவிர, விசுவாமித்திரரைப் போன்ற முன் கோபமுள்ளவர் — அதனால் குழந்தைக்கு 'சகுந்தலா' என்று பெயரிட வேண்டும்' என என் தாய் மாமன் ஸ்ரீ அப்பாதுரை ஐயர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எழுதினாராம். என் தந்தையும், அந்த சமயம் காளிதாஸனுடைய 'சாகுந்தலம்' படித்துக் கொண்டிருந்தாராம். எனவே அவரும் 'சகுந்தலா' என்ற பெயரை சரியென ஆமோதித்தார்.

என் தந்தை புதுவைக்குச் சென்று வசித்திருக்காவிடில் அவருக்கும் அவரது நண்பர் ஸ்ரீ ஆர்யாவைப் போல ஏழு வருஷ கடுங்காவல் தண்டனை கிடைத்திருக்கும். சிறு வயதில் தந்தையின் பேரன்பைப் பெற்று வளரும் பாக்கியத்தை நானும் இழந்திருப்பேன். தமிழர்களும் அவரது உணர்ச்சி மிக்க கவிதைகளைப் படித்து ஆனந்தமடைய முடிந்திராது.

தற்காலம் சிறைச்சாலையில் அடைபட்டுக்கிடக்க வேண்டி வந்த மாபெரும் தேசபக்தர்கள் அந்த நாட்களை நாட்டிற்கு நலனளிக்கும் நன்னூல்கள் எழுதுவதில் செலவிட சௌகரியம் இருந்தது. முன்னாளிலோ, கடுஞ்சிறையில் புத்தகம் எழுதுவது மட்டுமல்ல, கடவுளைத் தொழக்கூட மன நிம்மதி கிடையாதவாறு துன்புறுத்தப் பட்டார்கள். தமிழ் நாட்டு வீரர் சிதம்பரம் பிள்ளை சிறைச்சாலையில் செக்கிழுக்க நேர்ந்ததையெண்ணி, மனம் குமுறி என் தந்தை ஈசனை 'நாலோர்கள் செக்கடியில் நோவதும் காண்கிலையோ' எனக் கேட்டுப் புலம்பும் பாடலையெழுதினர்!

ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையவர்களும் சிறையிலிருந்து வெளிவந்தவுடன் என் தந்தையாரைக் காண புதுவைக்கு வந்தார். கலெக்டர் 'வின்ச்' ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையைப் பார்த்துச் சொல்வதைப் போன்ற பாடலையும். ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை கலெக்டருக்குக் கூறும் மறுமொழி போலவும். எழுதிய பாடல்களை என் தந்தை எனக்குப் படிப்பித்திருக்கிறார். என்னே என் துரதிருஷ்டம்! வீரர் சிதம்பரம் பிள்ளையின் தியாக வாழ்க்கைக் கதையை என் தந்தை சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் அதை முழுவதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளக் கூடிய சக்தியற்ற குழந்தைப்பருவம்.

ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை 'இந்தியன் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி' (Indian Steam Navigation Company) என்ற பெயருடன் கப்பல் கம்பெனி நடத்தினராம். ஆங்கிலேயருடன் போட்டியிட்டு படு நஷ்டமடைந்து தம பொருள் முழுவதையும் தோற்றார். பின்னர், ராஜத்வேஷக் குற்றம் சாட்டப்பட்டு ஜெயிலில் அடைக்கப்பட்டார். ஜெயிலிலும் பல துன்பங்கள் பட்டு வெளி வந்த பின், மறுபடி, தேசத் தொண்டாற்ற இயலாதவரானர். ஆனல் பின்பு சில தமிழ் நூல்கள் எழுதினர். அவற்றில் 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற நூல் மிக்க அருமையானது.

குயவர் ப ஃ யம்

புதுவை, மண் பொம்மைகளுக்குப் பிரசித்தி பெற்ற இடம். ஒரு நாள் எங்கள் குடும்பத்தாரும் ஸ்ரீ வ. வெ. சு. அய்யர், ஸ்ரீ ஸ்ரீனி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாஸாச்சாரியார் குடும்பத்தினரும், மண் பொம்மைகள் செய்யுமிடமான குயவர் பாளையத்திற்குப் போனோம். திறமை வாய்ந்த தொழிலாளர்கள் தங்கள் குலத்தொழிலை பரம்பரையாக முறைப்படி கற்பிப்பதையும், பொம்மைகள் செய்து அவற்றிற்கு வர்ணமிடும் விசித்திரத்தையும் எங்களுக்குக் காண்பித்தார்கள். அதில், சில பொம்மைகள் என் தந்தையின் மனதைக் கவர்ந்தன ஒரு ஜோடி காளை மாடுகள்—அழகிய வெண்மையான நிறங் கொண்டவை. பதினெட்டு வயது யௌவனப் பருவத்தின் செருக்கை, துள்ளிக் குதித்தோடும் ரத்த ஓட்டத்தினால் ஏற்படும் லாகவ சக்தியைத் தன் நிமிர்ந்த நடையினாலும், பயமற்ற விழிகளினாலும் வெளிப்படுத்தும் மானிடனைக் 'காளை'யென்கிறோம். காளைகளின் பலத்தையும் அவற்றின் சக்தியையும் கண்டு அதைச் சொற் சித்திரத்திலே அமைக்க நான் எத்தனை முறை முயன்றிருக்கிறேன். கட்டுறுதியுள்ளவுடல், கண்ணிலே நல்ல குணம்—அதை மண்ணிலே சமைத்து விட்டான் மன்னன் என்று பெரிதும் பாராட்டிப் பேசினார்.

அந்த பொம்மைக்காரர் பெரிதும் மகிழ்ச்சியடைந்து, 'ஸ்வாமீ, தங்கள் உருவப்படம் ஒன்று கொடுத்தால் அதைப் போலவே, தங்கள் முகத்தில் தோன்றும் அருட்கலையையும் சேர்த்துப் பொம்மை செய்து தருவேன்' என்றார். உடனே, ஸ்ரீ வ வெ சு ஐயர், 'வங்காளத்தின் சித்திரக்காரர் ஒருவர் தீட்டிய பாரத மாதாவின் படம் ஒன்று என்னிடம் உள்ளது. அதைப் பாரத்து ஒரு பதுமை செய்து கொடுத்தல் வேண்டும்' என்றார். முதலில் பெரிய சிலையுருவமாக அதிக விலையில் சிற்பி செய்து கொடுத்தார். பின்னர், நவராத்திரி கொலுவில் வைக்கும்படியாக, அதே மாதிரியான சிறிய பொம்மைகள் செய்யப்பட்டன. அந்த பாரதமாதா உருவச்சிலையை-பதுமையை சிற்பி செய்து வந்ததையும், அந்த சமயத்தில் என் தந்தையும் ஸ்ரீ ஐயரும் தத்தமக்கு ஏற்பட்ட அபிப்பிராயங்களைக் கூறியதை பாரதிதாசன் கூறியதாக திருலோக சீதாராம் ஒரு கட்டுரையில் அழகாக எழுதியிருக்கிறார்

பாரதமாதாவின் படத்தில் அவள் ஆபரணங்களை அணியவில்லை. இந்தியாவின் ஏழைப் பெண்களைப் போலவே ஒரு புடவையும், ரவிக்கையும் மட்டும் அணிந்து, இமய மலையை சித்தரிக்கும்படி தனது கேசத்தை விரித்து விட்டுக் கன்னத்தில் கையை ஊன்றி ஆழ்ந்த யோசனையில் இருப்பதாக சித்திரம் காலடியில் உள்ள கடலிடையே தாமரை மொட்டென உருவங்கொண்ட சிங்களம். படத்தில் பாரத மாதாவுக்கு ஆபரணங்கள் அணியப்படவில்லை. சிலையை அப்படியே அணிகளின்றியமைக்க சிற்பிக்கு விருப்பமில்லை. என் தந்தை கூறியதாக ஸ்ரீ திருலோக சீதாராம் எழுதியிருக்கும் அன்னாரின் வார்த்தைகள் என் மனதில் என் தந்தை பேசுவதின் ஞாபகத்தை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்டு பண்ணும் முறையில் அமைந்திருந்தபடியால், அவற்றை அவர் எழுதியபடியே கீழே தருகிறேன்.

ஐயர் சொல்லுகிறார் :– 'இதற்கென்ன யோசனை ? ஓவியத்தில் இருப்பது போல மொட்டையாகத்தான் இருக்க வேண்டும். சைத்ரீகன் யோசித்துத்தான் அப்படி விட்டிருக்கிறான். இன்று பாரத மாதா அன்னியனுக்கு அடிமையாகிச் செல்வங்களையெல்லாமிழந்து வறுமையால் வாடித் தவிக்கிறாள். இருந்ததையெல்லாம் தான் அன்னியர் சுரண்டிக் கொண்டு போய் விட்டார்களே ! பாரத மாதாவுக்கு ஆபரணம் போட்டுக்கொள்ள ஐவேசு எங்கிருக்கிறது ? சும்மா விடப்பா ! மொட்டையாகவே நிறுத்து '

இதைக் கேட்டதும் பாரதியாருக்குப் பெருங்கோபம் வந்து விட்டது 'ம் ஹூம ஸர்வ பூஷணமாகயிருக்கட்டும், பாரத மாதாவுக்கு ஒரு குறையுமில்லை. அன்னியர் என்னத்தை வாரிக்கொண்டு போய் விட்டார்கள் ? சிதறிக் கிடக்கிற ஓரிரண்டைப் பொறுக்கிக் கொண்டு ஓடுகிறார்கள். போகட்டுமே. அதனால் என்ன குடிமுழுகி விட்டதா ? பாரதமாதா, அதனால் ஏழையாகி விட்டாளா? கொள்ளை போய் விட்டதாம் கொள்ளை! கங்கையையும், காவேரியையும் சுருட்டிக் கக்கத்தில் வைத்துக் கொண்டு போய் விட்டார்களா ? அல்லது இமயமலையைத் தூக்கித் தலைமேல் வைத்துக்கொண்டு ஓடிவிட்டார்களா ? இந்நாட்டின் நீர்வளத்தையோ, நிலவளத்தையோ, கவிதையையோ, கலையையோ எதைக் கொண்டு போய்விட்டார்கள் ? ஒன்றும் முழுகிப் போகவில்லை. பாரதமாதா என்றும் மகாராணி தான். சர்வாலங்கார பூஷிதை. சகல ஆபரணங்களும் குறைவில்லாமல் போட்டுக் கொண்டு வா ' என்று ஆவேசம்வந்தவர் போல உத்தர விட்டாராம். நண்பர்கள் மெய்ம் மறந்து போனார்கள். தந்தையின் விருப்பம் போலவே பதுமை அதியற்புத வனப்பு வாய்ந்ததாக அமைந்தது.

பின்னொரு நாள், என் சகோதரி தங்கம்மாள், ரவிவர்மாவின் மோஹினிப் படம் ஒன்று வாங்கி, அதற்கு (அந்தக் காலத்தில் பெண்களிடையே பெரிதும் விருப்பத்துடன் செய்யப்பட்ட கைவேலைகளில் ஒன்றான படத்துக்கு) ஜிகினாவும் பட்டுத்துணியும் தைக்கும் வேலையை செய்வதற்காக ஜிகினாத் தைக்க ஆரம்பித்தாள்.

அப்பா சொல்கிறார் :—

'தங்கம்மா, உன் கைத்திறமையைக் காட்ட வேண்டுமானால் தானாகவே ஒரு படம் வரைந்து, அதில் உனக்கு இஷ்டமானபடி அலங்காரம் செய்து சந்தோஷப்படு. பிறருடைய வேலையைத் திருத்தப் போகாதே. முதலில் சித்திரம் வரையப் பழகு பிறகு அதற்கு அழகு செய்வதைப் பற்றி யோசிக்கலாம்' என்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுவையில் சாண்டோ ராமமூர்த்தியின் சர்க்கஸ் கம்பெனியார் சில நாள் ஆட்டம் நடத்தினார்கள். சாண்டோ ராமமூர்த்தி தேச பக்தர். புதுவையில் அஞ்ஞாத வாசம் செய்யும் சுதேசிகளுக்கு குடும்பத்தாரோடு சர்க்கஸ் பார்ப்பதற்காக இலவச அனுமதிச் சீட்டு கள் அனுப்பினார்.

தனக்குப் போதிய சரீர திடமில்லையென்று என் தந்தைக்குப் பெரிய குறை சாண்டோ ராமமூர்த்தி தனது மார்பின் மீது யானையை ஏற்றிக்கொள்வதையும், பாராங்கல்லை அவரது மார்பின் மீது வைத்து இருவர் சம்மட்டியால் அடிப்பதையும் கண்டு, பரவசமடைந்து பூரித்துப் போனார். தமிழ் நாட்டில், இளைஞர்கள் தேகாப்பியாசம் செய்து உடல் வலியில் மற்ற நாட்டவருக்கு எவ்விதத்திலும் தாழ்ந்த வரில்லையென முன்வர வேண்டும் என்று பேரவாக் கொண்டார்.

பெருமாள் கோவில் தெருவில், தேகப்பயிற்சி செய்வதற்காக சில இளைஞர்கள் சேர்ந்து ஒரு கூடம அமைத்தார்கள். ஸ்ரீ நாகசாமி, ஸ்ரீ முத்து முதலிய சில வாலிபர்களும், ஸ்ரீ ஐயரது குமாரி—காலஞ் சென்ற சுபத்ராவும் நானும அதிகாலையில் எழுந்து, அங்கு தேகாப்பி யாசம் செய்யப்போவோம். 'கசரத்' எடுத்தல், 'கர்லா' சுற்றுதல் முதலியன. என்னை விட ஒரு வயது சிறியவளாகிலும், சுபத்ரா அதிக பலசாலி. பேச்சிலும், பாட்டிலும் என்னை வெல்ல முடியாவிட்டாலும் சரீரப் பயிற்சியிலும் வீரத்திலும் வெகுதூரம் முன்னேறிப் போய் விட்டாள். புலிக்குப் பிறந்தது பூனையாகப் போகுமா? ஸ்ரீ ஐயரின் வீர வாழ்க்கையின் சரிதையைத் தமிழ்நாட்டார் அறிவார்கள். அவர் ஸ்ரீ ஸவர்க்கரை சந்தித்ததையும், கடல் நீந்தித் தப்பியோடி வந்ததையும், தம்மால் கூடியவரை வங்காளத்தில் நடந்ததைப் போலத் தமிழ்நாட்டிலும் நடத்த அவர் செய்த முயற்சிகளையும், அவை பலிக்காமல் வேறு வழியின்றி நாட்களை வீண்போக்காமல், இலக்கியத் துறையில் இறங்கியதையும், பின்பு புதுவையிலிருந்து வெளிவந்தவுடன் மறுபடி தேசீயப் போராட்டத்தில் இறங்கி, 'தேச பக்தன்' என்ற பத்திரிகை நடத்தியதையும், அதனாலேற்பட்ட வழக்கில் சிறை சென்று மீண்டதும், தென்னாட்டிலே சாந்தி நிகேதனத்தைப் போல ஒரு குருகுலம் அமைக்கவேண்டுமெனும் பேராவலில் அவர் செய்த பகீரதப் பிரயத்தனத்தைப் போன்ற முயற்சியையும், நன்றியுணர்வற்ற நமது தமிழ்நாட்டார் அவருக் களித்த பதிலுதவியையும், அவர் தம் அருமைக் குமாரியுடன் அருவி யில் வீழ்ந்து மாண்ட சோகக் கதையையும் தமிழர் அறிவார்கள். ஸ்ரீ சுபத்ரா, இன்று உயிரோடிருந்திருப்பாளானால், தற்காலத்தில் தேசீயப் போராட்டத்தில் ஈடுபட்டுத் தியாக வாழ்க்கை நடத்தும வீர பெண்மணிகள் தமிழ்நாட்டில் இல்லையென்ற குறையிராது. தேச சேவைக்காகவே தன் அருமை மகளை ஸ்ரீ ஐயர் பழக்கி வந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ் நாட்டாரின் துரதிருஷ்டத்தால் இளம் பிராயத்திலேயே நம்மிட மிருந்து மறைந்தாள்.

வங்காளத்தில் ஹிந்து முஸ்லிம் கலவரம் மூண்டு, கிழக்கு வங்காளத்தில், பெண்கள் கற்புக்கும் உயிருக்கும் பங்கம் ஏற்படும் நிலை வந்தபோது. ஸ்திரீகள் தங்கள் கற்பைக் காப்பாற்றிக்கொள்ள எவ்வாறேனும் தற்காப்புக்கான முயற்சி தாமே செய்துகொள்ள வேண்டுமென மகாத்மா காந்தியடிகள் சொன்னதாகப் பத்திரிகையில் படித்தேன். உடல் வலியில் ஆண்மக்களைவிடக் குறைந்தவர்களான தால் பெண்கள், அபாயம் நேரும்போது தம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஆயுத வித்தைகளில் வல்லவராகயிருத்தல் வேண்டுமென என் தந்தை தன் பெண் மக்களுக்குச் சிலம்பமும, வாள் வித்தையும் கற்றுக்கொடுக்க விரும்பினர். அதற்கென ஒரு உபாத்தியாயரை அழைப்பித்துச் சில பாடங்கள் கற்பித்துக் கொடுக்கவும் செய்தார். ஆனல். வறுமையில் ஆழ்ந்து கிடந்தமையால, அவற்றிற்கும் போதிய சௌகரியங்கள் எங்களுக்குக் கிடைக்காமற் போய்விட்டது.

ஸ்ரீ ஸ்ரீனிவாசாச்சாரியார் புதுவையில் அச்சுக்கூடம் ஒன்று நடத்தி வந்தார். அதில் அச்சிடுவதற்காக ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகூரின் சிறுகதைகள் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துத் தரும்படி என் தந்தையிடம் கேட்டார். அவ்வாறே என் தந்தை மொழி பெயர்த்த கதைகள் : 'பத்திராதிபர்', 'ரஜாக் காலம்', 'சுபா', 'சமாப்தி' 'நள்ளிரவிலே', 'மான நஷ்டம்', முதலியவைகள், அதிலே 'பத்திராதிபர்' என்ற கதையிலே நோய்கொண்டு படுத்திருக்கும் பத்திராதிபரின் மகளை வர்ணிக்கும்போது, 'நாளிறுதியிலே மண்மீது வீழ்ந்ததொரு மலர்போல கிடந்தாள்,' என மொழிபெயர்த்திருக்கிறர்.

ரஸமிக்க ஸ்ரீ ரவீந்திரரின் சிறுகதைகளை சுவை குன்ருது என் தந்தை தமிழில் அமைத்திருப்பதை அவற்றை ஆங்கிலத்தில் படித்தவர்கள் நன்குணரலாம். ஸ்ரீ ரவீந்திரரின் கீதாஞ்சலியைத் தமிழில் எங்களுக்கு மொழி பெயர்த்துச் சொல்வார். கேட்பவர்கள், நேரம் போவது தெரியாமல் மெய்ம்மறந்து கேட்டிருப்போம் ஸ்ரீ வ. வெ. சு. ஐயரும், ஸ்ரீ ரவீந்திரரின் கதைகள சிலவற்றை மொழி பெயர்த்தார். அதில் 'காபூல்காரன்' ஒன்று. ஸ்ரீ ஐயருக்கு சோக ரசம்தான் பிடிக்கும். வேறு ரசம் அவரால் அனுபவிக்க முடியா தென்று குழந்தைகளாகிய நாங்கள் வேடிக்கையாகப் பேசிக்கொள் வோம். அவருடைய கதைகள் எல்லாம் அநேகமாக துன்பயியல் நாடகமாகவே முடியும் அவரது 'மங்கையற்கரசியின் காதல்', 'குளத்தங்கரை அரசமரம்' முதலியன போதிய சான்று. ஸ்ரீ ஐயர் 'குளத்தங்கரை அரசமரம்' என்ற கதையை முதல் பாதியெழுதியதும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எங்களுக்குப் படித்துக் காண்பித்தார். நாங்கள் என் தகப்பனரிடம் வந்து கதையைச் சொன்னோம். மறுபடி கதை முழுதும் முடிந்தவுடன் என் தந்தையிடம் சொல்ல வந்தோம். 'ருக்மனியைக் கொலை செய்து விட்டாரா ஐயர் ?' என்று கேட்டு என் தந்தை நகைத்தார்.

ஒரு கவியின் மனப்பாங்குடன் கவியின் கண்களால் உலகினைக் காணும் என் தந்தைக்கு அதிலுள்ள அழகிய தோற்றங்களும், இன்பங்களும் அதிகமாகக் காணப்பட்டன. அதனாலேயே அவர் 'எத்தனை கோடியின்பம் வைத்தாய், எங்களிறைவா, இறைவா, இறைவா—ஓ' என்று பாடவும் முடிந்தது. ஆனால், தம் நாட்டாரின் தாழ்நிலையை எண்ணி மனங்குமுறும் கவிஞரல்லாத வீரர் வ. வெ. சு. ஐயருக்கோ எங்கு பார்த்தாலும் துன்பங்களும், எதிர்ப்புந்தான் தென்பட்டது ஆச்சரியமல்ல. ஸ்ரீ ஐயர் பிரெஞ்சு பாஷையிலிருந்து மொழி பெயர்த்திருக்கும் 'அழேன் ழக்கே' என்ற கதையை குழந்தைகளாகிய எங்களுக்கு அவர் படித்துக் காண்பிக்கும்போது, கண்ணுங் கண்ணீருமாகக் கதை கேட்கும நாங்கள் அவர் முகத்தில் யாதொரு மாறுதலும் தோன்ருததைக் கண்டு வியந்ததுண்டு. எத்தகைய ஹாஸ்ய நிகழ்ச்சிகளைக் கேட்டபோதும் அவர் வாய் திறந்து சிரித்ததைக் கண்டதில்லை என் தந்தை கோபமாக இருந்ததையோ, அவர் முகத்தைப் பார்த்து ஒரு நொடியில் அறிந்து கொள்ளலாம். கடல் மடை திறந்தாற் போலத் தமது உள்ள மகிழ்ச்சியைக் கள்ளங்கபடமற்ற சிரிப்பால் வெளிப்படுத்துவார். அது போன்றே தமது மற்ற உள்ளக் கிளர்ச்சிகளையும் கட்டுப்பாடில்லாமல் வெளியிடுவார்.

புதுவை தர்மராஜாகோவில் தெருவில் மேற்குக் கோடியில் ஸ்ரீ ஐயர் வசித்து வந்தார். கிழக்குக் கோடியில் எங்கள் வீடு. என் தந்தை நாள் முழுவதையும் அநேகமாக நண்பர்களுடன் பேசுவதிலேயே போக்குவார். இரவிலேதான் அவர் எழுதும் நேரம். 'உண்டமயக்கம் தொண்டருக்கும் உண்டு' என்று சொல்லிப் பகலில் சாப்பாட்டுக்குப்பின் சிறிது நேரம் நித்திரை செய்வார். நிசப்தமான அழகிய நிலவொளி வீசும் இரவு நேரத்தை நித்திரையில் கழிப்பது பாபம் என்பார். தமது வீட்டுக்கு வரும் நண்பர் கூட்டத்தார், அல்லது என் தந்தை தாம் செல்லும் நண்பர்கள் வீடுகள் சிலவும் புதுவையில் உண்டு. முருகேசபிள்ளை, வாத்தியார் சுப்பிரமணிய ஐயர். ஸ்வாமிநாத தீக்ஷிதர், சுந்தரேசய்யர், சங்கர செட்டியார் முதலிய நண்பர்கள் வீட்டிற்கு அடிக்கடி போவார். என் தந்தைக்கு இத்தனை கஷ்டத்திற்கு நடுவிலும் ஒரு பெரிய அதிர்ஷடமும் இருந்தது. அது அவரது நண்பர்கள் தம் சொந்தவாழ்வில் எத்தகைய குணமுடையவர்களாகயிருந்த போதிலும் என் தந்தையைப் பற்றிய வரையில் உத்தம நண்பர்களாகக் கடைசி வரையில் உண்மையுடனிருந்தார்கள்.

5

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உயர்ந்த வேளாள குலத்திற் பிறந்து ஏராளமான செல்வத்துடனும் செல்வாக்குடனும் வாழ்ந்து வந்த ஸ்ரீ முருகேச பிள்ளைக்கு என் தந்தையிடம் ஏற்பட்ட அன்பும் மதிப்பும் எத்தகையதென்று அளவிட முடியாது. எவ்வாறு என் தந்தைக்கு முருகேச பிள்ளை அறிமுகமானுர் என்ற விவரம் எனக்குத் தெரியாது ஆனல், எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் என் தந்தையிடம் போலவே முருகேச பிள்ளையிடத்திலும் பூரண அன்பும் சலுகையும் உண்டு. என் குழந்தைப் பருவத்தில் பாதி நேரத்தை ஸ்ரீ முருகேச பிள்ளை வீட்டிலேயேதான் கழித்திருக்கிறேன். அவர் மனைவி செளந்தரம்மாள், இலட்சுமி களை சொட்டும் சாந்தமான முகத்தில் பெரிய குங்குமப் பொட்டுடன், எப்பொழுதும் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டு, ஏவலாளர்களையும் தம்மையண்டிய ஏழை பந்துக்களையும் அன்ன பூர்ணு தேவி போல அன்புடன் உணவளித்துப் பாதுகாத்து வந்தார்; கணவரின் முகம் கோணுது, அவருக்குப் பணி விடைகள் செய்த உத்தமியவர்; தம் மூத்த மகன் ஸ்ரீ ராஜாபாதர் சீமைக்குச் சென்று படித்து அவர் தந்தையின் விருப்பப்படி மிக்க கௌரவம் வாய்ந்த உத்தியோகம் வகிக்க வேண்டுமென்பதற்காகத் தமது அணிகலன்களைத் தியாகம் செய்து தந்நலம் கருதாத் தகைமை கொண்டவர்; தெய்வ பக்தியிற் சிறந்து விளங்கித் தம் கடமையைத் தவற விடாது நடக்கும் இந்து மாதர் சமூகத்திற்கே ஓர் வழி காட்டியாக நின்றவர்! 'அண்ணியம்மா' என்று நான் பிரியமாக அழைத்து வந்த ஸ்ரீமதி செளந்திரம்மாளையும் நான் என் சொந்தத் தாயாராகவேதான் கருதி வந்தேன். அவரது குமாரர்கள் இருவரில் ராஜாபாதர், நான் மிகச் சிறிய குழந்தையாயிருக்கும் போதே, தன் மேல் படிப்புக்காக 'பிரான்ஸ்' (France) தேசத்திற்குச் சென்று விட்டபடியால் எனக்கு அதிக பழக்கமில்லை. ஆனல் என் தந்தையாருக்கு, சிறியவரான கனகராஜை விட அவர் மீது தான் அதிக அன்பிருந்ததென்பதை நானறிவேன்.

என் தந்தை புதுவை விட்டு வெளிவர கொஞ்ச காலத்திற்கு முன் ஸ்ரீ முருகேச பிள்ளை காலமாகி விட்டார். புதுவைக்குச் சென்று சிறிது காலத்தில், ஸ்ரீ முருகேச பிள்ளை வீட்டிற்குச் சமீபத்தில், ஒரு சிறிய வீட்டில் கொஞ்ச காலம் குடியிருந்தார். பெயரளவுக்கு மட்டுமே தான் அந்த வீடு. அவர் வாசம் செய்வது முருகேச பிள்ளை வீட்டு மாடி. சாப்பாடு, படுக்கையெல்லாம் அங்குதான். நான் வளர்ந்ததோ அவர்கள் வீட்டில். எனவே வீட்டுக் கதவைப் பூட்டிவிட்டுப் பகல் நேர முழுதும், என் தாயாரும் அண்ணியம்மாள் வீட்டுக்கு வந்து விடுவார். சாப்பிடுவதற்கும் . இரவில் படுப்பதற்கு மட்டும் தான் வீட்டுக்குப் போய் விடுவார்கள். துணைக்கு வீட்டில் 'அம்மாக்கண்ணு. அம்மாக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்ணுவை சாதாரண பணிப்பெண் என்ற இனத்தில் சேர்க்கக் கூடாது. ஒரு தனிப்பிறவி, வீட்டில் அரிசியில்லாவிடில் எங்கிருந்தேனும் எப்படியும் வாங்கி வந்து தருவாள். கையில் பணம் உள்ள போது சாமான் வாங்கக்கொடுத்த பணத்தை சாமான் வாங்காமலும் திரும்பக் கொடுக்காமலும் இருப்பது உண்டு. ஆபத்துக் காலத்தில் தன் உயிரையும் திரணமாக மதித்து உண்மையுடன் உழைப்பாள். ஒரு நாளிரவு என் தந்தை வெகுநேரம் சென்று வீட்டுக்கு வந்தார். வாயிற்கதவைத் தட்டினாராம். அம்மாக்கண்ணு ஆழ்ந்த நித்திரையிலிருந்தபடியால், என் தாயார், தாமே போய், வாயிற்கதவைத் திறந்தார்களாம். என் தந்தையார் உள்ளே வந்ததை திடீரென விழித்துக்கொண்ட அம்மாக்கண்ணு கண்டு விட்டாள். பாதி விழிப்பு. சின்ன மங்கலான விளக்கு வெளிச்சம். பார்த்தாள் அம்மாக்கண்ணு; என் தாயார் படுத்திருந்த அறையின் வாசற்படியில் தனது இரு கைகளை விரித்துக்கொண்டு, காளி ஸ்வரூபமாக நின்றாள். 'அடே! நீயாரடா அவன் திருட்டுத்தனமாக உள்ளே நுழைந்து விட்டாய், ஆனால் என்னைத் தாண்டிப்போய் நீ அம்மாளைத் தொடமுடியுமா? வா, ஒரு கை பார்க்கிறேன்,' என்று அட்டகாசம் செய்தாள். என் தந்தைக்கு வியப்பும், சந்தோஷமும் தாங்க முடியவில்லையாம். சிரித்துக் கொண்டு, 'நான்தான் பாரதி. என்னைத் தெரியவில்லையா?' என்றாராம். குரலைக் கேட்டதும அம்மாக்கண்ணுக்குத் தன் பிழை தெரிந்தது. வெட்கத்தினால் முகத்தில் துணியைப் போட்டுக்கொண்டு மறைவில் ஓடிவிட்டாளாம். பின்னர் அவர் கண்ணில் படாமல் சில நாள் இருந்தாளாம்.

ஒரு சமயம் நானும் என் தாயும், என் தாயாரின் பிறந்த வீடான கடையத்திற்குப் போயிருந்தபோது, என் தந்தை வீட்டு வாசல் கதவைப் பூட்டிக்கொண்டு எங்கோ வெளியே சென்றிருந்தவர், திரும்ப வீட்டிற்கு வந்தவுடன் கதவைத்திறக்க சாவியை 'கோட்' பைகளில் தேடிப் பார்த்திருக்கிறார். காணப்படவில்லை. உடனே அம்மாக்கண்ணு—தற்செயலாக' அங்கு வந்தவள்—பழைய பூட்டானபடியால், சரியாக மாட்டிக்கொண்டிராத அந்தப் பூட்டைக் கையினாலேயே அசைத்துத் திறந்து விட்டாளாம். உடனே என் தந்தை பாடினார் :

'பூட்டைத் திறப்பதும் கையாலே—நல்ல
மனம் திறப்பது மதியாலே
பாட்டைத் திறப்பதும் பண்ணாலே—மன
வீட்டைத் திறப்பதும் பெண்ணாலே!'—என்று.

என் தாயார் ஊரிலில்லாத சமயத்தில், அம்மாக்கண்ணு என் தந்தைக்கு வேண்டிய வீட்டு வேலைகள் முழுவதையும் அவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏவாமல் தாஞகவே செய்வாள்—சமையல் செய்து பரிமாறுவதைத் தவிர. சாப்பாடு அநேகமாக முருகேசபிள்ளை வீட்டில், அல்லது சுந்தரேச அய்யர் வீட்டில்; அரண்மனை போன்ற விசாலமான மாளிகை, குற்றவேல் புரியப் பல வேலையாட்கள். மனதறிந்து, உணவளித்து, உபசாரம் செய்யும் மாளிகையின் எஜமானி. அன்புடனும், பக்தியுடனும் வேண்டுவனவற்றைச் செய்யக் காத்திருக்கும் வீட்டு எஜமானனின் மைந்தர்கள்: ஆக, முருகேச பிள்ளை வீட்டில் என் தந்தைக்கு யாதொரு குறையும் கிடையாது. எனினும், ஒன்றையே தினந்தோறும் மாறுதலில்லாது செய்து குறிப்பிட்ட நேரதில் பசியில்லாது உண்டு உறங்கி வாழும் மனிதர் கூட்டத்தில் சேர்ந்தவரல்லாத என் தந்தைக்கு ஒரே இடத்தில் எப்பொழுதும் நேரம்போக்க மனம் வருமா? எனவே, அவரது மற்ெருரு தங்குமிடம் சுந்தரேச ஐயர் வீடு. ஸ்ரீ சுந்தரேச ஐயர் பெரிய நிலக்கடலை வியாபாரியான ஸ்ரீ குப்புசாமி ஐயரிடம் குமாஸ்தா வேலை பார்த்து வந்தார். தெலுங்கு பிராமணர். சிறிய வீடு. பெரிய குடும்பம். என் தந்தை எந்த நேரம் போனபோதிலும் சலிக்காமல் உடனே புதிய உணவு தயாரித்துக்கொண்டு வந்து சபரியைப் போல பக்தியுடனும், அன்புடனும் அவர் தாயார் 'பாயம்மா' அளிப்பது வழக்கம். என் தந்தை அந்த சிறிய வீட்டின் மேலறையில் எழுதிய கவிதைகள் பல.

ஸ்ரீ குப்புசாமி ஐயரின் மருமகன் ஸ்ரீ அருஞசலம் தமது மாமன் வீட்டாருக்குத் தெரியாமல், குமாஸ்தா சுந்தரேச ஐயர் மூலமாக பல தடவை பண உதவி செய்திருக்கிருர். இரவில் வெகு நேரத்திற்கு பிறகு, ஆள் அடையாளம் தெரியாமலிருப்பதற்காக மேல் வேஷ்டியை தலையில் கட்டி முகத்தை மறைத்துக் கொண்டு, எங்கள் வீட்டுக்கு வந்து வெகு நேரம் என் தந்தையிடம் உபதேசம் பெற்றுச் செல்வார்.

'இடிப்பள்ளிக்கூடம்' என்று என் தந்தை 'தராசு' என்ற கட்டுரைகளில் குறிப்பிட்டிருக்கும் வாத்தியார் ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் வீட்டு வாயில் திண்ணைதான் அவர் சந்தோஷமாகப் பேசி நண்பர்களுடன் வாக்கு வாதம் நடத்திக் களித்த இடம். புதுவையிலுள்ள 'கொலழ்' என்னும் பிரஞ்சுப் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராக இருந்தார். அதனுல் பள்ளிக்கூட ஓய்வு நாட்களில்தான் 'இடிப் பள்ளிக்கூட சங்க'க் கூட்டம் நடைபெறும்.

புதுவையில் அந்த நாளில் 'வெள்ளைக்காரத் தெரு' என்று சொல்லி வந்ததைப் போல 'கிருஸ்துவத் தெரு' ஒன்றும் உண்டு. அதிலிருந்து சில இளைஞர்கள் என் தந்தையாரின் உபதேசத்தைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கேட்பதற்காக எங்கள் வீட்டுக்கு வருவதுண்டு. அதில் ஸ்ரீ அந்துவான் என்று ஒருவர் இருந்தார். முதலாவது உலக மகா யுத்தத்தின் போது புதுவையிலிருந்து கட்டாயமாக பட்டாளத்தில் சேர்ந்து தேச சேவை செய்ய வேண்டி வந்த வாலிபர்களில் அவரும் ஒருவர். புதிதாக மணமுடித்திருந்த தமது இள மனைவிக்குத் தேறுதல் கூறி தமக்கு சந்தோஷமாக விடையளிக்கச் செய்யும்படி என் தந்தையாரிடம் கூட்டி வந்தார். என்னே அவர்களின் பக்தி, நம்பிக்கை! என் தந்தையின் ஆசீர்வாதம் கிடைத்தால் தனது கணவர் சௌக்கியமாகத் திரும்பி வந்து விடுவாரென்று அப்பெண் பூரணமாக நம்பினாள் என் தந்தையும் அவர்களை ஆசீர்வதித்துத் தேறுதல் கூறியனுப்பினார். அவ்வாறே ஸ்ரீ அந்துவான் பிரான்ஸிலிருந்து திரும்பவும் வந்து விட்டார்.

ஸ்ரீ பொன்னு முருகேச பிள்ளையின் மூத்த குமாரரான ஸ்ரீ ராஜாபாதர் மேல்படிப்புக்காக பிரான்சுக்கு போனார். படிப்பு முடியுந் தருவாயில் யுத்தம் ஆரம்பமாயிற்று. யுத்த சேவையில் ஈடுபட்ட தம் குமாரனை நினைத்து ஸ்ரீ பிள்ளை மனமேங்கினார். தம் அருமை மகனைப் பலகாலம் பிரிந்திருக்க நேர்ந்த விதியை நொந்து கொண்டு மிக்க சிரமத்துடன் தம் நாட்களைக் கழித்து வந்தார். கடைசியாக விடுமுறை கிடைத்து உடல் நலமற்ற தன் தந்தையைப் பார்கக வருவதாக ராஜாபாதரிடமிருந்து செய்தி கிடைத்ததும் ஆவலுடன் நாட்களை யெண்ணிக் காத்திருந்த ஸ்ரீ பிள்ளையவர்க்குத் தம் மகன் ஏறி வரும் கப்பல் உடைந்து விட்டதாகச் செய்தி வந்தவுடன் எப்படி இருந்திருக்கும்? ஸ்ரீ ராமனை காட்டிற்கு அனுப்பிய தசரதரைப் போல துடி துடித்துப் படுக்கையில் வீழ்ந்தார். அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படாமலிருக்கும்படி அந்தக்கப்பல் உடையவில்லையென்று ஒரு பொய்த் தந்தியும் தயாரித்துக் கொணர்ந்து காண்பித்தார்களாம். ஸ்ரீ பிள்ளையவர்கள், 'என் தந்தை சொன்னால்தான் நம்புவேன்' என்று சொல்லி விட்டாராம். தர்ம சங்கடத்தில் மாட்டிக்கொண்டார் என் தந்தை. ஒருபறம் புத்திரசோகத்தில் உயிரிழக்குந்தருவாயிலுள்ள நணபர். மறுபுறம் எது நேர்ந்த போதிலும் பொய் சொல்வதில்லையென்ற விரதம் பாரதப் போரிலே, துரோணாச்சாரியார் நம்பும் பொருட்டு ஒரு பொய் சொல்லும்படி கட்டாயப் படுத்தப்பட்ட தரும புத்திரர் 'அஸ்வத்தாமா ஹத: குஞ்சர:' (இறந்தான் அஸ்வத்தாமா என்ற யானை) என்று சொல்லியதைப் போல, 'கப்பலே கவிழ்ந்தாலும் பராசக்தியருளால் நம் ராஜாபாதருக்கு ஒரு கெடுதலும் நேராது, அதற்கு நான் ஜவாப்தாரி' என்று தேறுதல் கூறினாராம். அதனால் சிறிது சாந்தமடைந்தபோதிலும் திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியினால் நரம்புத் தளர்ச்சியேற்பட்டு சில நாளைக்குள் ஸ்ரீ முருகேச பிள்ளை உயிர்துறந்தார். என் தந்தையின் வாக்கு பொய்த்துப் போகவில்லை. கப்பல் உடைந்த போதிலும், உயிர் தப்பி ஸ்ரீ ராஜாபாதர் சௌக்கியமாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுவை வந்து சேர்ந்தார். மகா குணவதியான அண்ணியம்மாளின் பிரார்த்தனைகள் வீண் போகுமா? என் தந்தையிடம், அண்ணியம்மாளுக்கு அதிக பக்தியும் நம்பிக்கையும் உண்டு. 'ஐயர், 'நான் ஜவாப்தாரி; பராசக்தி காப்பாற்றுவாள்'என்று சொல்லி விட்டார். என் மகனுக்கு ஒரு குறைவும் வராது" என்று திட நம்பிக்கையுடன் கடவுளைப் பிரார்த்தனை செய்து வந்தாராம். 'நம்பினோர் கெடுவதில்லை, இது நான்கு மறைத் தீர்ப்பு' என்று என் தந்தை கூறியிருக்கிறார்.

ஸ்வாமிநாத தீக்ஷிதர்

என் தந்தையாரின் புதுவை நண்பர்களில் ஸ்வாமிநாத தீக்ஷிதர் குடும்பத்தார் ஒரு வகையில் தனிப்பெருமை வாய்ந்தவர்கள் எனலாம். ஸ்ரீ தீக்ஷிதர் வீட்டில் அவரது மனைவி, மக்கள், குஞ்சு குழந்தைகள் வரை என் தந்தையிடம் எல்லையற்ற அன்பும், பக்தியும் கொண்டவர்கள். என் தந்தையாரோடு அளவளாவி, அவர்தம் பேச்சின் ஆழ்ந்த கருத்துக்களை, அவர்தம் கலகலவென்னும் சிரிப்புடன் பொங்கும் ஹாஸ்ய மொழிகளைச் கேட்டு ஆனந்தமடையும் பாக்கியம் பெற்றவர்கள். ஸ்ரீ ஐயர் கண்ணன் பாட்டு முகவுரையில் கூறியிருப்பது போல, 'கற்பனை கர்வத்தோடும், சிருஷ்டி உத்ஸாகத்தோடும்' புதிதாகப் புனைந்த பாட்டுக்களை என் தந்தை அவரது தனி 'பாணி'யிலே பாடும் போது கேட்டுப் பரவசமடைந்தவர்கள் ஸநாதநக் கொள்கையிற் தலை சிறந்து வைதீகக் குடும்பத்தில் பிறந்தவரான ஸ்ரீ தீக்ஷிதரின் மனைவியார் ஒரு முறை என் தாயிடம் 'செல்லம்மா, பாரதியைப் பூணூல் மட்டும் போட்டுக்கொள்ளச் சொன்னால் நம மகாதேவனுக்குத் தங்கம்மாளை மணமுடித்து விடலாம். அவர் ஸம்மதிக்க மாட்டாரே; என்ன செய்வது' என்று சொல்லி வருந்தியதைக் கேட்டிருக்கிறேன். எங்கள் குடும்பப்படமும், என் தந்தையாரின் பாடல்கள் சிலவும் அவரது கையெழுத்துப் பிரதியிலேயே அவர்கள் வசம் உள்ளது. அவற்றை உள்ளன்போடு போற்றிப் பாதுகாத்து வருகிறார்கள்.

சின்னம்மா பாட்டி

ஒரு சமயம், எனக்குக் கடுமையான ஜுரம் வந்தபோது என் தந்தையாரின் சிறிய தாயார் சின்னம்மாளுக்குத் தந்தியனுப்பி அவரைப் புதுவைக்கு வரவழைத்தார்கள். சின்னம்மா பாட்டிதான் சிறு வயதில் தாயை இழந்த என் தந்தைக்குத் தாயார் ஸ்தானத்தில் இருந்து அவரை வளர்த்தவர். என் தந்தையுடன் கூட முதலில் எட்டயபுரத்திலும், சென்னையிலும், பின் புதுவையிலும் கூட வசித்து வந்தவர். தம் மகன் செய்யும் காரியங்கள் உலக வழக்கு ஒப்ப இல்லாததைக் கண்டு மிக்க மனம் வருந்துவார். 'என்னதான் படித்திருந்தால் என்ன? பிள்ளைக்கு புத்தி இல்லையே! செய்த குற்றத்தை உடனே வெளியில் சொல்ல வேண்டுமா? மாமிசம் தின்பவர்கள் எலும்பைக் கோத்து மாலையா போட்டுக்கொள்கிறார்கள்?' என்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொல்லி வருத்தப்படுவார். 'குழந்தைக்கு உடம்பு குணமில்லை, உடனே வரவும்—செல்லம்மா' என்று தந்தி கொடுத்திருந்தார்களாம். செல்லம்மா தந்தி கொடுத்திருப்பதால் குழந்தையென்பது சின்னம்மா சித்தியின் மகனைக் குறிக்கிறது. அதனால் என் தந்தைக்குத்தான் உடம்பு குணமில்லையென்று யாரோ இங்கிலீஷ் பாஷை நன்ருகப் படித்த பிரகஸ்பதி அர்த்தம் சொன்ஞராம். அதைக் கேட்டு மனக் கலக்கத்துடன் உடனே அவசரமாக புதுவைக்கு வந்தார். வந்த வுடன் என் தந்தை வீட்டு வாசலில் நிற்பதைக் கணடு 'ஐயா, உன்னை உயிருடன் காண்பேனு என்று ஆத்திரத்துடன் ஓடி வந்தேன் யாரோ பொய்த் தந்தி கொடுத்து என்னை அலைக்கழியச் செய்தார் களே' என்று கூறி 'ஓ'வென்று அலறி அழுதுவிட்டார். 'சின்னம்மாச் சித்தி, தந்தி பொய்யில்லை; குழந்தைக்கு இன்னும் உடம்பு குணமாக வில்லை. ஆனல் அது உன் குழந்தையல்ல, என் குழந்தை' என்று சொல்லி என் தந்தை சமாதானப்படுத்தினுராம்.

புதுவை அடுத்துள்ள உப்பளத்தில் 'தேசமுத்துமாரியம்மன் கோயில்' என ஒரு மாரியம்மன் கோயில் உண்டு. அதில் ஒரு வள்ளுவ இளைஞன் பூஜை செய்து வந்தான். அவன் தேவி பூஜை செய்கிருன். பிராமணத் தொழில் நடத்துகிருன்' என்று என் தந்தை அவனுக்கு வேதமுறைப்படி பூணூல் போட்டு வைத்தார். அந்த தேச முத்து மாரியம்மன் பேரில் ஒரு பாட்டு எழுதினர்.

'ஒருவன் தன் செய்கையினுலும் தர்மத்தினுலுமே தனது ஜாதிக்கு உரியவனுகிருன். பிறவியினுல்ல' என்பதே என் தந்தை யாரின் கருத்து. அதை ஞானரதத்தில் கண்வரிஷிகள் உபதேச மூலமாக தெளிவாக விளக்கியிருக்கிருர். அது பின்வருமாறு :—

> 'ஸ்வாமி, ஒருவன் பிறக்கும்போதே பிராமணனுகப் பிறக்கிருனு? அல்லது, பயிற்சியால் பிராமணனுகிருனு?'
>
> 'பிறக்கும்போது, மனிதர்களெல்லாம் மிருகங்களாகப் பிறக்கிருர் கள். பயிற்சியினுலும் குணகர்மங்களினுலும் வெவ்வேறு வர்ணத்தினராகின்ருர்கள். 'சாதுர் வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்மவிபாகச:'
>
> 'ஸ்வாமி இந்த விதி அனுபவத்தில் இருக்கிறதா?'

'ஆம்; என் பிதா க்ஷத்தியர்; நான் பிராமணன், என் மக்கள் பனி ரெண்டு பேரில் ஒருவனை மட்டுமே பிராமண கார்யங்களுக்குத் தேர்ந் தெடுத்திருக்கின்றேன். மற்றவர்களையெல்லாம் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய என்ற மூன்று வர்ணங்களின் காரியங்களுக்கு அவரவர்களின் தகுதி, ஸ்வபாவம் முதலியவற்றைக் கருதி உரியவாறு பயிலும்படி செய்திருக்கின்றேன்.'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'மண்ணுலகத்திலே, பாரத தேசத்தில்தான் வர்ணாச்ரம பேதங்கள் இருக்கின்றன. அங்கே, தாம் சொல்வது போல் நடக்கவில்லையே?'

'பாரத தேசத்தில்தான் வர்ணாச்ரம பேதங்கள் இருப்பதாகச் சொல்வது பிழை. ஸகல தேசங்களிலும் உண்டு. ஆனால் பாரத தேசத்தில், வர்ணாச்ரம நெறி சீர் கெட்டுப்போய் இருக்கிறது. பூர்வத்திலே, பாரத தேசத்தில், வர்ணாச்ரம நெறி நான் சொல்வது போலத்தானிருந்தது. அதற்கு அந்நாட்டிலுள்ள வேதங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள், இதிஹாஸங்கள் முதலிய ஸகல நூல்களும் ஸாக்ஷி. இப்போது. பாரதநாட்டைத் தவிர மற்றெல்லா நாடுகளிலும் பகவான் சொல்லிய முறைதான் நடைபெற்று வருகிறது. பாரத நாட்டில் அம்முறை தவறிவிட்டது. அதுபற்றியே, அந்நாட்டினர் வறுமை நோய், அடிமைத்தனம் என்ற இழிவுகளிலே வீழ்ந்திருக்கிறார்கள்?

'பிராமண தர்மங்களை எனக்கு போதனை செய்யவேண்டும்,

'ஸங்கிரஹமாகச் சொல்லுகிறேன் பிராமண வர்ணத்தார் ஒரு ஜன ஸமூஹத்தின் அறிவுச் செல்வத்திற்குக் காவலாளிகள்; அறிவுப் பயிருக்கு உழவர்கள். அவரவர் தத்தம்மால் இயன்ற சாஸ்திரங்களைப் படித்து வைத்துக் கொண்டு அவற்றை வெவவேறு வர்ணத்தாருக்கு உரிமை நோக்கிக் கற்பிக்கவேண்டும். அவ்வாறு கற்பிப்பதற்கு, தமது உணவு மட்டிற்கு மேற்பட்ட எவ்விதமான கிரயமும் வாங்கலாகாது. 'எவன் வீட்டில் மறு நாள் ஆகாரத்திற்கு இன்றே நெல் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறதோ அவன் பிராமணன் ஆகமாட்டான்' என்று யாக்ஞவல்கியர் சொல்லுகிறார்.'

'ஜனங்களுக்கு ஏற்படக்கூடிய துன்பங்களுக்கெல்லாம் அறிவின்மையே காரணமாதலாலும், அந்த அறிவின்மை ஏற்படாமற் பாதுகாப்பதே பிராமணன் கடமையாதலாலும், பிராமணர்களே பொறுப்பாளிகளாவர். ஜனங்களுக்குள் சூத்திர தர்மம் குறைந்து போனால், அப்போது பிராமணர் சூத்திர தாம போதனையையே முதல் தொழிலாகக் கொண்டு நாட்டில் உண்மையான சூத்திரர்களை அதிகப்படுத்த வேண்டும். வைசிய தர்மம் குறைந்தால், அறிவு வகுப்பினர் தாம் வைசிய நூல் கற்பதும் கற்பிப்பதுமே முதற் கடமையாகக் கொண்டு கையில் அகப்பட்டவர்களையெல்லாம் மெய்யான வைசியராக்கி விடுவார்கள். க்ஷத்திரிய தர்மத்திற்கும், பிராமண தர்மத்திற்கும் ஊனம் வர இடங்கொடுக்கவே கூடாது. க்ஷத்திரிய பிராமண தர்மங்களுக்கு ஊனம் நேரிடுமாயின், ஜன ஸமூஹம் முழுவதும் க்ஷீணமடைந்து போய்விடும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded With Compliments From
THE DEPARTMENT OF CULTURE
GOVERNMENT OF INDIA.

செல்லம்மா பாரதி
(பாரதியாரின் மனைவியார்)

தங்கம்மா பாரதி
(பாரதியாரின் மூத்த புதல்வி)

அப்பாதுரை அய்யர்
(நூலாசிரியையின் தாய் மாமன்)

சகுந்தலா பாரதி
(நூலாசிரியை)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிவேதிதா தேவி



வ. வே. சு. அய்யர்

பொன்னு முருகேச பிள்ளையும்
மனைவியாரும்



கவிஞர் பாரதி தாசன்
(கனக சுப்புரத்தினம்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'அப்படி ஏதேனும் மஹாவிபத்து நேரிடக்கூடிய தருணத்தில் 'அவரவர் தத்தம் தர்மங்களை மட்டுமே கருதி நிற்போம்; மற்றவர் தர்மங்களை நாமேன் கருதவேண்டும்' என்று சும்மா இருத்தல் கூடாது. வீடு தீப்பற்றி எரியும்போது, தகப்பன் தனது காரியஸ் தலத்திற்கும், மகன் பள்ளிக்கூடத்திற்கும், பெண்கள் பூஞ்சோலைக்கும், தாய் கோயிலுக்கும், வேலைக்காரன் காய்கிழங்குகள் வாங்கும் பொருட்டுக் கடைக்கும், உல்லாஸமாகப் புறப்பட்டுக் கொண்டிருக்க லாமா? நெருப்பை அணைக்க முயலவேண்டியது எல்லோருக்கும் கடமை. கார்யஸ்தலத்திற்குப் போவதைப் பற்றி பிறகு பார்த்துக் கொள்ளலாம்; கோயில்களையும், பள்ளிக்கூடங்களையும் கள்வன் கொண்டு போய்விட மாட்டான்; மறுநாள் கவனித்துக் கொள்ள லாம். விளையாட்டுக்கு பூக்கொய்து வருதல் பெரிதன்று; காய் கிழங் குகள் பெரிதில்லை; வீட்டிலே பற்றியிருக்கும் நெருப்பை அணைப்பது தான் பெரிது. அதற்குத்தான் எல்லோரும் பாடுபட வேண்டும். கலியிலே வர்ண வேறுபாடுகள் பொய்; வெறும் ஏமாற்று. பாரத நாட்டைப் பற்றி நீர் கேட்டீர். பாரத நாட்டில் இப்போது கலியுகம். ஆனால் இன்னும் இரண்டு மூன்று தலைமுறைகளில் கலியுகம் நீங்கிக் கிருதயுகம் பிறக்கப் போகின்றது. அப்போது, அந்த நாட்டிலே உண்மையான வர்ணாச்ரம பேதங்கள் ஏற்பட்டு விளங்கும். இப்போ திருக்கும் வஞ்சனைப் பேதங்கள் நீங்கிவிடும்.

'பரமார்க்கத்திலே, பிரம்மஞானமுடையவனே பிராமணன் என்ற பெயருக்குத் தகுதியுடையவனும். 'வஜ்ரஸூசிகை என்ற உபநிஷத் திலே இதை நேர்த்தியாக எடுத்து விளக்கியிருக்கின்றார். ஆனாலும், வியவஹாரத்திலே உலகத்தாருக்கு அறிவுப் பயிற்சி கொடுக்கும் வகுப்பினர் பிராமணராவார்கள். ஸகல விதமான நூல்களிலும் பயிற்சி கொண்டிருத்தல், அதனை உலகத்தாருக்குப் போதனை செய்து உலகத்துத் தொழில்களெல்லாம் இனிது நடப்பதற்கு ஆதரவாயிருத் தல், லௌகிகப் பெருமைகளிலே ஆசையின்மை இவையே, சுருங்கச் சொல்லுமிடத்து, பிராமண தர்மத்தின் ஸாராம்சங்களாகும்!'

ஆழ்ந்த வேதாந்த ஆராய்ச்சிக்குப் பிறகே, என் தந்தை கடவுள் பக்தியைப் பிறருக்கு உபதேசிக்க ஆரம்பித்தாராம். கடவுள் நம்பிக் கையை கேள்வி கேட்டும் இளம் பிராயத்திலே தமது பெரிய தாத்தாவான அப்பாசாமி சிவனுடன் நாஸ்திக வாதம் செய்து பெரிய வரை தர்க்கத்தில் வென்று விடுவாராம். அத்தகைய சந்தர்ப்பங்களில் தாத்தாவுக்குப் பெருங்கோபமுண்டு பேரனை அடிக்க ஓடி வருவாராம். பின்னும், அடுத்த நாள், மறுபடி எவ்விதமேனும் பேரனுக்குக் கடவுள் நம்பிக்கை ஏற்படுத்தவேண்டுமெனும் நல்ல எண்ணத்தால் வாதம் செய்யத் தொடங்குவாராம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அப்பாசாமி தாத்தா ஒரு முறை புதுவைக்கு வந்திருந்தாராம். தமது பேரன் பெரிய பத்திராதிபராக இருப்பதாகக் கேள்வியுற்றிருந்தபடியால், காலை கண்விழித்தவுடன் 'ஐயா, (தாத்தா என் தந்தையாரை செல்லமாக 'ஐயா' என்று அழைப்பது வழக்கமாம்) அந்தப் பரிசாரகனை வரச் சொல்,' என்று கட்டளையிட்டாராம். என் தந்தை சிரித்துக்கொண்டே 'தாத்தா, நம் வீட்டில் பரிசாரகன் கிடையாது. செல்லம்மாள் தான் சமையல் செய்கிறாள்.' என்று சொன்னார். தாத்தாவுக்கு ரொம்ப வருத்தமாகிவிட்டது, பேரனின் ஏழ்மை நிலையைக் கண்டு. பக்கத்தில் ஸ்ரீ வ. ராமசாமி ஐயங்கார் (வ.ரா) இருந்தாராம். தாத்தா என் தந்தையிடம் 'ஐயா, இந்தப் பையனை (வ.ரா.வை சுட்டிக் காட்டி) பூஜைப் பாத்திரங்கள் தேய்க்கச் சொல்லு' என்று சொன்னாராம். என் தந்தைக்கு வ.ரா.வைப் பாத்திரம் தேய்க்கும் வேலையினின்றும் தப்புவிக்கச் சட்டென ஒரு உபாயம் தோன்றியது. தாத்தாவிடம் ரகசியமாக, 'தாத்தா, அவர் ஒரு வைஷ்ணவர்' என்று சொன்னாராம். 'வைணவனா, சிவ சிவா' என்று தாத்தா ஒதுங்கிப் போய்விட்டாராம். வீர சைவரான அப்பாசாமி சிவன் பூஜைப் பாத்திரங்களை ஒரு வைஷ்ணவர் தொடலாமா? நல்ல காலமாக வ.ரா வுக்கு இவ்விஷயம் தெரியாது.

வ. ரா. புதுவையில் இருந்த நாட்களில் நான் சிறிய குழந்தையாக இருந்தபடியால், என் தநதையிடம் அவர் பழகிய விதத்தைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. முதன் முதலாக அவர் எழுதியனுப்பிய 'ஸுந்தரி அல்லது அந்தரப் பிழைப்பு' என்ற தமிழ் நாவலை வெகு ரஸமாகப் படித்து அனுபவித்தேன். அதில் சில பகுதிகள் மனப்பாடமாக இன்னும் ஞாபகத்தில் இருக்கின்றன. 'கடிதம் எழுதாத க ஐயர் அவர்களுக்கு, என சாவித்திரி எழுதிய கடிதமும், 'ஸ்வாமி ரெண்டு கைனாலே தந்த திரவியமே' என ஸுந்தரி, முகுந்தனுடைய குழந்தையைத் தாலாட்டுவதும், குறிப்பிட்ட வேளையில் பசியில்லாமல் சாப்பிடும் மனித கோடிகளில் ஒருவரான மார்க்கண்டனும், பூமரத் தாங்குடி கிராமமும், ஸ்வாமிகள் மகள் அமிர்தமும், ஸுந்தரமும், ஏன் புஸ்தக முழுதுமே கிட்டத்தட்ட மறக்கவில்லை. (பின்னாளில், கணக்கற்ற தமிழ் நாவல்களும், ஆங்கில நாவல்களும் படித்த போதிலும் சின்னஞ்சிறிய வயதில் படித்த புஸ்தகங்கள் மட்டும் மறப்பதில்லை). பின்னர், அவர் 'சுதந்திரன்' என்ற பத்திரிகை சில நாள் நடத்தியபோதும் அதில் சில பிரதிகள் வாசித்ததுண்டு.

பின்னாளில் அநேகமாக (கையில் காசில்லாத காரணத்தினாலே என்றுதான் நினைக்கிறேன்) வ. ராவுக்கும் என் தந்தைக்கும் நெருங்கிய தொடர்பில்லாமல் போய்விட்டது.

அப்பாசாமி சிவன்

அப்பாசாமி தாத்தா பாட்டுக்களும் எழுதியிருக்கிறார். அவைகளை மகா புத்திசாலியான தம் பேரனிடத்தில் பாடிக்காட்டி அவனது மதிப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யையும் புகழ்ச்சியையும் பெறவேண்டுமெனும் அவா. தமது வாக்கு வன்மையை இயற்கையாகவே அமைந்திருக்கும் கவித்திறனுடைய தமது பேரன் பாராட்ட வேண்டுமெனும் எண்ணத்தினால், பெருமையுடன், ஒரு சமயம் தான் முருகன் மீது எழுதியுள்ள பாட்டு ஒன்றைப் பாடிக் காண்பித்தாராம். நிந்தாஸ்துதியாகப் பாடல்கள் எழுதுவதில் அவருக்கு விருப்பம் அதிகம்.

'குஹனே, ஷண்முகனே—குறத்திமாதை
மணம் செய்ததென்ன. (குஹனே)

இஹபரங்களில் இருக்கும் வேந்தர் மாதுகள்
உன்மீது மையல் கொண்டிருக்க (குஹனே)

வேத வேதாந்த நாதப் பொருளே—வேதியர்குலம்
வேண திருக்கப் பேதைமான் மகள் ஜோதி வள்ளியை

மாதவன் மனமகிழக் கொண்டாயே—
வேதா, இது வேத விதியோ—

வேடர்சாபமகற்றிடவோ
சுந்தரமே, சுகவடிவே, சூக்ஷ்ம பஞ்சாக்ஷரப் பொருளே
தந்திரங்கள் செய்து கந்தர் வதுவை செய்திட
பதுமினி பெண்ணே (குஹனே)

'ஐயா, அன்று ஸ்வாமி ஸந்நிதானத்தில் இந்தப் பாடலைப் பாடினேன். வேதா, வேத விதியோ என்றதைக் கேட்டவுடன் ஒரு பக்தன் அப்படியே மூர்ச்சை போட்டு விழுந்தான்' என்றாராம்.

ஸ்ரீ சுப்பிரமணிய சிவா நடத்திவந்த 'ஞான பானு' என்ற பத்திரிகைக்கு என் தந்தையார் விஷயதானம் செய்து வந்தார். ஞானபானு பழைய பிரதிகள் யார் வசமாயினும் இருக்குமானால் அந்த அன்பர்கள் அவற்றைக் கொடுத்துதவினால், பல நல்ல கதைகள் கட்டுரைகள் தமிழ் இலக்கியத்திற்குக் கிட்டும். ஞானபானுவில் ஒரு சமயம் என் தந்தை 'சின்ன சங்கரன் கதை' யென்ற தலைப்புடன் ஒரு பெரிய கதை எழுதியிருந்தார். அதில் அவருடைய நகைச்சுவையை நன்றாக அனுபவிக்கலாம். கதையில் வரும் ஜமீன்தார் ஓர் நல்ல தமிழ் அறிஞர். அவருக்குப் பாடல்கள் எழுதுவதில் விருப்பமதிகம். நன்றாக ருசி பார்த்துச் சாப்பிடுவதிலுள்ள விருப்பத்திற்கடுத்தபடியாக தமிழில் மோகங்கொண்டவர். ஜமீந்தார் ஒரு பாட்டு எழுதித் தமது புலவர் சபையில் பாடிக் காண்பித்தாராம். பாடல் பின்வருமாறு :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ராகம் : அடாணு

'மானே கையில்தானே தரித்தானே—ஒரு மாதை தரித்தானே
மழுவை தரித்தானே
கோனே சிவனே குருவே யருவே—மெய்ஞான
மானமோனமான (மானே]

நாதா—தாமரைப்பாதா
எத்தனை மோக்ஷகதியினில் சேர்த்திட இன்னமும் ஆகாதா
—உன்னை
சொந்த குலதெய்வம் என்று நிதம்துதி சொன்னது
போதாதா
விந்தையுடன் என்னை ஆண்டிட உனக்கு மெத்த மெத்தவாதா
ராமாஸாமிக் கவுண்ட ராஜபோஜனுக்கருள் செய்யும் பாதா'

அதில் 'ராமசாமிக் கவுண்ட ராஜபோஜனுக்கருள் செய்யும் பாதா' என்று, இரண்டாமுறை தமது முத்திரைவரும் அழகைச் சொல்லிக் காண்பித்து அளவிலா ஆனந்தமடைந்தாராம்.

தமிழில் அர்த்தமில்லாத பக்திப் பாடல்கள் எத்தனை நிறைந் திருந்தது என்பதை விளக்கவே தாம் அம்மாதிரி ஒரு பாடலை எத்தனை சுலபமாக அமைக்க முடியுமென்று பல தடவை புலவர்க ளிடையே தர்க்கம் வரும்போது தமது சிறு பிராயத்தில் நிரூபித்திருக் கிறார். பல்லை உடைக்கும் கடின நடையுடைய தமிழ் இலக்கியங்களை அவர் கேலி செய்யத் தொடங்கினால் நேரம் போவதே தெரியாது. ஆறுமுக நாவலர் எழுதிய கந்தபுராணப் புஸ்தகம் ஒன்று எங்கள் வீட்டிலிருந்தது. "புராணக் கதைகளை முழுவதும் வேதவாக்காக நம்பக்கூடாது. அவைகள் வெறும் அழகிய கற்பனைகள் என்ற ஹோதாவில் படித்தால் மிக்க ரஸமாகயிருக்கும்" என்பார். யாராவது நம்பக்கூடாதபடி பொய் சொன்னால், 'இந்தப் புளுகு கந்த புராணத் தில் கூடக் கிடையாது' என்று கேலி சொல்வார். 'காதல் என்றால் என்ன? என்று ஒரு வாலிபர் ஒரு சமயம் என் தந்தையைக் கேட்க, அவருக்கு விரிவாக எடுத்துச் சொல்லிய காதலின் தன்மையை என் தந்தை 'பாரதி அறுபத்தாறு' என்ற பாடல்களில் 'காதலின் புகழ்' என்ற தலைப்பில் விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

என் தந்தை 'பாரதி நாலாயிரம்' என்றொரு நூல் எழுதவேண் டித் தொடங்கினார். அது அறுபத்தாறு பாடல்களில் முடிக்க வேண் டிய நிலைமை வந்துவிட்டது. இன்னும் பலபல விஷயங்களையெல் லாம் எழுதவேண்டினார். கடவுள் அவருக்குப் போதிய ஆயுள் கொடுக்கவில்லை. 'காதலைப்பற்றி சிறிய குழந்தைகளுக்கு என்ன தெரியும்? தங்கம்மாவும், பாப்பாவும் இருக்கும்போது அது பற்றிப் பேசலாமா?' என்று ஒரு நண்பர் கேட்டார். என் தந்தை சொல்கிறார்:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'ஸ்வாமி, குழந்தைகள் மனதையறியும் சாத்திரம் படித்திருந்தால் இப்படிக் கேட்க மாட்டீர். மற்றவரைப் பற்றி நான் சொல்ல வரவில்லை. என்னைப்பற்றிய வரையில் எனக்குப் பத்துவயதிலேயே காதல் என்னவென்று தெரிந்துவிட்டது. முக்கியமாகச் சொல்ல வேண்டியவற்றை மறைத்து வைத்துத்தான் மண்ணுகைப் போயிற்று, என்ருர். 'கனவு' என்ற தலைப்பில் என் தந்தையார் எழுதியிருக்கும் சுயசரிதைப் பகுதியில் தமது இளம் பிராயத்துக் காதலை மறைக்காமல் குறிப்பிட்டே பாடியிருக்கிருர். இந்தப் பாடலில் அவர் குறிப்பிடும் பிள்ளைப்பிராயத்துக்காதலை, அவர் கலைமகள் மீது கொண்ட காதலென மயங்குவது கூடாது. அவர் பிள்ளைப் பிராயத்திலே கலைமகள் மீது கொண்ட மீது கொண்ட காதலையும, பின்னர் லக்ஷ்மி மீது கொண்ட மோகத்தையும், கடைசியில் ஆதிபராசக்தி, மகாகாளி மீது கொண்ட காதலேயும், முறையே 'மூன்று காதல்' என்ற பாடலில் தனியே எழுதியிருக்கிருர். பிள்ளைப் பிராயத்தில் கலைகமள் மீது கொண்ட காதலை அவர் வர்ணித்திருப்பதையும், ஸ்வசரிதையில் பத்தாண்டில் காதலித்த பெண்ணை வர்ணித்திருப்பதையும் ஒப்பிட்டால் உண்மை தெளிவாகும்.

தான் கலைத்தேவியின்மீது கொண்டிருந்த காதலை என் தந்தை எட்டையபுரத்தில் முன்னாளில் வசித்து வந்தபோது எழுதிய 'வாராய் கவிதையாம் மணிப்பெயர்க் காதலி' என்ற பாட்டிலும் தெளிவாகக் கூறியிருக்கிருர்.

பாலைவனக் கதைகள்

ஒரு சமயம், புதுவை நகரை பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயருக்கு விற்றுவிடுவதாகப் பேச்சு நடந்தது. அப்பொழுது அங்கிருந்த 'ஸ்வதேசிகளை' ஆங்கிலேயரிடம் காட்டிக்கொடாமல், பிரெஞ்சுக் காரருக்குச் சொந்தமான அல்ஜேரியாவுக்கு அனுப்புவதாக பிரெஞ்சு கவர்னர் ஒப்புக்கொண்டார். அவ்வாறே போவதற்கு ஸ்ரீ வ.வெ.சு. ஐயர், ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ ஸ்ரீனிவாஸாசாரியார் எல்லோரும் ஸம்மதித்து விட்டார்கள். என் தந்தை மட்டும், தன் மனைவி மக்களையும் தன்னுடன் வர அனுமதித்தால்தான் போக முடியும்; இல்லாது போனுல் விதிப்படி நடக்கட்டுமென்று, 'நான் புதுவையிலேயேதானிருப்பேன்' என்று கூறினுர். அவ்வாறே அனுப்பவும் பிரெஞ்சுக்காரர் சம்மதித்து விட்டார்கள். கடவுளினருளால் புதுவையை விற்கவுமில்லை. நாங்கள் பாலைவனத்திற்குப் போகவேண்டிய அவசியமும் நேரவில்லை.

அல்ஜீரியாவுக்குப் போகவேண்டுமெனப் பேச்சு நடைபெற்ற போது என் தந்தை எங்களுக்குப் பாலைவனக் கதைகள், அராபியக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதைகள் பல சொல்வார். பாலைவனத்தில், மணற்காற்று வீசு வதையும், நாள் முழுதும் பரந்தவெளிமணலையே கண்டு பூத்துப் போயிருக்கும் பிரயாணிகளின் கண்களுக்குத் தோற்றமளிக்கும் கானல் நீர்த்தோற்றங்களும் எங்கள் மனக்கண்முன் அப்படியே உறைந்திருக் கும்படி அழகாகச் சொல்வார். 'கம்பளிச் சட்டையணிந்த அராபியர் அவற்றைத் தண்ணீரில் தோய்த்துச் சுத்தம் செய்யும் வழக்கம் கிடை யாது. ஒரு சட்டை நன்ருகக் கிழிந்து உபயோகமில்லாமற் போகு மளவும் அதைத் தண்ணீரில் சுத்தம் செய்யாமலே அணிந்திருந்து பின்னர் கொளுத்தி விடுவார்கள்' என்பார்.

கவிதை புனைவதும், கற்பனையுலகில் சஞ்சரிப்பதுமாகக் காலந் தள்ளி வந்த என் தந்தையாருக்கு நாளாக நாளாக மிக மனச்சங்கட மான நிலையேற்பட்டு விட்டது. அநேக நாட்களை மிகுந்த துன்பத் தோடும், மனத்துடிப்போடும், ஏது செய்வதெனத் தெரியாத, வேதனையுடன் கழிக்க ஆரம்பித்தார். நடுப்பகல் உச்சி வெயிலில் மேன்மாடத்தில் நின்று பாடுவார். அவர் மனது அந்த வேளைகளில் என்ன பாடுபட்டதோ யாரறிவார்? நண்பர்கள் உள்பட எல்லா வற்றையும் வெறுக்கத் தொடங்கினுர். ஒரு கவிதை எழுதவேண்டு மென எண்ணி அதை எழுதி முடிக்கும் வரையிலுள்ள கவியின் மன நிலையை பிரசவ வேதனைபபடும் ஸ்திரீயின் மனநிலைக்கு ஒப்பிடுவார் கள். குழந்தை பிறந்தவுடன் தன் வேதனை நீங்கி மிக்க ஆனந்தமும் ஆறுதலும் ஒருங்கே அடையும் அன்னையைப்போல. கவியும் தனது கவிதையைக கண்டு மகிழ்வெய்துகிருன். பல நாட்களாக யாதொரு பாட்டும் எழுதாமல் வேதனையுடன் கழித்தபின், ஒரு நாள், திடீரென, மறுபடி பாட்டெழுதுவதில் தேட்டம் ஏற்பட்டவுடன் தான், ஸரஸ்வதி தேவியை நினைத்து 'ஸரஸ்வதி ஸ்தோத்திரம்' என்ற பாடலைத் தந்தையார் எழுதினுர்.

என் தந்தைக்கு மனத்துன்பங்கள் சகிக்க முடியாமல் போனதற் குத் தக்க காரணங்களும் ஏற்பட்டிருந்தன. ஐரோப்பிய மகா யுத்தம் முடிந்துவிடும் நிலையில் தாம் கட்டிய மனக்கோட்டைகள் தகர்ந்து போனதைக் கண்டார். ஓயாத ஒழியாத மிடிமைத் துன்பம். என் தந்தை எழுதி வைத்திருந்த குறிப்புகள் ஒன்றில் பின்வருமாறு எழுதியிருக்கிருர் ;—

'பராசக்தீ இந்த உலகத்தின் ஆத்மா நீ. உனக்கு அறி வில்லையா? உனக்குக் காது கேட்காதா? நாள்தோறும் உன் மீது பாட்டுப் பாடுகிறேன். நான் கேட்கும் வரங்களையெல்லாம் கொடுத்து விடக் கூடாதா?

'முதலாவது எனக்கு என் மீது வெற்றி வர வேண்டும். குழந்தைக்கு ஜ்வரம் வந்தது நினது திருவருளால் குணமாய் விட்டது. இரண்டு மாத காலம் இரவும் பகலுமாக நானும் செல்லம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாளும் புழுத் துடிப்பது போலத் துடித்தோம். ஊண் நேரே செல்ல வில்லை இருவருக்கும். எப்போதும் சஞ்சலம் பயம், பயம், பயம்! சக்தீ, உன்னை வாழ்த்துகிறேன்.

'கடன்காரர் தொல்லையும் அத்துடன் வந்து கலந்தது. வைத்திய னுக்குக் கொடுக்கப் பணமில்லை. குழப்பம், குழப்பம் — தீராத குழப்பம்! எத்தனை நாட்கள்! எத்தனை மாதங்கள்! எத்தனை வருஷங்கள்!

'பராசக்தீ, ஓயாமல் கவிதை எழுதிக் கொண்டிருக்கும்படி திரு வருள் செய்யமாட்டாயா? கடன்களெலாம் தீர்ந்து, தொல்லையில்லாத படி என் குடும்பத்தாரும் என்னைச் சார்ந்த பிறரும் வாழ்ந்திருக்க. நான் எப்போதும் உன் புகழை ஆயிரவிதமான புதிய புதிய பாட்டுக் களில் அமைக்க விரும்புகிறேன்; உலகத்தில் இதுவரை எங்கு மில்லாதபடி அற்புதமான ஒளிச்சிறப்பும், பொருட் பெருமையும் உடைய பாட்டு ஒன்றை என் வாயிலே தோன்றும்படி செய்ய வேண்டும்.

'தாயே, என்னைக் கடன்கரர் ஓயாமல் வேதனைப்படுத்திக் கொண்டிருந்தால் நான் அரிசிக்கும் உப்புக்கும் யோசனை செய்து கொண்டிருந்தால் உன்னை எப்படிப்பாடுவேன்?'

என் தமக்கைக்கு வயது பன்னிரெண்டானவுடனேயே, நமது ஹிந்து பிராமண ஸமுதாய முறைப்படி மிக்க அதிக வயதாகி விட்டது! என் தந்தையார்க்குத் தாய் தந்தை இல்லை. அதனால் அவர் தம் மனம்போல சரியான வயது வந்த பிறகே தம் மகளுக்கு மண முடிப் பேன் என்று சொல்வதை அவர் பந்துக்கள் யாவரும் தடுக்க முடிய வில்லை. என் தாயாரின் வீட்டிலே அவர்கள் பெரிய குடும்பம. ஐந்தாறு சகோதர சகோதரிகள். தகப்பனார் தாயார் அவர்கள் அவசியம் தம் ஜாதி முறைப்படி மணமுடிக்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்தத் தொடங்கினார்கள். என் தந்தையாரின் மன நிலையோ பலவாறு சலிக்கத் தொடங்கிற்று. இந்த நிலையில் காசி யிலிருந்து என் தாயாரின் தமக்கையார் (என் பெரிய தாயார்) பார்வதி உடம்பு குணமில்லாமல் கடையம் வந்திருப்பதாகச் செய்தி வந்தது. என் தாயார் தன் தமக்கையைப் பார்க்க உடனே போக வேண்டுமென விரும்பினாள். என் தந்தையார் அது மிக்க அவசிய மானது என்பதை உடனே ஒப்புக்கொண்டார். ஆனால் தம் குமாரி தங்கம்மாளுக்குத் தன் விருப்பமும், அனுமதியில்லாமல் மண முடித்து விடுவார்கள்; அதனால் அவளை கடையத்துக்கு அழைத்துப் போகக்கூடாது; தங்கம்மா மட்டும் தனியே இருக்க முடியாது. அத னால் பாப்பாவையும் அழைத்துச் செல்லக்கூடாது என்று கண்டிப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாகச் சொல்லிவிட்டார். என் தாயார் மட்டும் போய் தம் தமக்கையைப் பார்த்துவிட்டு வந்தார். அப்பொழுது தம் கஷ்ட நிலையைப் பற்றித் தம் சகோதர சகோதரிகளிடம் ஆலோசித்து, எப்படியும் புதுவையிலிருந்து கூடிய சீக்கிரம் வெளிவரவேண்டுமென்று அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யும்படி தம் தமையனார் ஸ்ரீ அப்பாதுரை ஐயரைக் கேட்டுக் கொண்டார்களாம். அவரும் அவ்வாறே செய்வதாக வாக்களித்தார்.

என் தாய் மாமன் ஸ்ரீ அப்பாதுரை ஐயர் ஆழ்ந்த தேசபக்தி உடையவர். வறுமை மிக்க ஏழைக் குடும்பம். பெரிய சம்சாரம். சாப்பாட்டுக்கு அவரையே எதிர்பார்க்கும் பெரிய குடும்பம். இல்லாவிடில் அவரது வாழ்நாள் முழுவதையுமே தேசத்திற்கு உழைப்பதில் செலவிட்டிருப்பார். ஒரு சமயம், அவர் என் தந்தைக்கு ஒர் கடிதமெழுதினராம்—வெகு நாட்களுக்கு முன் ரங்கூனிலிருந்து; ரங்கூனுக்கு அவர் ஸ்ரீசிதம்பரம் பிள்ளையின் கப்பல் கம்பெனிக்குப் பணம சேர்க்கும் நோக்கத்துடன் சென்றிருந்தபோது—அதில் அவர் எழுதியிருந்தாராம். நீ ஜெயிலுக்கும் போவதைப்பற்றிக் கொஞ்சம் கூட கவலைப்படாதே, என தங்கையைக் காப்பாற்றும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். நீ உன் நேர முழுவதையும் தேச சேவையில் செலவிடலாம்,' என்று, மேற்படி கடிதம் என் தாயாரும் நானும் கடையம் போயிருக்கும் சமயத்தில் எங்கள் வீட்டில் போலீஸார் வசம சிக்கியது. உடனே அவர்கள் ஸ்ரீ அப்பாதுரை ஐயரைக் கைது செய்து திருநெல்வேலிக்குக் கொணர்ந்துவிட்டார்கள். விசாரணை கிடையாது. வழககு கிடையாது ஒரு மாதம் ஜெயிலில் வைத்திருந்து பின்பு திடீரென விட்டு விட்டார்கள். இந்தச் செய்தி கிடைத்தவுடன் என தந்தை மிக்க கோபமடைந்தார். ரஷியாவில் நடப்பதைப்போல இந்தியாவிலும் நடப்பதைக் சுண்டித்துப் பல பத்திரிகைகளுக்கும் எழுதினர். ஆனல் என்ன பயன்? அந்தக் கடிதங்கள் பத்திரிகை ஆசிரியர்கள் கைக்குப் போனல் தானே அவர்கள் அவற்றைப் பிரசுப்பதைப் பற்றி யோசிக்கவேண்டும்! அவைகள் வழியிலேயே போலீஸாரின் உளவாளிகளால் கிழித்தெறியப்பட்டிருக்கும்! எங்கள் வீட்டில் கடிதங்கள்யும் என் தந்தையாரின் கையெழுத்துப் பிரதிகள் எல்லாவற்றையும களவாடிச் சென்றவர்கள் அவற்றின் மதிப்பை, பெருமையை அறிந்திருப்பார்களானல் தங்களுக்குத் தேவையானவை அதாவது மயங்கரக் கூட்டத்தாரின் இரகசியக் செய்திகள் அல்ல அவைகள் என்று தெரிந்தவுடன் திரும்பக் கொணர்ந்து போட்டிருக்கலாம். அத்தனை அரிய கட்டுரைகள், கவிதைகள் வீணுகப் போயின.

ஆரம்பத்தில், புதுவையில் என் தந்தையார் வசித்துவந்தபோது அவருடன் கூட பல இளைஞர்கள் தங்கியிருந்தார்களாம். அவர்களில் 'பாலு' ஒருவர். நல்ல கட்டு மஸ்தான தேகம் படைத்தவர். அவரது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உடல் வலிமையைக் கண்டு என் தந்தை மிக மகிழ்ச்சி கொள்வாராம். ஒரு முறை என் மாமன் ஸ்ரீ அப்பாதுரை ஐயர் புதுவைக்கு வந்திருந்த போது என் தந்தை அவரைக் கேலி செய்தாராம். 'அப்பாதுரை, நீ பேச்சில் மகா கெட்டிக்காரன் தான். ஆனால், வெறும் வாய்ப் பேச்சினால் என்ன பயன்? யாராவது ஒருவன் உன்னிடம் வேண்டுமென்றே வலுச் சண்டைக்கு வந்தால் எப்படி தப்பித்துக் கொள்வாய்? உடல் வலிமை மிக்க அவசியமானதுதான். ஆனால் மனவலிமையும் புத்திசாலித்தன மும் அதைவிட மிக்க அவசியம், பிறரிடம் சண்டையிட்டு ஜயிப்பதற்கு' என்றாராம். சும்மா வாய்ப்பேச்சு போதாது. செய்கையிலலலவா காண்பிக்க வேண்டும் 'அடே பாலு நீ நமக்கு பதிலாக அப்பாதுரை யிடம் மல்யுத்தம் செய்து, உடல் வலிமை எத்தனை அவசியமானதென் பதைக் காண்பி' என்றார் என் தந்தை. பாலுவுக்குப் பெருமை தாங்க வில்லையாம். வேஷ்டியை வரிந்து கட்டிக்கொண்டு வஸ்தாது போல வந்து நின்றாராம் பாலு. என் மாமன் நல்ல உயரமானவர். ஆனால் ஒல்லியான தேகமுடையவர். ஒரு கணம் அவர் நிமிர்ந்து நின்றார். பின்பு, திடீரெனப் பாய்ந்து பாலுவின் கால்களைப்பிடித்து அவரைக் கீழே சாய்த்துவிட்டார். என் தந்தைக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. 'அடே பாலு, நீ அப்பாதுரையை சட்னியாக்கிவிடுவாய் என்று நினைத்திருந்தேனடா! வேரற்ற மரம்போல 'சடேர்' என்று விழுந்து விட்டாயே! அப்பாதுரை வாய்ப்பேச்சில் மட்டுமல்ல, காரியத்திலும் கெட்டிக்காரன் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். நாம தோற்றுப் போனோம்' என்று சந்தோஷமாக ஒப்புக் கொண்டாராம் என் தந்தை.

என் தந்தைமீது அளவற்ற அன்பும் மதிப்பும் கொண்டிருந்த என் தாய்மாமன் ஸ்ரீ அப்பாதுரை ஐயருக்கு, என் தந்தை சித்த ஸ்வாதீனமற்றவர் போலாகிவிட்டார் என்ற செய்தி, எத்தனை மனக் குழப்பத்தை விளைவித்திருக்கும்? பின்னும சிலநாள பொறுத்து, என் சிறிய மாமன் ஸ்ரீ ரத்தினஸாமியின் திருமணம் நிச்சயித்திருப்பதாக, குழந்தைகளையும் தன் தங்கையையும் அனுப்பும்படி கடிதமும் பணமும் ஸ்ரீ அப்பாதுரை ஐயர் அனுப்பியிருந்தார். என் தந்தையார் முன் போலவே, குழந்தைகளை விட்டுவிட்டு. என் தாயாரை மட்டும் கல்யாணத்திற்குப் போகும்படி சொன்னார். என் தாயார், தந்தையா ரின் ஸம்மதமும் உத்தரவுமில்லாமல் என்னையும என் தமக்கையையும் அழைத்துக் கொண்டு தன் பிறந்த வீடான கடையத்திற்குச் சென்றார், நல்லதங்காளைப்போல. அதுவே அவர் என் தந்தையின் வாக்கை முதலாவதாக மீறி நடந்தது. (பின்னால் அதன் மூலம் ஏற்பட்ட விளைவுகளை நினைத்து என்ன வருந்தியும் யாது பயன்?) கல்யாணம் முடிந்ததும உடனே புதுவைக்குப் போகும்படி என்னையும் என் தாயாரையும் என் மாமன் அனுப்பிவிட்டார். என் தமக்கை மட்டும் தன் பெரியதாயாரின் சொல்படி அவர்களுடன் கடையத்திலேயே

7

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தங்கிவிட்டாள். அவர்கள் ஒரு தகுந்த மாப்பிள்ளையைப் பார்த்து கல்யாணம் செய்து கொடுப்பதற்கு ஏற்பாடுகளும் செய்ய ஆரம்பித்தார்கள். என் தந்தையாருடன் கூட வசிக்கும் பாக்கியம், பெருமை அவளுக்குக் கிடைத்தது இரண்டு வருஷம் மட்டும்தான். எது நேர்ந்தாலும சரி, என் தந்தையுடன் தானிருப்பேன் என்ற பிடிவாதமாகச் சொல்லிவிட்டுப் புறப்பட தமக்கையால் முடியவில்லை. எனவே, நானும் என் தாயும் குற்றவாளிகளைப் போல படபடக்கும் மனத்துடன் புதுவைக்குக் திரும்பினோம்.

உலகிற்கே ஒரு வழி காட்டியான பெரிய கவிஞர், தேசபக்தர் என்று எல்லோராலும் புகழப்படுவதையே கேட்டுப் பழகியதால், என் தந்தைக்கு நிகரானவர் யாருமே கிடையாது என எண்ணிப் பெருமை கொண்டிருந்த என் சிறியவுள்ளம், என் தந்தையைப் பித்தன் எனப் பிறர் பேசுவதைக் கேட்டுக் குன்றி விட்டது. பின்னர், சில நாட்கள் மனச்சாந்தி சிறிதுமில்லாது நரகவேதனையுடன் கழிந்தன. தமது துன்பத்தை, என் தந்தை போதை வஸ்துக்கள் மூலம் மறக்க முயன்றார். அதன் கொடுமையால் வீட்டு வாழ்க்கை துன்பக்களஞ்சியமாயிற்று. எப்போதும் ஏற்பட்ட மனக் கொதிப்பினால் அவரது உடல்நிலையும் மிகவும் பாதிக்கப்பட்டது. தன் மகளைத் தன் விருப்பத்திற்கு மாறாக மணமுடித்துக் கொடுத்து விட்டார்கள்; அவர்களைத் தடுக்கும் நிலையில் தான் இல்லாமல் கட்டுண்டிருப்பதைக் கண்டு அவர் உள்ளம் எவ்வாறு குமுறியிருக்கும்? ஆனால், உண்மையில், எனது தமக்கைக்கு மணமுடிக்கவில்லை. என் தந்தை மீது மட்டற்ற மதிப்பும் அன்பும் கொண்டிருந்த என் மாமன் அவரைக் கேளாமல் ஒருபோதும் விவாகம் நடத்தியிருக்கமாட்டார். ஆனால், என் தமக்கையைத் திரும்ப புதுவைக்கு அழைத்து வராத குற்றத்தினால் என் தாயார் பெருந்துன்பமடைய நேர்ந்தது. நானும் என் தாயும் வீடு வந்து சேர்ந்தோம். வீட்டில் ஒரு சாமானும் காணவில்லை. பழைய புடவைகள், சட்டைகள் எல்லாம் என் தந்தையாரால் தானம் செய்யப் பட்டுவிட்டன. நல்ல புடவைகளை—பட்டுப் புடவைகளைக் கிழித்து அவர் தலைப்பாகையாக உபயோகித்திருந்தார். வீட்டில் சமையல் சாமான்கள் போனவிடம் தெரியவில்லை. பின்பு, அம்மாக்கண்ணு சில பாத்திரங்களைத் தான் எடுத்து பத்திரப்படுத்தியிருந்ததாகக் கொணர்ந்து கொடுத்தாள். இல்லையெனில் அவைகளும் போனவிடம் தெரியாமல் போயிருக்கும்!

இந்த நிலையில், என் பாட்டனார் (என் தாயாரின் தந்தை) இறந்து விட்டதாகத் தந்தி வந்தது. என் தந்தை, எங்களை மறுபடி கடையம் செல்ல அனுமதிக்கவில்லை. தான் செய்த முதற் பிழையினால் ஐந்தாறு நாட்கள்வரை என் தாயார் ஏது செய்வதெனத் தெரியாமல் ஓயாமல் அழுதவண்ணமாக விருந்தாள். என் தந்தை யோசித்துப் பார்த்தார். அவருக்குள்ள இயற்கையான பெருந்தன்மை குணத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துடன் மன்னிப்புக் கொடுத்து விட்டார். என்னையும் என் தாயாரையும் கடையம் போய்வர அனுமதியளித்து அனுப்பினர். நாங்கள் சில நாட்கள் கடையத்தில் தங்கிவிட்டு திரும்ப புதுவைக்கு வந்தோம். ஆனால், அப்பொழுதும் என் தமக்கை எங்களுடன் வரவில்லை. என் தந்தைக்கும் அவளுக்குமுள்ள நெருங்கிய தொடர்பு அத்துடன் அற்றுப் போய் விட்டது. புதுவை வாழ்க்கை சகிக்கமுடியாத நிலை வந்து விட்டது. என் தாயார் அவரது சகோதரனுக்குக் கடிதமெழுதினர். உடனே, என் மாமன், தன் தம்பி, மற்றொரு தங்கை இவர்களுடன் புதுவைக்கு வந்தார். எல்லோருடனும் சற்று நேரம் வார்த்தையாடிய பிறகு என்னை மட்டும் அழைத்துக்கொண்டு என் மாமன் உலாவச் சென்றார். என்னிடம் வீட்டிலுள்ள உண்மை நிலையைப் பற்றிப் பல கேள்விகள் கேட்டார். சாதாரணமாக, குடும்பங்களில் பெரியவர்கள் முக்கியமான விஷயங்கள் பேசும்போது குழந்தைகள் அதில் பங்கெடுத்துக் கொள்வது வழக்கமில்லை இது நடக்கும்போது எனக்கு வயது ஒன்பதுதான். என் தந்தையாரின் மனநிலைமையையும் அவர் புதுவையை விட்டு உடனே வெளிவர வேண்டிய அவசியத்தையும் விரிவாக அவரிடம் சொன்னேன். பின்பு, ஸ்ரீ ஸ்ரீனிவாசாச்சாரியார், ஸ்ரீ வ. வெ சு ஐயர் எல்லோரிடமும் கலந்தாலோசித்தோம். அவர்களும் அதை ஆமோதித்தார்கள் பின் வீட்டிற்கு வந்து என் மாமன் பேசினர். சில நாள் ஜெயிலிலிருக்கும்படி நேர்ந்த போதிலும் நண்பர்கள் உதவியால் அரசாங்கத்தாரிடம் கேட்டுக் கூடிய சீக்கிரம் அவர் மீதுள்ள தடையுத்திரவை நீக்கிவிடலாம். தற்போதுள்ள நிலையைவிட அது மிக்க நன்மையுடையதென்று என் தந்தை ஒப்புக் கொள்ளும்படி செய்தார். புதுவையைவிட்டு வெளிவர என் தந்தையும் சம்மதித்து விட்டார்.

புதுவை சாந்தி நிறைந்த சன்யாசிகள் வசிக்கத் தகுந்தது. ஆடம்பரமில்லாத எளிய வாழ்க்கை நடத்த விரும்புவோர்க்குப் புதுவை ஓர் அடைக்கல ஸ்தானம். பத்தாண்டுகளாகத் தமக்கு ஒரு சிறைச்சாலையாக இருந்தபோதிலும், அதனைப் பிரிய எண்ணும் போது தாம் அதில் கழித்த துன்ப நாட்கள், தீராத வறுமை, ஹிம்சை இவை என் தந்தையின் மனக்கண்முன் தோன்றவில்லையாம். இணை பிரியா நண்பர்கள், அவர்களது சல்லாபம், மனமொத்த தம் இல்வாழ்க்கை, விசாலமான தமது வீடு, அதனுள் தாம் கழித்த எண்ணற்ற இன்ப நாட்கள், தமது ஒவ்வொரு வார்த்தையையும் பக்தியுடன் கேட்டுத் தமது ஆணையை சிரமேற்கொள்ளும் சிஷ்யர் கூட்டம். இவையெல்லாம்தான் அவர் மனக்கண்முன் தோன்றினவாம் புதுவையினின்று பிரிவது எத்தனை துன்பமாக இருந்ததென்று என் தந்தை ஒரு கட்டுரை எழுதி வைத்திருந்தார். அது பிறகு காணப்படவில்லை

ஸ்ரீ அரவிந்தரிடம் என் தந்தை விடைபெறுவதற்காகச் சென்றார். நாங்களும் போயிருந்தோம். அந்நாளில் ஸ்ரீ அரவிந்தரின் ஆச்ரமத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திற்கு இப்போதுள்ளது போன்ற கட்டுக் காவல் கிடையாது. எங்களுக்கு விருப்பமானபோதெல்லாம், ஸ்ரீ அரவிந்தரின் மாளிகைக்குச் செல்வதுண்டு, அங்கு ஸ்ரீ அரவிந்தரும், என் தந்தையும், ஸ்ரீ வ வெ. சு. ஐயரும், ஸ்ரீ ஸ்ரீனிவாசாச்சாரியாரும் சம்ஸ்கிருதத்தில் ஏதேதோ பல விஷயங்களைப் பற்றி சம்பாஷிப்பார்கள். குழந்தைகளாகிய நாங்கள் சிறிது நேரம் கேட்டிருப்போம். பின்பு அவரது மாளிகையைச் சூழ்ந்த விசாலமான தோட்டத்தில் விளையாடியும், ஸ்ரீ அரவிந்தருடன் வசித்து வந்த அவரது சிஷ்யர்களுடன் பேசியும் சில நேரம் கழிப்போம்.

ஸ்ரீ அரவிந்தரது பிறந்த நாட் கொண்டாட்டம் வந்தால் எங்களுக்கு அது விடுமுறைநாள். அன்று முழுவதும் அவரது வீட்டிலேயே தங்குவோம். இரவு ஒரு பெரிய விருந்து நடக்கும். நம் நாட்டுச் சமையல் வகையெல்லாம் என் தாயார்தான் செய்தனுப்புவார். ஸ்ரீ அரவிந்தர் சாம்பாரும், அப்பளமும் மிக்க பிரியத்துடன் சாப்பிடுவார் என் தந்தையார் வேதம் படிப்பதற்காகச் சில நாள் ஸ்ரீ அரவிந்தரின் மாளிகைக்குப் போவார். இரவில் வீட்டுக்குத் திரும்பமாட்டார். சில சமயம் காலை ஆறுமணி வரை படித்துக் கொண்டிருப்பார்களாம். அதனால், ஸ்ரீ அரவிந்தரின் சிஷ்யர்கள் வந்து சாம்பாரும் அப்பளமும் மட்டும் வாங்கிப் போவார்கள். என் தந்தை, பொரித்த அப்பளத்தில் தமக்குள்ள விருப்பத்தைச் 'சந்திரிகை'யின் கதையில் கோபாலய்யங்கார் மூலமாக வெளியிட்டிருக்கிறார்.

கடைசி முறையாக என் தந்தை ஸ்ரீ அரவிந்தரிடம் விடைபெறப் போனபோது. அவர்கள் தனியறையில் சம்பாஷணை நடத்தியதால் அதன் விவரம் எனக்குத் தெரியாது. ஆனால் விடைபெற்றுத் திரும்புகையில் ஸ்ரீ அரவிந்தரின் சாந்தி நிறைந்த ஞானவொளி வீசும் கண்கள் கண்ணீரால் மங்கியிருந்தன. என் தந்தையின் வீர விழிகளில் கண்ணீர் ததும்பி நின்றது. அது மட்டும்தான் நான் கண்டேன்.

ஸ்ரீ அரவிந்தரது ஆசீர்வாதத்தைப் பெற்று வீடு திரும்பினேம். அவரது சீடர்கள் எங்களுடன் வீடு மட்டும் வந்தார்கள். நண்பர்கள் யாவரையும் பிரிய மனமில்லாமல் பிரிந்து புதுவையிலிருந்து புறப்பட்டோம்.

துன்ப நாட்கள்

புதுவையை விட்டு வெளிவந்தவுடன் நமது துன்பங்கள் நீங்கி விடும் என்று என் மனம் குதூஹலமடைந்தது. நிறையப் பணம் வந்து குவியும், வறுமைத் துன்பமில்லாது அப்பா மறுபடி சந்தோஷ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாக யிருப்பார், நாமும் மற்றக் குழந்தைகள் போல நிம்மதியாக பந்துக்களுடன் வாழ்ந்திருக்கலாம் என்று மனக்கோட்டை கட்டினேன். நான் எதிர்பார்த்தது ஒன்று. ஆனால் நடந்தது அதற்கு நேர் விரோதமானது. என் ஞாபகத்தில், புதுவையை விட்டு வெளி வந்தபின், மறுபடி சென்னைக்கு வரும்வரை கழித்த நாட்கள் இருண்ட கொடிய விலங்குகள் வசிக்கும் காட்டினுள் கழித்ததைப் போலத் தோன்றுகிறது புதுவையில் நடந்த விஷயங்கள், கடந்த நாட்கள் ஸ்படிகம் போலத் தெளிவாக ஞாபகத்தில் நிற்கின்றன. ஆனால், பின் இரண்டு வருஷங்கள், கலங்கிய பாசி பிடித்த குட்டையைப் போல, பட்ட கஷ்டங்களைத் தவிர வேறு நல்ல விஷயங்கள் ஞாபகத்திற்கு வரவில்லை. பன்னிரெண்டு வருஷத்தில் அடையாத துன்பங்களை ஒரு வருஷ அஞ்ஞாத வாசத்தில் அனுபவித்த பாண்டவர்களைப் போல நாங்களும் துன்பம் அனுபவித்தோம்.

அப்பா இறந்த பல நாட்களுக்குப் பிறகு. ஸ்ரீ வ வே. சு. ஐயரை ஒரு முறை சென்னையில் சந்தித்தபோது அவரும் அவ்வாறே தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார் 'ஐயரே, பிரிட்டிஷ் இந்தியாவுக்குப் போனவுடன் எல்லாம் சரியாகிவிடும், சந்தோஷமாக வேலை செய்வோம், அதற்குத் தகுந்த உதவியும், பணமும் கிடைக்கும் என்று நினைக்கவேண்டாம் நம் நாட்டு மக்கள் இன்னும் போதுமான முன்னேற்றமடையவில்லை. ஆகையால் கூடியவரை மனதை நிம்மதியாக வைத்துக்கொண்டு இப்பொழுது சந்தோஷமாக இருப்பதுதான் உசிதம்' என்று பாரதி சொல்வார். அது எத்தகைய உண்மையென்பதை இப்பொழுதுதான் கண்டேன். நாம புதுவையில் வாழ்ந்த சந்தோஷ நாட்கள் இனிமேல் வருமா?' என்று சொல்லி ஐயர் வருத்தப்பட்டார். அவரது வாழ்நாளும் அவர் எழுதும் சோகக் கதையைப் போலவே முடிந்தது.

புதுவையை விட்டு இரண்டு ஜட்கா வண்டிகளில் நாங்கள் புறப்பட்டோம். எங்கள் பின்னாலேயே மற்றொரு வண்டியில் போலீசாரும் வந்தார்கள். பிரெஞ்சு எல்லையைத் தாண்டியதும் என் தந்தையைக் கைது செய்தார்கள். இது நடக்குமென்பதை எதிர்பார்த்திருந்த போதிலும் அதுசமயம் என் தந்தையைப் பிரிவது மிக்க வருத்தமாகத் தானிருந்தது, என் மாமன் ஸ்ரீ அப்பாதுரை ஐயர் என் தந்தைக்கு வேண்டிய சௌகரியங்களை ஏற்பாடு செல்வதற்காக கடலூரிலேயே தங்கி விட்டார். நான், என் தாயார், சின்ன மாமன் ஆக நால்வரும் சென்னைக்கு வந்து சேர்ந்தோம். ரயில்வே ஸ்டேஷனிலிருந்து நேராக என் தந்தையாரின் நண்பர் ஸ்ரீ துரைசாமி ஐயர் வீட்டுக்கு வந்தோம். ஸ்ரீ துரைசாமி ஐயர் வீட்டார் எங்களைத் தங்கள் குடும்பத்தார்களைப் போலவே எண்ணி மிக அன்பாக நடந்து கொண்டார்கள். ஸ்ரீ துரைசாமி ஐயர் என் தந்தைக்குத் தேவையான பண உதவியும் செய்தார். சிறையில் விசாரணை நடக்குமுன் காவலில் வைக்கப் பட்டிருந்த என் தந்தைக்கு ஆகாரம் முதலியன கொண்டு போய்க்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொடுப்பதற்கு ஸ்ரீ ஆராவமுதன் என்பவர் கடலூரிலேயே தங்கியிருந்தார். விசாரணையில் என்ன நடந்ததென்ற விவரங்கள் எனக்குச் சரியாக ஞாபகமில்லை. அச்சமயம் என் சிறிய தாயாரும் சின்ன மாமனும் பமபாய்க்குப் போய்விட்டார்களாதலால் நானும் என் தாயாரும கடையம் வந்து சேர்ந்தோம்.

ஆனால் ஒரு மாதம் சிறைவாசம் செய்வதற்குள் மனநோயுற்ற என் தந்தை உடல் நோய்க்கும் உள்ளாகி, இராஜீய விஷயங்களில் இனி தலையிடுவதில்லையென்று வாக்குக் கொடுத்து விட்டுச் சிறையினின்றும் வெளிவந்து விட்டார். அதிலும் திருப்தியடையாத அரசாங்கத்தார் அவர் சென்னையில் வசிக்கக் கூடாது குறிப்பிட்ட நாலு ஊர்களில் தான் வசிக்கலாம் என்று கட்டுப்படுத்தினார்கள். அவ்வாறே என் தந்தை சென்னையிலிருந்து கடையத்திற்கு வந்து சேர்ந்தார்.

என் தந்தை தேசீய விஷயங்களில் இனி சம்பந்தப்படுவதில்லை. அது சம்பந்தமான பிரசங்கங்கள் செய்வதில்லையென எழுதிக் கொடுத்து விட்டு வெளிவந்ததில் என் மாமனுக்கு மிக்க வருத்தம். பெரிய குடும்பத்தைத்தான் சம்ரட்சிப்பதற்குப் பணம் சம்பாதிக்க வேண்டிய கட்டாயத்தால் தேச சேவைக்கு நேரமில்லாமல் போய்விட்டது தன் தங்கையின் குடும்பத்தையும் தானே வைத்துக் காப்பாற்றுவதாக உறுதிமொழியளித்துங்கூட, என் தந்தை கேளாமல் சிறையிருந்து வெளிவந்தது சரியல்லவென கோபித்தார் வீட்டில் எப்பொழுதும் கோபப் பேச்சுக்கள், மனவருத்தங்கள், இதன் மத்தியில் என் தந்தையைக் காணவேண்டி வந்த பந்துக்களின் கூட்டம். இவ்வாறு சில நாட்கள் கழிந்தன தன் அனுமதியின்றி மகளுக்கு கல்யாணம் முடிக்கவில்லை யென்பதைக் கண்டு என் தந்தைக்குச் சற்று மன ஆறுதல் உண்டாயிற்று. ஆனால், தன் வாழ்க்கையின் இலட்சியமாகப் போற்றி வந்த தேசத் தொண்டாற்றுவதற்கான அரசியலில் சம்பந்தப்படுவதில்லையெனத் தாம் வாக்களித்தது, பின்னால், அவருக்கு, அதிக மனக் குழப்பத்தை உண்டாக்கிற்று விதியின் கொடுமை! என் தந்தை, பின்னும் சில மாதங்கள் புதுவையிலேயே இருந்திருப்பாராஞல். யுத்த சமாதானத்தினால் யாதொரு நிபந்தனையுமின்றி புதுவையிலிருந்து ஸ்ரீ வ. வே. சு ஐயர், ஸ்ரீ ஸ்ரீநிவாசாச்சாரியார் இவர்கள் வெளிவந்தது போல அவரும் நிம்மதியாக வந்திருக்கலாம்.

எட்டயபுரம்

நானும் என் தாய் தந்தையரும் எட்டயபுரத்துக்குப் போனோம். என் தந்தையின் மாமன் ஸ்ரீ செல்லம் ஐயர் என்ற கைலாசம் ஐயரும் ஸ்ரீ சாம்பசிவ ஐயரும், என தந்தையின் சகோதரர் (இளையதாயார் குமாரன்) சி. விஸ்வநாதனும் எங்களையழைத்துப்போக கோவில்பட்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டிக்கு வந்திருந்தார்கள். கோவில்பட்டிக்கு ரயில் வந்தபோது இரவு நேரம் ஒரு பெரிய வில்வண்டி எங்களுக்காக கொண்டு வந்திருந் தார்கள் நானும் என் தந்தையும் அதில் படுத்துத் தூங்கிவிட்டோம். என் தாயார் மட்டும் கண்விழித்துக் கொண்டு (எது எப்படி முடியுமோ) வெனக் கவலையுடன் உட்கார்ந்திருந்தாராம் எட்டயபுரம் வரும் வரை.

மாமன், ஸ்ரீ சாம்பசிவ ஐயர் வீட்டிற்கு வந்து சேர்ந்தோம். அங்குள்ள என் பாட்டிமார்கள் அழுவதும், சிரிப்பதும், ஆனந்தக் கண்ணீர் விடுவதுமான ஒரே கோலாகலமான குழப்பம். இவ்வாறு சில நாள் கழிந்த பின்னர், என் தந்தையின் நெருங்கிய சுற்றத்தார் அவரை எட்டயபுரம் ஜமீந்தாரை பேட்டி காணும்படி கேட்டுக் கொண்டார்கள். என் தந்தையுடன் கூடப் படித்து நெருங்கிப் பழகிய எட்டப்ப மகாராஜா அப்பொழுது இல்லை. அவரது சிறிய தகப்பனார் சின்ன மகாராஜா ஜமீந்தாராக இருந்தார். சின்ன மகா ராஜா தமிழ் நன்றாகக் கற்றவர். தமிழ் மொழியில் அதிகப் பற்றுள்ளவர். அவரை அரண்மனைக்குப் போய் காண்பதில் என் தந்தைக்கும் மிக்க ஆவல் உண்டு. ஆனால், அக்காலத்தில் எட்டய புரம் அரண்மனையிலுள்ள வழக்கப்படி அந்த ஊரில் பிறந்த மனிதர் கள் ஜமீந்தாருக்கு எதிரில் உட்காரக் கூடாது. எத்தனை நேர மானாலும் நின்று கொண்டே தாம் பேச வேண்டும் என் தந்தைக்கோ தான் ஒரு கவி என்ற ஹோதாவில் சோழனும் பாண்டியனும் கம்பனுக்கு சரியாசனம் அளித்து மரியாதை செய்த தைப் போல தமக்கும் தம் ஊர் அரசர் செய்ய வேண்டுமென்ற ஆசை. அதை ஜமீந்தாரிடம் சொல்லி ஏற்பாடு செய்ய யாருக்கும் அதற்கு வேண்டிய துணிவு இல்லை. யாராவது சின்ன மகாராஜா விடம் என் தந்தையாரின் விருப்பத்தைத் தெரிவித்து மகாராஜாவின் உத்தரவைக் கேட்டிருந்தால் தமிழ் மொழி மீதும், என் தந்தையின் மீதும் பேரன்புள்ள சின்ன மகாராஜா மறுத்திருக்க மாட்டாரென நினைக்கிறேன், அவ்வாறு நடந்திருக்குமாயின், ஜமீந்தாரின் நன கொடையினால் சௌகரியமாக வாழ வசதி கிடைத்திருக்குமானால், பின்னும், பல நல்ல தமிழ்க் காவியங்கள் என் தந்தை இயற்றி யிருக்கக் கூடும். விதியின் விளையாட்டை யார் கண்டார்!

எனவே, என் தந்தை ஜமீன்தாரை நேரில் போய்க் காணாது, அவருக்கு கீழேகண்ட சீட்டுக் கவிகளும் ஓலைத் தூக்கும் எழுதியனுப் பினார் என்றாலும், அரண்மனைச் சேவகம் அப்பாவின் மனதுக்கு உகந்ததாக இருக்கவில்லை. உண்மையில் அந்த நாட்களிலெல்லாம் கவிதா சந்நதம் குன்றிப்போய்விட்டது போன்ற உணர்ச்சியே அவரை வாட்டிக்கொண்டிருந்தது. இந்த உண்மையைப் பின்னாளில் அங்கிருந்து வெளியேறிய பிறகு அவர் எழுதிய கவிதா தேவியின் 'அருள் வேண்டல்' என்ற பாடலில் காணலாம் 'சாப விளைவினால் பன்றியாய் உருக்கொண்டு வாழ்ந்த முனிவன்' கதைபோல தன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்க்கை அந்த இடைக்காலத்தில் கழிந்ததென்று அவர் வர்ணித்திருப்பதே சான்று.

ஜமீந்தார் ஏதோ சிறிது பண உதவி மட்டும் செய்தாரென்று கேள்வி சில நாட்கள் எட்டயபுரத்தில் கழித்துவிட்டு மறுபடி கடையம் வந்தோம். அப்பொழுதுதான் ஸ்ரீ விஸ்வநாத பாரதி என்று ஒருவரும், ஸ்ரீ நெல்லையப்பரும் முன்பு புதுவைக்கு வந்திருந்தார்கள். என் தந்தையாரின் கண்ணன் பாட்டிற்கு அவர் அக்காலத்தில் எழுதிய முகவுரையிலே, பாரதி பாடல்களைப் பற்றி பின் வருமாறு கூறியுள்ளார் :—

'இந்தச் சிறிய நூலுக்கு ஒரு பெரிய முகவுரை எழுத நான் விரும்பவில்லை. சில வார்த்தைகள் மட்டும் கூறுகிறேன்.

இதன் ஆசிரியர் ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியாரைத் தமிழ் நாட்டார் அறிவார்கள். ஆனால் அவர் பெருமையை உள்ளபடி அறிந்தவர்கள் மிக மிகச் சிலரேயாவர் ஸ்ரீமான் பாரதியார் ஒரு பெரிய மேதாவி; மகா பண்டிதர் ; தெய்வீகப் புலவர்; ஜீவன் முக்தர் ; இவர் தமிழ் நாட்டு 'ரவீந்திர நாதர்' ; இவர் எனது தமிழ் நாட்டின் தவப்பயன்.

பாரதியாருக்குக் கண்ணபிரான் மீதுள்ள அதி தீவிர பக்தி காரணமாக இந்நூலிலுள்ள பாடல்கள் வெளியாயின. இவை தமிழர்களுக்கு நல்ல விருந்தாகும்.

பாரதியார் பாடல்களின் பெருமையைப் பற்றி யான் விரித்துக் கூறுவதென்றால், இந்த முகவுரை அளவு கடந்து பெரிதாய்விடும். ஒரு வார்த்தை மட்டும் கூறுகின்றேன். இந்த ஆசிரியரின் காலத்திற்குப் பின் எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பின் இவர் பாடல்களைத் தமிழ் நாட்டு மாதர்களும் புருஷர்களும் மிகுந்த இன்பத்துடன் படித்துக் களிப்படையும் காட்சியை யான் இப்பொழுதே காண்கின்றேன்.

இந்நூல் வாழ்க ! என்னவர் வாழ்க !! எந்தாய் வாழ்க !!!

சிந்தாதிரிப்பேட்டை
சென்னை. பிங்கள ஆவணி, க. } நெல்லையப்ப பிள்ளை.

ஸ்ரீ நெல்லையப்பர் தமது கற்பனைக் கண்ணால் கண்ட அந்த நன்னாளை நேரில் காணும் பாக்கியமும் பெற்றுவிட்டாரென்றே சொல்ல வேண்டும். என் தந்தையின் நண்பர் கூட்டத்தில் ஸ்ரீ நெல்லையப்பருக்கு ஒரு சிறந்த மதிப்பும் இடமும் உண்டு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என் தமக்கை தங்கம்மாளுக்கு மணமுடிக்க என் தாயாரின் சகோதர சகோதரிகள் தீவிர முயற்சி செய்ய ஆரம்பித்தனர். என் தந்தை அதை ஆமோதிக்கக் கண்டிப்பாய் மறுத்துவிட்டார். பின்னர் பெண்களுக்குரிய காரியத்தை சாதித்துக் கொள்ளும் திறமையை என் பெரிய தாயார் பார்வதி உபயோகப்படுத்தினர். சிறு வயதில், என் தந்தை, காசியில், தம் அத்தை குப்பம்மாள் வீட்டில் சில காலம் தங்கியிருந்தாராம. அத்தையின் புதல்வர்கள் இருவரில் மூத்தவரான ஸ்ரீ விச்வநாதனுக்கு என் தாயாரின் தமக்கை பார்வதியையும், இளைய குமாரன் ஸ்ரீ கேதாரசிவனுக்கு என் தந்தையின் சகோதரி (இளைய தாயார் மகள்) லட்சுமியையும் மணமுடித்திருந்தார்கள். இவ்விரண்டு கல்யாணங்களும், என் தந்தையின் மணமும் ஒன்றாக கடையத்தில் என் பாட்டனார் வீட்டிலேயே நடத்தினர்களாம். அத்தை குப்பமமாள், தம் தம்பி சின்னசாமி ஐயர் இறந்துவிட்டபடியால், மருமகள் பார்வதி. லட்சுமி இருவரையும், மேல் படிப்புக்காக என் தந்தையையும் அழைத்துக் கொண்டு காசிக்குச் சென்றாராம்

என் பெரிய தாயார் பார்வதியின் குரல் மிக இனிமையானது. என் தந்தைக்கோ சங்கீதத்தில் மிக்க பிரேமை. எனவே, இளவயதிலேயே நெருங்கிப் பழகிய இருவருக்கும் ஒருவருக்கொருவர் அளவற்ற அபிமானம் கொண்டது ஆச்சரியமல்ல. ஹிந்து மதத்தினர்க்குள்ளே அத்தை மகன் (அத்தான்) மாமன் மகன் (அம்மான் சேய்) என்ற முறைமையுடைவர்கள் தங்களுக்குள் கேலிப் பேச்சுக்கள் பேசலாம் என்ற சம்பிரதாயமும் உண்டு அத்தை குப்பம்மாளும் அவர் கணவரும் விசால மனப்பான்மையுடன் தமது மருமகள் இருவரும் சங்கீதத்தால் ஏற்பட்ட மன ஒற்றுமையினல் சேர்ந்து பாடுவதைக் கேட்டு மிக்க மன மகிழ்ந்திருப்பார்களாம். என் பெரிய தாயார் பார்வதி, புதுவைக்கு என் தந்தையாரைப் பார்ப்பதற்காக தம் கணவருடன் வந்தபோது, என் தந்தையிடம் நான்கு வயதுள்ள என் தமக்கை தங்கம்மாளைத் தன்னுடன் அனுப்பும்படி கேட்டாராம் தங்கை செல்லம்மாளுக்கு மற்றொரு பெண் குழந்தை பிறந்துவிட்டபடியால், தான் மூத்த பெண் குழந்தையை வளர்த்து வருவதாகச் சொன்னாராம். என் தந்தையும அதற்கு சம்மதித்து விட்டார். ஆகவே, என் தமக்கை தங்கம்மாள் காசியில் வளர்க்கப்பட்டு வந்தாள். கல்யாணப் பருவம் வந்தவுடன் தாம் பால்ய விவாகம் கூடாது என்ற தம் கொள்கைப்படி நடக்க சம்மதிக்காதபடியால், தம் குழந்தையைத் திரும்ப அனுப்பும்படி என் தந்தை பார்வதிக்குக் கடிதம் எழுதினர். அவ்வாறே. ஸ்ரீ கேதார சிவன் (என் அத்தை புருஷன்) தங்கம்மாளைக் கடையத்தில் கொணர்ந்து விட்டார். நானும் என் தாயாரும் கடையம் போய் தங்கம்மாளைப் புதுவைக்கு அழைத்து வந்தோம்.

Forwarded with compliments from THE DEPARTMENT OF CULTURE GOVERNMENT OF INDIA.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்க்கை அந்த இடைக்காலத்தில் கழிந்ததென்று அவர் வர்ணித்திருப்பதே சான்று.

ஜமீந்தார் ஏதோ சிறிது பண உதவி மட்டும் செய்தாரென்று கேள்வி சில நாட்கள் எட்டயபுரத்தில் கழித்துவிட்டு மறுபடி கடையம் வந்தோம. அப்பொழுதுதான் ஸ்ரீ விஸ்வநாத பாரதி என்று ஒருவரும், ஸ்ரீ நெல்லையப்பரும் முன்பு புதுவைக்கு வந்திருந்தார்கள். என் தந்தையாரின் கண்ணன் பாட்டிற்கு அவர் அக்காலத்தில் எழுதிய முகவுரையிலே, பாரதி பாடல்களைப் பற்றி பின் வருமாறு கூறியுள்ளார் :—

'இந்தச் சிறிய நூலுக்கு ஒரு பெரிய முகவுரை எழுத நான் விரும்பவில்லை. சில வார்த்தைகள் மட்டும கூறுகிறேன்.

இதன் ஆசிரியர் ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியாரைத் தமிழ் நாட்டார் அறிவார்கள். ஆனால் அவர் பெருமையை உள்ளபடி அறிந்தவர்கள் மிக மிகச் சிலரேயாவர். ஸ்ரீமான் பாரதியார் ஒரு பெரிய மேதாவி; மகா பண்டிதர் ; தெய்வீகப் புலவர்; ஜீவன் முக்தர் ; இவர் தமிழ் நாட்டு 'ரவீந்திர நாதர்' ; இவர் எனது தமிழ் நாட்டின் தவப்பயன்.

பாரதியாருக்குக் கண்ணபிரான் மீதுள்ள அதி தீவிர பக்தி காரணமாக இந்நூலிலுள்ள பாடல்கள் வெளியாயின. இவை தமிழர்களுக்கு நல்ல விருந்தாகும்.

பாரதியார் பாடல்களின் பெருமையைப் பற்றி யான் விரித்துக் கூறுவதென்றால், இந்த முகவுரை அளவு கடந்து பெரிதாய்விடும். ஒரு வார்த்தை மட்டும் கூறுகின்றேன். இந்த ஆசிரியரின் காலத்திற்குப் பின் எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பின் இவர் பாடல்களைத் தமிழ் நாட்டு மாதர்களும் புருஷர்களும் மிகுந்த இன்பத்துடன் படித்துக் களிப்படையும் காட்சியை யான் இப்பொழுதே காண்கின்றேன்.

இந்நூல் வாழ்க! என்னவர் வாழ்க !! எந்தாய் வாழ்க !!!

சிந்தாதிரிப்பேட்டை
சென்னை. பிங்கள ஆவணி, க. } நெல்லையப்ப பிள்ளை.

ஸ்ரீ நெல்லையப்பர் தமது கற்பனைக் கண்ணால் கண்ட அந்த நன்னாளை நேரில் காணும் பாக்கியமும் பெற்றுவிட்டாரென்றே சொல்ல வேண்டும். என் தந்தையின் நண்பர் கூட்டத்தில் ஸ்ரீ நெல்லையப்பருக்கு ஒரு சிறந்த மதிப்பும் இடமும் உண்டு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தங்கம்மா கல்யாணம்

என் தமக்கை தங்கம்மாளுக்கு மணமுடிக்க என் தாயாரின் சகோதர சகோதரிகள் தீவிர முயற்சி செய்ய ஆரம்பித்தனர். என் தந்தை அதை ஆமோதிக்கக் கண்டிப்பாய் மறுத்துவிட்டார். பின்னர் பெண்களுக்குரிய காரியத்தை சாதித்துக் கொள்ளும் திறமையை என் பெரிய தாயார் பார்வதி உபயோகப்படுத்தினார். சிறு வயதில், என் தந்தை, காசியில். தம் அத்தை குப்பம்மாள் வீட்டில் சில காலம் தங்கியிருந்தாராம். அத்தையின் புதல்வர்கள் இருவரில் மூத்தவரான ஸ்ரீ விச்வநாதனுக்கு என் தாயாரின் தமக்கை பார்வதியையும், இளைய குமாரன் ஸ்ரீ கேதாரசிவனுக்கு என் தந்தையின் சகோதரி (இளைய தாயார் மகள்) லட்சுமியையும் மணமுடித்திருந்தார்கள். இவ்விரண்டு கல்யாணங்களும், என் தந்தையின் மணமும் ஒன்றாக கடையத்தில் என் பாட்டனார் வீட்டிலேயே நடத்தினார்களாம். அத்தை குப்பமமாள், தம் தம்பி சின்னசாமி ஐயர் இறந்துவிட்டபடியால், மருமகள் பார்வதி. லட்சுமி இருவரையும், மேல் படிப்புக்காக என் தந்தையையும் அழைத்துக் கொண்டு காசிக்குச் சென்றாராம்

என் பெரிய தாயார் பார்வதியின் குரல் மிக இனிமையானது. என் தந்தைக்கோ சங்கீதத்தில் மிக்க பிரேமை. எனவே, இளவயதிலேயே நெருங்கிப் பழகிய இருவருக்கும் ஒருவருக்கொருவர் அளவற்ற அபிமானம் கொண்டது ஆச்சரியமல்ல. ஹிந்து மதத்தினர்க்குள்ளே அத்தை மகன் (அத்தான்) மாமன் மகன் (அம்மான் சேய்) என்ற முறைமையுடைவர்கள் தங்களுக்குள் கேலிப் பேச்சுக்கள் பேசலாம் என்ற சம்பிரதாயமும் உண்டு அத்தை குப்பம்மாளும் அவர் கணவரும் விசால மனப்பான்மையுடன் தமது மருமகள் இருவரும் சங்கீதத்தால் ஏற்பட்ட மன ஒற்றுமையினால் சேர்ந்து பாடுவதைக் கேட்டு மிக்க மன மகிழ்ந்திருப்பார்களாம். என் பெரிய தாயார் பார்வதி. புதுவைக்கு என் தந்தையாரைப் பார்ப்பதற்காக தம் கணவருடன் வந்தபோது, என் தந்தையிடம் நான்கு வயதுள்ள என் தமக்கை தங்கம்மாளைத் தன்னுடன் அனுப்பும்படி கேட்டாராம் தங்கை செல்லம்மாளுக்கு மற்றொரு பெண் குழந்தை பிறந்துவிட்டபடியால், தான் மூத்த பெண் குழந்தையை வளர்த்து வருவதாகச் சொன்னாராம். என் தந்தையும அதற்கு சம்மதித்து விட்டார். ஆகவே, என் தமக்கை தங்கம்மாள் காசியில் வளர்க்கப்பட்டு வந்தாள். கல்யாணப் பருவம் வந்தவுடன் தாம் பால்ய விவாகம் கூடாது என்ற தம் கொள்கைப்படி நடக்க சம்மதிக்காதபடியால், தம் குழந்தையைத் திரும்ப அனுப்பும்படி என் தந்தை பார்வதிக்குக் கடிதம் எழுதினார். அவ்வாறே. ஸ்ரீ கேதார சிவன் (என் அத்தை புருஷன்) தங்கம்மாளைக் கடையத்தில் கொணர்ந்து விட்டார். நானும் என் தாயாரும் கடையம் போய் தங்கம்மாளைப் புதுவைக்கு அழைத்து வந்தோம்.

THE DEPARTMENT OF CULTURE
GOVERNMENT OF INDIA

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என் தாயாரும் நானும் பலமுறை கடையத்திற்குபோயிருக்கிறோம். முதலில், சில தடவைகளில் எங்களுக்குத் துணைக்காக என் தகப்பனாரின் சிஷ்ய கோடிகளில் ஒருவரை எங்களுடன் அனுப்புவது வழக்கம். பின்பு, நாங்கள் தனியே போய்வரத் தொடங்கினோம். என் தாயாருக்கும், சி ஐ. டி போலீஸ் கண்காணிப்பு உண்டாதலால், எப்படியும் ஓர் ஒற்றன் பின்னால் துணைக்கு வந்து சேருவான். ஆனால் என் தந்தை ஒற்றர்களைத் தம பின்னால் நான்கு அடி தூரத்திற்குள் நெருங்கக் கூடாதென்று ஒரு முறை சொல்லியிருந்தார். அதனால் சிறிது தூரத்திலேயே எங்கள் பின்னால் போலீசார் வருவார்கள். புதுவையிலிருந்து கடையம் போய்ச் சேருவதற்குள் அந்நாளில் விழுப்புரம், மதுரை, மணியாச்சி முதலிய மூன்று இடங்களில் ரயில் மாற வேண்டும். புதுச்சேரியிலிருந்தே விழுப்புரத்திற்கு ரயில வரும் சமயம் நலல இரவு நேரம். மணியாச்சியிலும் சாயங்கால வேளை. மதுரையில் சரியான நடுப்பகல்—உச்சி வெயில் நேரம். பாலம் ஏறி ரயில் மாறவேண்டும். பாலத்துக்குமேலே கூரை ஒன்றும் கிடையாது. ரயில் எஞ்சினையும் பாலத்துக்கு அடியில் சரியாகக் கொணர்ந்து திறுத்தி விடுவார்கள். கால் வைக்க முடியாமல் கொதிக்கும் பலகைகள் மீது, அவசரமாய் ரயில் மாறுவதற்கு ஓடும் பிரயாணிகளைக் கண்டால் மிக்க பரிதாபமாக இருக்கும். தென்னாட்டில் அந்நாளில் ஸ்திரீகள் காலில் செருப்பு அணியும் வழக்கமும்கிடையாது. எனவே, என் தாயார் குழந்தையையும் பெட்டியையும் ஒரு போர்ட்டரை எடுத்து வரச்சொல்லி, தண்ணீர் கூஜாவை மட்டும் தான் எடுத்துக்கொண்டு பாலத்தில் கொதிக்கும் பலகைகள் மீது அவசரமாக நடந்து போவது வழக்கம். ஒருமுறை மதுரையில் ரயில் மாறும்போது, ஒரு கிழவன் போர்ட்டர் கூலிக்கு ஆசைப்பட்டு பெட்டியையும் தலையில் வைத்துக் கொண்டு குழந்தையையும் இடுப்பில் எடுத்துக் கொண்டான். ஐந்து வயதுக் குழந்தையையும் பெட்டியையும் அவனால் சுமந்து கொண்டு படியேற முடியவில்லை. தத்தளித்து, குழந்தையையோ அல்லது பெட்டியையோ கீழே போடும் நிலை வந்துவிட்டது. பின்னால், சிறிது தூரத்தில் வந்து கொண்டிருந்த உளவு போலீஸ்காரர் இதைக் கண்டவுடன் ஓடோடியும் வந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டு, மறு ரயிலில் ஜாக்கிரதையாக ஏற்றிய பிறகு, என் தாயிடம் தனது செய்கைக்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டாராம். வயிற்றுப் பிழைப்புக்காக ஒற்றர் வேலை பார்க்கின்றோம். ஐயர் பாடுவது போல நமக்கு சுதந்திரம் வந்து விட்டால், நாங்களே உண்மையுடன் அப்பொழுது சுதேசிகளிடம் வேலை செய்வோம் இதை ஐயரிடம் எப்படிச் சொல்வது? ஒவ்வொரு நாள் அவர் பேசுவதையும் பாடுவதையும் கேட்கும் போது சே, நமது பிழைப்பும் ஒரு பிழைப்பா என்று மனதுக்கு மிக்க வருத்தமாகயிருக்கிறது. ஊருக்குப் போய்ச் சேரும் வரை எங்களுக்கு ஏதாவது வேலை செய்ய வேண்டுமென்றே நான் காத்துக் கொண்டிருக்கிறேன்,' என்று சொல்லிவிட்டு அடுத்த வண்டியில் ஏறிக் கொண்டார். தேசத்தொண்டு செய்யும் தேச பக்தர்களை வருத்துவதற்காகவே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிருஷ்டிக்கப்பட்டது என்று நான் எண்ணியிருந்த போலீஸாரிலும் ஒருவர் இரக்கச் சிந்தையும், தன்னடக்கமும் உடையவராக இருப்பதைக் கணடு எனக்குப் பெரிய ஆச்சரியம் உண்டாயிற்று. என் தாயாருக்கு ஒற்றர்கள் பின் தொடரும்படி ஆங்கில சர்க்கார் ஏற்பாடு செய்திருந்தது ஆச்சரியமல்ல.

என் பாட்டி (என் தாயாரின் அம்மையார்) புதுவைக்கு முதன் முதலாக வந்து விட்டுத் திரும்பப் போனதிலிருந்து வெகுகாலம் வரை பின்னுல் ஒற்றர்கள் உளவு பார்க்கும்படி வைத்திருந்தார்கள். போலீஸ்காரன், நாலு நாளைக்கு ஒரு முறை வந்து என் பாட்டியிடம, 'அம்மா நீங்கள் எங்காவது வேறு ஊர்களுக்குப் போகப் போகிறீர்களா? என்று விசாரிப்பதுண்டாம். என் பாட்டி, 'நான் எங்கேயப்பா இப்போது போகப் போகிறேன். அமாவாசைக்குத்தான் பாவநாசம் போகலாமென்று இருக்கிறேன்,' என்பாராம், 'சரி' சென்று அமாவாசைக்கு என் பாட்டி பாபவிநாசத்துக்குப் போகும் போது கூட சி ஐ டி. போலீஸார் ஒருவரும் போனதுண்டாம். புதுவையிலுள்ள சுதேசிகள் மீது ஆங்கில சர்க்காருக்கு அத்தனை அவநம்பிக்கை. எங்கே, எந்த வேளையில் என்ன நேருமோ என்ற பயம் போலும்!

பின்னர் நடந்தவைகளை முன்பு குறிப்பிட்டிருக்கிறேன். என் பெரிய தாயார் பார்வதி என் தந்தைக்குத் தம்மிடமுள்ள அன்பையும் மதிப்பையும் நன்ருக அறிவார் எனவே, ஒருநாள் என் தந்தையிடம் என்னை மட்டும் அழைத்துக் கொண்டுபோய் தனிமையில் பேசினுர். பின்னுல், திரும்பிவரும் போது சந்தோஷமாக வந்தார். அவர்கள் ஹிந்துஸ்தானி பாஷைபில் பேசிதால் அதன கருத்து எனககு விளங்கவில்லை. அவர்கள் சொல்லக் கேட்டிருககும் விவரம் பின்வருமாறு:-

> பார்வதி :—'எனக்கோ குழந்தைகளில்லை. வயது முப்பதாயிற்று. நானும் நோயாளியாய்ப் போய்விட்டபடியால் இனிப் பிறக்குமென்ற நம்பிக்கையுமில்லை, தங்கம்மாளை நான் சிறு வயது முதலே என் குழந்தையாக நினைத்து வளர்த்து வந்தேன். உனக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. அதனுல், நீ எனக்கு ஒரு குழந்தையைத் தரவேண்டும்,' என்று மன்ருடிக் கேட்டாராம்.

யார் எது கேட்டபோதிலும் இல்லையென்னுது கொடுக்கும் வள்ளல் குணமுடைய என் தந்தை தன் மகளையும் கூட அவ்வாறே கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். பின்னர், பார்வதி, தன் குழந்தையான தங்கம்மாளுக்கு தன் விருப்பப்படி உடனே மணமுடிக்க வேண்டுமென்றும், தன் கணவர் காசியிலுள்ளவர் வந்து பின் கல்யாணம் நடத்துவதற்கு தற்காலம் வசதியில்லாதபடியால், எனது தந்தையாரும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

றிந்து வழக்கப்படி தாரை வார்த்துக் கொடுக்க வேண்டும், மற்ற ஏற்பாடுகள் தாமே செய்து கொள்ளலாம் என்றும் கேட்டுக் கொண்டாராம பிறரிடம் மிக்க இரக்க சித்தமும் தயவும் கொண்ட என் தந்தை அதற்கும் சம்மதித்து அவ்வாறே நடத்தவும் செய்தார். ஆனால், அவரது உள்ளத்தில் அப்பொழுது நிகழ்ந்த பெரும்போர்—மனச்சாட்சி—கடமை—கொள்கை—இரக்க சிந்தனையினால் அளித்த வாக்கு—இவை மாறி மாறி அவரைப் பெரும் வேதனைக்கு உள்ளாக்கின.

தங்கம்மாள் மணம் முடிந்தவுடனேயே மறுபடி நானும் என் தந்தையும் தாயும் எட்டயபுரம் போய்ச் சில காலம் அங்கு ஒரு சிறிய வீட்டில் வசித்து வந்தோம். ஜமீந்தார், குடும்ப காலக்ஷேபத்திற்கு சிறிது பண உதவி செய்து வந்தார். வறுமை நோய் பின்னும் எங்களை விட்டகன்ற பாடில்லை. ஜமீந்தாரை என் தந்தை போய்க்காண முயலவுமில்லை. அவரும் என் தந்தை கேட்டபடி விருதுகள் அனுப்பி அழைக்கவுமில்லை.

தற்காலம் எட்டயபுரம் ஜமீந்தாராக இருப்பவருக்குள்ள விசால மனப்பான்மை அந்த நாளில் அரசாண்ட ஜமீந்தாருக்கு இல்லை போலும்! எல்லாம் விதியின் விளையாட்டு. ஜமீந்தாரின் சகோதரன் ஸ்ரீ பெத்தப்பன் அவர்களும் தமிழில் நல்ல ஆர்வமுள்ளவர். முறையாகத் தமிழ் படித்தவர். அந்தப்புர ஸ்திரீகள் ஆண்மக்கள் முன் வரக்கூடாதென்ற கட்டுப்பாடு எட்டயபுரம் அரண்மனையில் உண்டு. அதனால், வெளிமுற்றத்தில் என் தந்தை பாடுவதை அதற்கென அமைந்துள்ள பலகணி மறைவிலிருந்து கேட்டு மகிழ்வார். அவரது குமாரர் ஸ்ரீ அமிர்தசாமிக்கு அப்பொழுது பன்னிரண்டு பிராயம் தானிருக்கும். ஆனால் சங்கீதத்தில் அவருக்கு சின்ன வயது முதலே அதிகத் தேட்டமுண்டு ஓயாமல் சலிக்காமல் எப்பொழுதும் ஏதாவது பாட்டு கேட்டுக் கொண்டேயிருப்பார். என் தந்தையை அடிக்கடி ஆள் அனுப்பி அழைத்துவரச் சொல்லி அவர் பாடலைக் கேட்டு அனுபவிப்பார். முதல் தடவை, ஸ்ரீ அமிர்தசாமி என் தந்தை பாடியதைக் கேட்டதும் அவருக்கு சன்மானமாக ரோஜாப்பூ நிறப்பட்டு அங்கவஸ்திரமொன்று அளித்தாராம். அரண்மனை வாயில் வந்தவுடன், என் தந்தை, தான் பட்டு உபயோகிப்பதில்லையென்று அதைத் தன் பக்கத்திலுள்ள தன் மாமனிடம் கொடுத்து விட்டாராம்! என் தாயார், 'அதை வீட்டுக்குக்கொண்டு வந்திருந்தால், குழந்தைக்குச் சட்டையாகவேனும் உபயோகிக்கலாமே' என்று மிக்க வருத்தத்துடன் கேட்டார். 'எனக்கு உபயோகிக்கக்கூடாதென்ற வஸ்து என் குழந்தைக்கு மட்டும் கூடுமா? நானும் இனிமேல் பட்டுப் போட்டுக் கொள்ள மாட்டேன். பாப்பாவுக்கும் அப்படியே' என்று சொல்லி விட்டார் அது நாள் வரை, கையில் பணமில்லாத தரித்திர காலத்திலுங்கூட, என் தாயார் எனக்குப் பட்டுப் பாவாடைகள், சட்டைகள், ஏராளமாகத் தைத்து வைத்திருந்தார். பிறகு, என் தந்தையார் உள்ள

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரை அவருக்கும் எனக்கும் பட்டுத்துணி வாங்கவில்லை. பட்டுத் துணியைப் பற்றி எழுதும் போது பழைய சம்பவம் ஒன்று ஞாபகம் வரத்தான் செய்கிறது.

வாசலில், மூட்டை தூக்கிக் கொண்டு வந்து வியாபாரம் செய்யும் சீனக்காரனிடம் என் தந்தை ஒரு சமயம் நிறையப் பட்டுத் துணிகள் வாங்கினர் என் தாயும், தமக்கையும் தங்கள் ரவிக்கைகளைத் தாமே தைத்துக் கொள்வதாகச் சொல்லி விட்டார்கள் எனக்கும், என் தந்தைக்கும் மட்டும் சட்டைகள் தைக்க என் தந்தையின் நண்பர் ஸ்ரீ சங்கர செட்டியாருக்கு வழக்கமாக சட்டைகள் தைக்கும் தையல்காரரிடம் கொடுத்தார். உயர்ந்த வெள்ளை ஸாடின் துணியில் ராஜாக்கள் அணிவது போல 'கோட்' ஒன்று தைக்கும்படி சொன்னர். தலைப் பாகை அடிக்கடி கட்டிக்கொள்வது சிரமமாக இருப்பதால் புதிய விதமான குல்லாய் ஒன்றும் தயாரிக்கும்படி சொன்னர். 'அது சாதாரண குல்லாய் மாதிரி இருக்கக் கூடாது. குமாஸ்தாக்கள் அணியும் தலைப் பாகை கட்டியது போலவும் தோன்றக்கூடாது. அழகான கிரீடம் போல இருக்கவேண்டும்' என்று மாதிரி சொன்னர். தையல்காரரும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டு போய்விட்டார். சில நாள் கழித்து சட்டைகள் தைத்துக் கொணர்ந்தார். மகாராஜாக்கள் அணியும் சட்டை, கிரீடம் என்றெல்லாம் என் தந்தை வர்ணித்ததைக் கேட்டுப் பயந்து போய் சரியாக அளவெடுக்காமல் என் தந்தையின் கோட்டை மிகப் பெரியதாகத் தைத்து விட்டார். கிரீடம் என்று வர்ணிக்கப்பட்ட குல்லாயோ சொல்லத்தரமன்று. நாடகம் ஆடுவோரில், கோமாளி வேஷம் தரிப்பவருடைய குல்லாயை ஒத்திருந்தது. என் தந்தை, தையல்காரரைக் குற்றம் சொல்லிக் கோபிக்கவில்லை தமக்கு உரித்தான நகைச்சுவையுடன் அதையேற்றுக் கொண்டு அவருக்குள்ள கூலியைக் கொடுத்தனுப்பிவிட்டு, 'தையல்காரன் பாவம் மகாராஜாவைக் கண்டானு, கிரீடத்தைக் கண்டானு? செட்டி மார்களுக்குச் சட்டை தைத்து வழக்கம். நமக்கும் பெரிய தொந்தியிருக்குமென்று நினைத்து கோட்டைப் பெரிதாகத் தைத்து விட்டான் நமக்த இந்த ஜென்மத்தில் தொந்தி போடப் போவதில்லை. அதனால் இந்தக் கோட்டு நமக்குத் தேவையில்லை.' என்று வாசலில் வந்த பிச்சைக்காரனிடம் கொடுத்து விட்டார். கிரீடம் மட்டும் சில நாட்கள் எங்கள் வீட்டில் கிடந்தது.

அல்லாத் தோட்டம்

எட்டயபுரத்தில் என் தந்தைக்கு உலாவப் போக நல்ல கண்ணுக்கினிய காட்சிகள் நிறைந்த சோலைகள் புதுவையிலே போலக்கிடையாது. 'அல்லாத் தோட்டம்' என்ற ஒரு பெரிய தோட்டம் எட்டயபுரத்தில் இருக்கிறது. அங்கு, ஒரு நாள், என் தந்தையார் என்னையும் என் தாயாரையும் அழைத்துக் கொண்டு போனர். புருஷனும் மனைவியும் கைகோத்துக் கொண்டு தெருவில் நடந்து போகும் விந்தையைக் கண்டு எட்டயபுரத்தில் பரிகசிக்க ஆரம்பித்தார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கொண்ட பெண்டாட்டியிடம் காதலாம்—கையைக் கோத்துக்
கொண்டு உலாவுதலாம்'.

என்ன வேடிக்கையான செய்தி !

'நாடகத்திற் காவியத்திற் காதலென்ருல்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்ருமென்பர் :
ஊடகத்தே, வீட்டினுள்ளே, கிணற்ருேரத்தே
ஊரினிலே காதலென்ருல் உறுமுகின்ருர் !

பாடைகட்டியதைக் கொல்ல வழி செய்கின்ருர்
பாரினிலே காதலெனும் பயிரை மாய்க்க
மூடரெலாம் பொய்மையினுல் விதிகள் செய்து
முறை தவறியிடரெய்திக் கெடுகின்ருரே.'

என என் தந்தை யெழுதிஞர். அவரைக் குறைகூறப் புதியதொரு சந்தர்ப்பம் கிடைத்ததை நினைத்துப் பலர் உள்ளம் மகிழ்ந்தார்கள்.

எட்டயபுர வாழ்க்கை என் தந்தைக்கு உகந்தாக இல்லை மலைச் சாரலும், அருவிகளும, தோட்டங்களும் நிறைந்த அழகிய கிராமமான கடையத்துக்குப் போய் வசிப்பது என்று தீர்மானித்தார். எட்டய புரத்தில் அவர் கவிதை எழுதும் தொழிலையே அனேகமாக மறந்து விட்டார். சூழ்நிலை கவிஞரின் மனதை எப்படி பாதிக்குமென்பதை இதிலிருந்து சுலபமாக தெரிந்து கொள்ளலாம்.

ஒரு சமயம், கும்மி கோலாட்டத்தில் பெண்கள் பாடும் பாட்டின் மெட்டு ஒன்று அவருக்கு மனதில் தானும் பாட்டெழுத வேணுமென்ற ஆவலை மறுபடியுண்டாக்கிற்று 'சந்திரமதி' என்ற காதல் பாட்டுத் தான் அச்சமயம் அவர் இயற்றியது

என் தந்தையின் சகோதரர் ஸ்ரீ விசுவநாதன் அப்பொழுது எட்டையபுரத்தில் அவரது தாய்மாமன் வீட்டில் இருந்தார் பி ஏ. படிப்பு முடிந்து உபாத்தியாயர் வேலைக்குப் படிக்கப் போவதற்கு முன் என்று நினைக்கிறேன். சித்தப்பா விசுவநாதன் தினந்தோறும் எங்கள் வீட்டிற்கு வருவார். தேவையான கடை சாமான்கள் சில சமயம் வாங்கித்தருவார். அரிசிப் பஞ்சம், அந்த நாளிலும், யுத்தம் முடிந்த சமயத்தில் நம் நாட்டில் தோன்றியிருந்தது எட்டயபுரத்தில் மலிவான விலைக்கு ரெங்கூன் அரிசி தான் கிட்டும். ஒரு நாள் சித்தப்பா விசுவநாதன் என் தாயிடம், 'மதனி, அரைக்குருணை வாங்கி வரட்டுமா, முக்கால் குருணை வேண்டுமா?' என்று கேட்டுக் கொண்டிருந்தார். அது என் தந்தை காதில் பட்டது. 'அட ஈசுவரா! தமிழ் நாட்டிலே, அரிசியென்ற சொல்லையே மறந்து விட்டார்களா? அரைக் குருணையாம், முக்கால் குருணையாம்— தூ!' என்று சொல்லி, ஏழைகள் பஞ்சத்தில் அடிபடும் துன்பத்தைக் கேட்கவும் சகிக்காத வராதலால், மன வெறுப்புடன் வெளியே போய் விட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எட்டயபுர வாசம் என் தந்தையின் மனதுக்கு உகந்ததாக இல்லாமையினால் மறுபடி கடையம் வந்து சேர்ந்தோம். கடையத்தில் என் பாட்டனார் வீடு மிகச் சிறியது. என் தந்தைக்கோ சிறிய வீட்டில் குடியிருப்பது கொஞ்சமும் மனம் பிடிக்காது. அதனால் கிராமத்தை விட்டு சிறிது விலகி, அங்குள்ள ராமசாமி கோவிலுக்கு அருகேயுள்ள பட்டர் வீட்டில் குடியிருந்தார். ஆனால், சமையல் எங்கள் பாட்டனார் வீட்டில் தான் என் தந்தைக்கு சாப்பாடு தயாராக ஒரு தட்டில் என் தாயார் கொணர்ந்து கொடுப்பார், நானும கூடிய வரையில் என் தந்தையுடன் கூட பட்டர் வீட்டில் இருப்பேன். என் தந்தை, தமக்கு துணி துவைத்துக் கொடுப்பது, குளிக்கத் தண்ணீர் இறைத்துக் கொடுத்தல் முதலிய குற்றவேல்கள் செய்ய ஒரு வேலைக்காரப் பையனை நியமித்திருந்தார். அவன் பெயர் சங்கரலிங்கம். என் தந்தைக்கோ முன்கோபமதிகம். சங்கரலிங்கத்திற்கோ மறதி அதிகம். தினம் ஒரு முறையேனும் திட்டு வாங்காமல் காரியம் செய்ய மாட்டான். நானும் என் தந்தையும் காலை நேர முழுவதையும் அனேகமாக என் தந்தையின் நண்பர் திரு சாவடி நாராயண பிள்ளை வீட்டிலேயே கழிப்போம். ஸ்ரீ நாராயண பிள்ளை வீட்டுப் பின்புறம் பெரிய ரோஜாத் தோட்டமுணடு. காலை வேளையில் ரோஜாப் பூக்கள் கொத்துக் கொத்தாக மலர்ந்திருக்கும் அழகைக் கண்டு என் தந்தை மனம் பூரித்துப் போவார். பின்னர் ஸ்ரீ நாராயண பிள்ளையும் நானும். மற்றும் சில வேலைக்காரரும் ரோஜாப்பூக்களைப் பறித்துக் கொணர்ந்து ஒரு பெரிய தொட்டியில் கொட்டுவோம் பன்னீர் செய்யும் சிறிய யந்திரமொன்றும் ஸ்ரீ நாராயண பிள்ளை வைத்திருந்தார். பின்னர், பழங்கள்—விதவிதமான உயர்ந்த ஜாதிப் பழவகைகள், அவரது வேறு இடங்களிலுள்ள தோட்டங்களிலிருந்து கொணர்ந்தவைகளைப் பிரியமுடன் தாமே கத்தியினால் எங்களுக்கு நறுக்கிக் கொடுப்பார். பிறகு பல விஷயங்களைப் பற்றியும் பேசுவதில் என் தந்தை உத்ஸமாக நேரம் போக்குவார். கடவுள் பக்தி முதல் கருபபுச் சாறு பிழியும் வகை வரை எத்தனையோ விதமான விஷயங்களில் தன் சந்தேகத்தைத் தெரிவித்துக் கேள்விகள் கேட்டு என் தந்தை அதற்குக் கூறும் மறுமொழிகளைக் கேட்டு ஸ்ரீ பிள்ளை மனமகிழ்வார்.

கடையத்திற்கு அருகே 'வாசகிரி' யென்று ஒரு குன்றமுள்ளது. அதில் ஒரு சுப்பிரமணிய சுவாமி கோயிலும் குன்றின் உச்சியில் பிள்ளையார் கோயிலும் உண்டு. அக்குன்றிலுள்ள சுனையொன்று மகா புண்ணிய தீர்த்தம் என்று ஆவணி ஞாயிற்றுக்கிழமைகளில் கடையத்திலுள்ளவர்கள் அதில் ஸ்நானம் செய்ய வருவார்கள். அந்த குன்றின் சாரலில் பல தோட்டங்களும் உண்டு. என் தந்தை நிம்மதியாகக் கவிதையெழுதவும், படிக்கவும் வாசகிரிக்கு அடிக்கடி போவார். கடையம் மிக்க வளம் பொருந்திய அழகிய கிராமம். என் தந்தை அதில் தாம் குடியிருந்த அக்ரகாரத்தை 'சந்திரிகையின் கதை'யில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வர்ணித்திருக்கிறார். 'பொதிய மலைச்சாரலில் வேளாங்குடியென்றொரு கிராமம் இருந்தது' என்பதே அந்த வர்ணனை.

கோயிலுக்கு எதிரேயுள்ள புல் தரையில் மேயும் மாடுகளையும், விளையாடும் குழந்தைகளையும் கண்டு என் தந்தையின் கவியுள்ளம் மிக்க உவகையடையும். கம்பீரமான குரலில் உயர்ந்த கருத்துக்கள் அமைந்த இனிய தமிழ் பாட்டுக்கள் பாடுவார். அதைக்கேட்டு மகிழ்வது, அந்த மாடுகளும் குழந்தைகளும்தான். அவரது பாடல்களைக் கேட்கவோ, அவருடன் பேசவோ, நெருங்கிப்பழகவோ, செய்வது அந்த கிராமத்தாருக்கு விருப்பமில்லைபோலும் துலுக்கரைப்போலவே மீசையும் தலைப்பாசையும் எப்பொழுதும் சூத்திரர்களுடனே குடியிருப்பு பித்தனைப்போல் எப்பொழுதும பாடுவதும. ஓயாமல் மந்தைவெளிகளிலும், தோட்டங்களிலும் ஆற்றங்கரையிலும் சுற்றுவது கிராமத்தார் அவரிடம் நெருங்கிப் பழகாமல் தூரத்தில் நின்று வேடிக்கை பார்ப்பதும் தமக்குள்ளே இரகசியமாகக கேலி செய்து நகைப்பதும் வழக்கம். என் தந்தையுடன் நெருங்கிப்பழகி அவருடன் வார்த்தையாடி அவர்தம் கவிதையைக்கேட்டு மகிழ்ந்து பாராட்டியவர் அவ்வூர் பிள்ளைமார், ஒன்றிரண்டு பிராமணர்கள், அடுத்த கிராமத்திலுள்ளவர்களுமதான்.

என் தந்தையார் மறுபடி கதைகளும் பாட்டுக்களும் எழுதத் தொடங்கினர். ஆனால் இராஜீய விஷயத்தைப்பற்றி ஒன்றும் எழுதுவது கூடாதென்ற கட்டுப்பாடு அவரை மிகவும் பாதித்தது. கையில் தாராளமாக செலவழிக்க பணம் கிடையாது. வேறு எங்கும் போய் வசிப்பதோ முடியாத காரியம். அதனால் என் தந்தை தமது புத்தகங்களைத் தாமே பதிப்பிக்கவும் மேலும் இலக்கிய வளர்ச்சிக்காகவும் 'தமிழ் வளர்ப்புப் பண்ணை' என ஒன்று ஏற்படுத்தினர்.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன், தமிழ் என்பது தற்போது உள்ள அளவு பெருகவில்லை. சில உண்மைத் தமிழன்பர்கள் படிப்பதற்கு ஓர் தமிழ் புத்தகம் வாங்க வேண்டினல் சுலபமாகக் கிடைக்காது. தமிழில் புத்தக மெழுதிய ஒருவர் தம் புத்தகங்கள் எளிதில் விற்பனையாக வேண்டுமென்று அதன் மதிப்புச் செலவை கையிலிருந்து அதாவது, அதேகமாக கடன் வாங்கிப்போட்டு மலிந்த விலையில் அச்சிட்டு விற்க முன் வந்தால் அதை வாங்குபவர் கிடையாது. அத்தகைய 'உன்னதமான' நிலையை தமிழ் அப்பொழுது அடைந்திருந்தது. அந்நாளில் என் தந்தை தமது நூல்களைத் தாமே பிரசுரிக்கக் கையிலொரு காசும் இல்லாமையால் புதிய திட்டமொன்று தயாரித்தார். சுயகாரியப் புலிகளான பந்துக்களிடையே சின்னஞ்சிறு கிராமத்தில் 'தமிழ் வளர்ப்புப் பண்ணை' யொன்று அமைக்க விருமபினர். அவர் விருப்பம் நிறைவேறியிருக்குமானல் எத்தனை அரிய தமிழ்ப் புத்தகங்கள் எத்தனை மலிவான விலையில் தமிழ் மக்களுக்கு கிடைத்திருக்கும்! இன்னும் எத்தனை அமரத்தன்மை வாய்ந்த அவரது நூல்கள் தமிழில் வந்திருக்குமென்பதை எண்ணும்போது நெஞ்சம் குமுறுகிறது. இன்று தெள்ளமுத

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழிலே தமிழர் சுவை கண்டுவிட்டார். இனியதை சுலபமாக விட்டு விடமாட்டார்கள். பக்தி வழியானாலும்சரி, மூடக் கொள்கையானாலும் சரி, தமிழர் ஒருமுறை அதைத் தமிழ் வழக்கத்துக்குக் கொண்டுவந்து விட்டால் பின்பு எளிதில் கைவிடுவதில்லை. எனவே, என் தந்தையின் ஆசை ஓரளவு நிறைவேறிவிட்டது. இன்று என் தந்தை இருப்பாராகில், எங்கு பார்த்தாலும் தமிழில் பத்திரிகைகள், சிறுகதைப் புத்தகங்கள், நவீனங்கள் பிறநாட்டுத் தொழில் வல்லார் எழுதிய கதைகளின் மொழிபெயர்ப்புகள் இவை புத்தகக் கடைகள் தோறும் குவிந்து கிடைப்பதைக் கண்டு,

'மெல்லத் தமிழினிச் சாகும் — அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்'

என்ற பழிச் சொல் நீங்கித் தமிழ்த்தாய் மகிழ்ச்சியுற்றிருப்பதைத் தம் அழகிய அழியா வரம் பெற்ற அமுதச்சொற்களிலே கவி பாடியிருப்பார்.

தமிழறிஞர்கள் தாம் பல பாஷைகளை நன்கு படித்து அதில் பாண்டித்தியமடைந்து. அவற்றிலுள்ள நன்னூல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை நன்குணர்ந்து அவைகளை நம் தமிழர்கள் மனத்தில் பதிய வைக்குமாறு எளிய நடையில் உயிருள்ள சொற்களிலேயமைத்து உலகிலே எந்த நல்ல நூல் யார் படிக்க வேண்டுமானாலும் தமிழ் ஒரு பாஷை மட்டுமே கற்றாற் போதுமெனத் தமிழ் மொழியின் புகழ் ஓங்குமாறு செய்தல் வேண்டுமென்பதே அவர் இலட்சியம். எனவே, அந்த இலட்சியத்தை நிறைவேற்ற மேலே கூறியபடி தமிழ் வளர்ப்புப் பண்ணையை நிறுவினார். அது பெயரளவோடு நின்றதல்லாது செய்கையொன்றும் நடக்கவில்லை.

இராமசாமி கோயில் வாயிலில் தாம் பிரசங்கம் செய்ததாகவும், கிராமத்தார் கேட்க வரவேண்டுமென்றும் என் தந்தை ஒருமுறை கூறினார். சாயங்காலம் ஐந்து மணிக்கு பிரசங்கம். கோயில் கிணற்றில் தண்ணீர் எடுக்க வந்த ஸ்திரீகளைத் தவிர, அங்கு வேறு ஒருவரும் வரவில்லை என் தந்தையாரிடம் பேசுவதற்குக் கடையம் அருகிலுள்ள பொட்டலப்புதூரிலிருந்து சில முகமதிய நண்பர்கள் வருவதுண்டு. அவர்கள் என் தந்தையின் விசால மனப்பான்மையையும், அவரது சொற்களிலே மிளிரும் உண்மை ஒளியையும் கண்டு, அவர் பிரசங்கத்தைத் தம் ஊர் மக்களும் கேட்டு அனுபவிக்க வேண்டுமெனும் பேராவலினால் அவரைப் பொட்டலப்புதூரில் வந்து சில பிரசங்கங்கள் செய்யும்படி வேண்டினார்கள். ஆனால் என் தந்தையாரின் மனப்பான்மையையும், அவரது உன்னத நோக்கங்களையும் அதுவரை அறிந்திராத தமது சமூகத்தார், என் தந்தையை ஒரு ஹிந்து மதத்தவராதலால், தகுந்த மதிப்புடன் வரவேற்று அவரது போதனைகளை பொறுமையுடன் கேட்கமாட்டார்கள் என்ற எண்ணத்தினால், அவர் முதலாவதாக பேசும் விஷயம் அவர்கள் மனத்திற்குகந்த மத விஷயமாக இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள். அவ்வாறே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொட்டலப்புதூரில் முகமதிய பொதுச்சங்க மொன்றில் என் தந்தை 'இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை' என்ற விஷயம் பற்றி பிரசங்கம் செய்தார். தாம் அன்று இயற்றிய அல்லாப் பாடலைப் பாடிவிட்டுத் தமது உபன்யாசத்தைத் தொடங்கினர் அவர் அங்கு பேசிய விஷயத்தைத் தாமே எழுதி 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் பிரசுரிக்கும்படி அனுப்பியிருந்தார். அதில் ஒரு விஷயத்தை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன். இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றி முகமதியரிடத்தே பேசும்போதிலும்கூட சிறிதும் மாற்றமில்லாமல் தமக்குத் தோன்றும் கருத்துக்களை, உண்மைகளை வெளியிடத் தயங்குவதில்லை. முகமது நபியைப் பற்றிப் பேசிவரும்போது பின்வருமாறு சொல்கிருர்.

"இடையிடையே, நான், மனதிற்குள் முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களைப்பற்றி சித்திரம் போட்டுப் பார்ப்பது வழக்கம். நடு பாலைவனத்தில், நளளிரவிலே, தனி மணல் வெளியிலே, ஒட்டகையின் மீது தனியாக ஏறிக் கொண்டு போகிருர் அல்லது, அங்கொரு குன்றின்மீது ஏறி நிற்கிருர் கேள்வியாலும், நெடுங் காலத்துப் பக்தியாலும், நிகரற்ற அன்பினுலும், ஞானத்தாலும் பக்குவப்பட்ட இவருடைய ஹ்ருதயம் அப்படிப்பட்ட இடத்தில் அல்லாவை நாடுகிறது. வேறு நினைப்புக்கு இடமில்லை. அப்போது அங்கு ஞானவொளி வீசிற்று. நபி அல்லாவைக் கண்டார். சுகப்பிரம்ம ரிஷிக்கு நேர்ந்த அனுபவம் முஹம்மது நபிக்கு எய்திற்று, என்று.

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைக் குறித்து, தேசீயக் கல்வியைப் பற்றிப்பேசும் மற்ருெரு இடத்தில் கூறுகிருர் :—

ஹிந்து முஹம்மதிய ஸமரஸம்

"தேசியக் கல்வியில் முஹம்மதியர் எத்தனைக்கெத்தனை சேர்ந்து உழைக்கிருர்களோ, அத்தனைக்கத்தனை அம்முயற்சி அதிகப் பயனடையும். மத பேதங்களை வ்யாஜமாகக் காட்டி. ஹிந்து முகமதியர் ராஜரீக முதலிய பொது விஷயங்களிலும் கூடியுழைக்காமல் தடுக்க வேண்டும், என்று ஆங்கிலோஇந்தியப் பத்திராதிபர் முதலிய பொதுச் சத்துருக்கள் செய்த தீய முயற்சிகளெல்லாம் விழலாய் விட்டன. மஹான் முகம்மது ஆலி. அவர் அண்ணன் ஷெய்கத் ஆலி. ஸேட்யாகுப் ஹுஸேன், பெரிய ஜின்ன, மஹமதபாத்ராஜா முதலிய மேலோர்களின் ப்ரயத்தனத்தால் ஹிந்து முஹம்மதியர் அண்ணன் தம்பிகளென்பது தென் அமெரிக்கக் கண்டத்தாருக்குகூட ஸம்சயம் ஏற்பட இடமில்லாமல் பசுமரத்தில் அடிக்கப்பட்ட ஆணிபோல் நிலைநிறுத்தப் பட்டுவிட்டது என்று" கூறுகிருர்.

இவ்வாறு சில நாட் சென்றது. எனக்கு என் தந்தை கல்வி கற்பிக்க விரும்பினர். அதிக சம்பளம் கொடுத்து உபாத்தியாயர் ஏற்படுத்தி படிப்பிக்கப் போதுமான பணம கிடையாது. வறுமையின் கொடுமை என் செய்வது? வேறு வகையில்லாதபடியால் என்னை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடையத்தில் சத்திரம் பண்டின் (Fund) உதவியால் நடைபெற்று வரும் ஆண் பிள்ளைகளின் பள்ளிக் கூடத்தில் சேர்ப்பதாக ஒரு நாள் திடீரெனத் தீர்மனித்தார். என் தந்தை என்னை அழைத்துக் கொண்டு பள்ளிக் கூடத்தில் சேர்ப்பதற்காக தலைமை உபாத்தியாய ரிடம் போனார். அப்பொழுது அங்கு தலைமை உபாத்தியாயர் வேலை யிலிருந்தவர் ஒரு தமிழ்ப் பண்டிதரின் புதல்வர். அவருக்கு என் தந்தையாரிடம் மிக்க மதிப்பு உண்டு. ஆனால், அதுவரை பழக்க மில்லாத காரியமான பெண் குழந்தையை மேற்படி பள்ளிக்கூடத் தில் சேர்க்கும் புதுமையை எப்படி செய்வதென்று தயங்கி தன்னால் அவ்வாறு செய்ய இயலாதென்று சொல்லி விட்டார்.

என் தந்தை ஸ்ரீ நாராயணப் பிள்ளை வீட்டிற்கு வந்து யோசித்தார். பின் மேற்படி சத்திரம் கமிட்டி அங்கத்தினர்களான ஸ்ரீ பெருமாள் ராயரையும் மற்றும் சிலரையும் அழைத்து அவர்களுடன் சிலநேரம் பேசி, அவர்கள் மனத்தைத் திருப்பியதினால், பெண் குழந்தைகளையும் அந்தப்பள்ளிக் கூடத்தில் சேர்க்கலாமென்று தீர்மானம் செய்யப்பட்டது.

எனக்கு தமிழ் மட்டும் நன்ருகப் படிக்கத் தெரியும். கடின நடைத் தமிழும் நன்கு விளங்கும் சிலப்பதிகாரம், நளவெண்பா படித் திருந்தேன் மற்றப் பாடங்கள் முக்கியமாக கணக்கு, கொஞ்சங்கூட சரியாய்த் தெரியாது. நூறு யோசனை தூரம் என்ருல் எத்தனை தொலையென்பது கற்பனை செய்து கொள்ளும் சக்தியுண்டு. ஆனால் ஒரு மைலுக்கு எத்தனை எத்தனை பர்லாங்கு உள்ளதென்பது தெரியாது. ஆங்கில எழுத்துக்கள் கூட தெரியாது.

இந்த நிலையில் என்னை எந்த வகுப்பில் சேர்ப்பது? கையில் பணமிருந்தால் வீட்டிலேயே தக்க உபாத்தியாயர் ஏற்படுத்தி கணக்கும் ஆங்கிலமும் சற்றுக் கொடுத்து பத்தாவது வகுப்பில் கூட சேர்க்கலாம. என்ன செய்வது? கடைசியில் மூன்ரும் வகுப்பில் சேர்ப்பது என்று தீர்மானித்தார். வகுப்பில் உபாத்தியாயருக்கு அருகில் ஒரு நாற்காலியும் சின்ன சாய்வான மேஜையும் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தார்கள். சில நாட்களுக்குப் பின் மற்றும் இரு பெண்கள் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார்கள்.

என் தந்தை கடையத்தில் வசிக்கும் போது கர்நாடக சங்கீதம் நன்ருகத் தெரிந்து கொள்ள விரும்பினார். கடையத்தில் நாதஸ்வர வித்வான் சண்முகம் சங்கீதத்தில் நல்ல ஞானமுள்ளவர். அவரை வீட்டிற்கு அழைப்பித்துத் தனக்கு வேண்டியவைகளைக் கேட்டுத் தெரிந்துகொள்வார் லயஞானம், ஸ்வர ஞானம். முதலியவை நன்ருக ஏற்படுவதற்காக முதலில் கற்றுக் கொள்ள வேண்டிய ஜதி வரிசைகள், சரளி வரிசைகள் முதலியன உள்ள சங்கீத புஸ்தக மொன்று வாங்கினார். தான் கற்றுக் கொண்டவைகளை உடனே எனக்கும் படிப்பிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அந்த புஸ்தகத்

Forwarded With Compliments From THE DEPARTMENT OF CULTURE GOVERNMENT OF INDIA.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தின் முதல் பக்கத்தில், 'இது சகுந்தலா பாப்பாவுடைய புத்தகம். வாசித்து விட்டு பட்டர் வீட்டில் கொண்டு வைத்து விடவேண்டும். இது ஷரத்து' என எழுதப் பட்டிருக்கும்.

நான் என் தந்தையை விட்டு அதிக நாள் பிரிந்திருந்ததில்லை. அதனால் அவர் எனக்குக் கடிதம் எழுத வேண்டிய சந்தர்ப்பமும் நேரவில்லை. எனவே என் தந்தையாரின் கையெழுத்து அவரது ஞாபகார்த்தமாக என்னிடம் உள்ளது மேற்குறித்த புத்தகத்தில் எழுதியிருக்கும் சில வார்த்தைகளே.

கடையத்தில், மார்கழி மாதத்தில் காலையில் பஜனை கோஷ்டியார் தெருவில் பாட்டுப் பாடிக் கொண்டு வருவார்கள், அந்த பஜனை மெட்டுக்களிலும் சில பாட்டுக்களை என் தந்தை எழுதினார். ராதைப் பாட்டுக்கள், நந்தலாலா பாட்டு இரண்டும் அப்பொழுது தான் எழுதப்பட்டன.

ஒரு நாள், என் தந்தையும் சில நண்பர்களும ஸ்ரீ நாராயணப் பிள்ளையின் தோட்டத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது அங்கு ஒருவர் வந்து சேர்ந்தார். ஸ்ரீ பிள்ளையவர்கள் அவரை ஒரு தமிழ்ப் புலவர் என்று அறிமுகப்படுத்தி அவரைப் பாடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். புலவர் ஒரு காதல் பாட்டு - சிற்றின்பப் பாடல் பாடினார். அதாவது, 'ஒரு யுவனும் அவனது இளைய சகோதரியும் ஒரு நாள் மாலையில் மலைச்சாரலிலுள்ள குளத்துக்கு நீராடப் போனார்களாம். அந்தி நேரம், சூழ்நிலைகள், மட்டற்ற யௌவனம், இவை அந்த வாலிபனை தன் நினைவை இழைக்கும்படியாக அத்தனை தூரம் மயங்கச்செய்தபடியால் தங்கையென்றும் கருதாதுகாதல் புரியத்தொடங்கினன்' என்று பாட்டின் கருத்து கீழ்த்தரமாயிருந்ததினால், என் தந்தைக்கு தமிழ்க் கவிதை கேட்பதில் சாதாரணமாக ஏற்படும் மகிழ்ச்சியுண்டாகவில்லை. இதைக் கவனித்த ஸ்ரீ பிள்ளையவர்கள் புலவருக்கு நல்ல வார்த்தைகள் கூறி, ஏதோ சிறிது பணமுங் கொடுத்து சீக்கிரம் அவரையனுப்பிவிட்டு பின் தந்தையிடம், 'பாரதி, நீங்கள் ஓயாமல் பேரின்பப் பாடல்கள் மட்டும் பாடுகிறீர்களே' என் போன்றவர்கள் சில சமயங்களில் கேட்டு ரசிக்கும் வண்ணம் சிற்றின்பப் பாடல்கள் சில பாடினால் என்ன?' என்று கேட்டார். என் தந்தை எழுதித் தருவதாக வாக்களித்து 'வள்ளிப் பாட்டுகள்' இரண்டையும் எழுதிப் பாடிக் காண்பித்தார். தாம் கேட்டதை நண்பர் உடனே செய்து முடித்ததைக் கண்டு ஸ்ரீ பிள்ளையவர்களுக்குப் பெருமையும் ஆனந்தமும் தாங்கவில்லை.

பின்னர், என் தந்தை, சில காதல் பாட்டுகள் தாமாகவே எழுதினார். 'செல்லம்மா பாட்டுக்கள்' என்று அதில் குறிப்பிட்டிருக்கும் 'செல்லம்மா' என்பது என் தாயாரின் பெயர். தம் மனைவியையன்றி வேறொரு பெண்ணை மனத்தினாலும் நினைக்காத பரிசுத்த எண்ணமுடையவரானதால், காதல் பாட்டுக்கள் தாம் பாடுவது தம் மனை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விக்கு மட்டுமே என்று சொல்வார். 'நின்னையே ரதியென்று நினைக்கிறேனடி செல்லம்மா' என்று சிறிதும் சங்கோசமில்லாமல் பாடுவார். ஆனால் அந்தப் பாட்டுக்களை பின்னாளில் அச்சியற்றும்போது, அப்பா துரை மாமா விருப்பப்படி, செல்லம்மா என்று குறிப்பிடாமல், கண்ணனைக் காதலியாக அவர் பலமுறை பாடியிருக்கும் முறைப்படி 'கண்ணம்மா' என்று குறிக்கப்பட்டிருக்கிறது!

சாஸ்தா பிரீதி

கடையத்திற்கு மேற்கே ஐந்து மைல் தூரத்துக்கப்பால் சாஸ்தா (ஐயனார்) கோயில் ஒன்று உண்டு ஊரில் பருவ மழை பெய்யாவிடில் மேற்படி சாஸ்தா கோயிலில் வருணஜபம் ஜபிப்பார்களாம். உடனே தவறாது மழை பெய்யுமாம். காட்டினைக் காவல் காக்கும் சாஸ்தா மிகுந்த வரப்ரஸாதி என்றும் சொல்வார்கள். காட்டு விலங்குகளினால் பயிருக்குத் தீமை விளையாமல் காப்பாற்றும் சாஸ்தாவுக்குத் தினந்தோறும பூஜை கிடையாது! கிராமத்தார்கள் ஒன்று கூடி கோயிலுக்குப் போய் வருஷமொரு முறை பெரிய கொண்டாட்டமாக 'சாஸ்தா பிரீதி' நடத்துவார்கள். தலைமலையான்' என்ற பெயர் கொண்ட ஐயனார் கோயிலில் மேற்கூரை கிடையாது. 'மழையில் நனைவேன், வெயிலில் காய்வேன் எனககு ஆகாயமே மேற்கூரை; சூரிய சந்திரர்களே விளக்குகள், அதனால் கோயில் கட்டவும் வேணடாம்', என்று சாஸ்தா சொல்லிவிட்டாராம்.

ஒரு முறை, தந்தையும் மேற்படி சாஸ்தா பிரீதிக்குத் தன் நண்பர் ஸ்ரீ நாராயண பிள்ளையுடன் போயிருந்தார். அது, பிராமணர்கள் மட்டுமல்லாது, வேறு பல ஜாதி ஹிந்துக்களும் சேர்ந்து நடத்தும் பூஜை. அபிஷேகம் பூஜையெல்லாம் முடிந்து, பிராமணர்கள் போஜனம் நடைபெற்யது. பின் உயர் தர வேளாளர் குலத்தோர், அதாவது சைவப் பிள்ளைமார்கள் சாப்பாடு — பிராமணர்களால் தயாரிக்கப்பட்ட உணவு, பரிமாறுபவர்கள் பிராமணர்கள் — ஆரம்பமாயிற்று. என் தந்தை தன் நணபருடன் உடகார்ந்து சாப்பிட்டார்' அது விஷயம் அங்கு வந்திருந்த அக்கிரகாரத்தாருக்குத் தெரிய வந்தது. பின் நடந்த விஷயங்கள் ஒருவருக்கும் சரியாகத் தெரியாது. என் தந்தையை ஜாதிப் பிரதிஷ்டம் செய்வதென்று தீர்மானித்துவிட்டதாகச் செய்தி கிடைத்தது. என் மாமன் ஸ்ரீ அப்பாதுரை ஐயர் அப்பொழுது ஊரிலில்லை ஜாதியை விட்டு விலக்கியதைப் பற்றி என் தந்தைக்குச் சிறிது கூட வருத்தமில்லை இந்நிகழ்ச்சிக்குப் பின் தன் பிறந்த வீட்டிலிருந்து சாப்பாடு கொண்டு வருவது சாத்தியமில்லாததால், என் தாயார் என் தந்தையிருந்த பட்டர் வீட்டிலேயே வந்து குடும்பம் நடத்தத் தொடங்கினர். இதன் விளைவாக பின்னால் நடந்த சில சம்பவங்கள் அவர் நிம்மதியாக கடையத்தில் வாழ்ந்திருப்பதையும் பாதித்தன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மற்றொரு சமயம் ஸ்ரீ நாராயணபிள்ளையுடன் என் தந்தை இது விஷயமாகப்பேசிக் கொண்டிருந்த போது. ஸ்ரீபிள்ளை, பிராமணர்களின் அர்த்தமில்லாத ஜாதிப் பெருமையைப் பற்றி இழிவாகப்பேசினர். என் தந்தை உடனே தமது பாரபக்ஷமற்ற நியாயம் கூறும் மனப்பான்மையால் அவருடன் விவாதம் செய்யத் தொடங்கினர். 'பிராமணர்களும் பிள்ளைமார்களும் கலப்பு மணம் செய்து கொள்ள வேண்டும். பிராமணப்பெண்களை பிள்ளைமார் வீட்டில் மணம் செய்து கொடுக்க வேண்டுமென்று ஸ்ரீ பிள்ளை சொன்ருர். உடனே என தந்தை, 'வாஸ்தவம் அவசியம் நீர் உமது மகளை முதலில் ஒரு பறையனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும் சம்மதமா?' என்ருர். காலவித்தியாசத்தால், என் தந்தை அடித்தாலும் வைதாலுங்கூட பொறுமையுடன் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆப்த நண்பரான ஸ்ரீ பிள்ளைக்குத் தம்மையறியாமல் கோபமும் ஆத்திரமும் வந்து விட்டது. பிராமணர்களையும் என் தந்தையையும் வாயில் வந்தபடி பேசத்தொடங்கினர். என் தந்தைக்கோமுன்கோபம் அதிகம். சரியான முறையில் தர்க்கம் செய்து வெல்ல முடியாமல் வசைபுராணத்தில் இறங்கிய தமது நண்பரை வெறுப்புடன் பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்து விட்டார்.

என் தந்தை தம் ஒரே நண்பரான ஸ்ரீ நாராயணபிள்ளையுடன் விரோதித்துக கொண்டு கடையத்தில் குடியிருப்பது சாத்தியமில்லை என்று கண்டு என் மாமன் ஸ்ரீ அப்பாதுரை ஐயர் 'எது வந்தாலும் வரட்டும், சென்னையில் போய் வசிப்பதே நல்லது, என்று சொல்லி விட்டார். எனவே ஒருமுறை என் தந்தை மதுரை காரைக்குடி முதலிய ஊர்களுககுப்போய் சிலநாள் தங்கிவந்திருக்கிருர். அதை சர்க்கார் ஆக்ஷேபிக்கவில்லை. யுத்த முடிவில் புதுவையிலுள்ள மற்ற சுதேசிகளையும் வெளியில் போக அனுமதித்துவிட்டார்கள். ஆயுள் தண்டனையடைந்த ஸ்ரீ அரவிந்தரின் சகோதரரும், வீரசவர்க்காரும் பின்னும் பலரும் தீவாந்தரசிக்ஷையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். அதனால் என் தந்தையும் சென்னைக்குப்போக சம்மதித்து விட்டார்.

நானும், என் தந்தையும் தாயும் சென்னைக்குப் புறப்பட்டோம். மூன்ரும் வகுப்பு டிக்கட்டுகள் வாங்கப்பட்டன. கையில் போதுமான காசில்லாதபடியால், ஒருவர்மேலொருவர் விழுந்து மரியாதையில்லாமல் பேசி, வந்து ரயிலேறும் ஜனக் கூட்டத்தைக் கண்டு என் தந்தைக்கு மிக்க மன வெறுப்பு உண்டாயிற்று. 'அடா, கையில் பணமில்லை அதனல் உயர்ந்த மெத்தை தைத்த வண்டியில் ஏற முடியவில்லை. சரி ஆடுமாடுகளைப்போல் ஒருவர் ஏறிய அதே வண்டியில் கூட்டமாக ஏறி நிற்க இடமில்லாமல ஒருவருக்கொருவர் வசை மாரி பெய்து சண்டையிட வேண்டுமா? அமைதியுடன் ஒருவருக்கொருவர் வழிவிட்டு விலகி உதவி செய்து வந்தால் எத்தனை நன்ருக இருக்கும்? அட, புதுத்துணி, பட்டுத்துணி வாங்கக் காசில்லை. உள்ள துணியை அழுக்கில்லாமல், நாற்றமில்லாமல் தோய்த்து உடுத்தக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூடாதா? என்ன இழிவு நிலையடா வந்து விட்டது. நம் பாரத தேசத்துக்கு!' ஏற்பட்ட துர்நாற்றம் அவருக்குத் தலைவலியை உண்டாக்கி விட்டது. நல்ல வெயில் கொளுத்தியது. நாங்கள் ஏறியிருந்த ரயில் வண்டி ஒரு ஸ்டேஷன் தவராமல் நின்று மிக மிக மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது என் தாயார் மதுரை வந்தவுடன், வேகமாகச் செல்லும் வேறு ரயிலுக்கு மாற்ற வேண்டுமெனச் சொன்னார். போர்ட்டரைக் கூப்பிட்டு, பெட்டியை எடுத்துக்கொண்டு நாங்கள் இறங்கிப்போவதற்குள் அந்த ரயில் புறப்பட்டு விட்டது. மறுபடி ஓடோடியும் திரும்ப நாங்கள் இருந்த வண்டிக்கே வந்த சேர்ந்தோம். பெட்டியை வேகமாக நகர்த்தும் போது என் தாயார் காலில் காயம் பட்டு இரத்தம் கொட்டத் தொடங்கிற்று. என் தந்தைக்கோ இம்சைபொறுக்க முடியாமல் கோபம் வந்தது. ஆனால் என்ன செய்வது? யாரை நோவது? விதியின் விளைவு. இரவு நேரமானதும பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் என் தந்தையின் பேச்சையும் அவரது மரியாதையான நடத்தையையும் அவர் உடல் நிலையையும் கண்டு அவருக்கும் எனக்குப் பெஞ்சியில் இடம் கொடுத்தார்கள். என் தாயார் மட்டும் எங்கள் பக்கத்தில் சாமான்களைப் பார்த்துக் கொளவதற்காக தூங்காமல் உட்கார்ந்திருந்தார். தஞ்சாவூருக்கு முன்னால் ஏதோ ஒரு ஸ்டேஷன் பெயர் ஞாபகமில்லை அங்கு ஏழெட்டுப்பெர்கள் ஸ்திரீகளும், இரண்டு புருஷர்களும் ஏராளமான சாமான்களுடன் வந்து அவசரமாய் ரயிலில் ஏறினார்கள். அதில் ஒருவர், என் தந்தையின் பக்கம் வந்து. 'ஏய், எழுந்திரு. உட்கார இடமில்லை, அதிலே படுக்கை என்ன? என்று அவர் காலில் தட்டியெழுப்பினார். என் தந்தை விழித்துப்பார்த்தார், பேசியவரது குரலில் தொனித்த அதிகாரமும் அடித்து எழுப்பிய அவமரியாதையும் அவருக்குப் பெருங் கோப மூட்டியது. 'தூ', என்று அவன் முகத்தில் உமிழந்துவிட்டுத் திரும்பப் படுத்துவிட்டார். வந்தவர் திடுக்கிட்டுப்போய் ஒரு நிமிஷம் விழித்தார். பின்னர் பலவாறு கூச்சலிடத் தொடங்கினார், அவருடன வந்த மனிதரும் ஸ்திரீகளும் பெரிய கூச்சலிட்டு அட்டகாசம் செய்யத தொடங்கினார்கள், ஆனல், ஒருவரும என் தந்தை மீது கை வைகக்கவில்லை. ஏற்கனவே. அங்கேயிருந்த பிரயாணிகளுக்கு என் தந்தையாரின் நல்ல குணமும் தயாள சித்தமும் தெரியுமாதலால் அவர்கள் ஒருவரும் வாய் திறக்கவே யில்லை. அதற்குள் அடுதத ஸ்டேஷன், அவர்கள் இறங்குமிடம் வந்துவிடடது, அந்த மரியாதையற்ற மனிதன ஒரு போலீஸ்காரரை யழைத்து வந்து எனை தந்தையைக் கைது செய்யும்படி சொன்னார், அதற்குள் வண்டியின் கார்டு (Guard) வந்து சேர்ந்தார். என் தந்தையைப் பார்த்தார், போலீஸாருடம் ஏதோ சொன்னார் எல்லோரும் திரும்பப் போய்விட்டார்கள். என்ன நடக்குமோ, என் தந்தையை ஏது செய்வார்களோ எனக்கிலி பிடித்து உட்கார்ந்திருந்த எனக்கு ஏற்படட சந்தோஷம் சொல்லி முடியாது. கிராம வாசத்தால் ஏற்பட்ட சந்தேகம நீங்கி என் தந்தையின் பெருமையில் தான் முன்பு கொண்டிருந்த மதிபபு நிலைத்தது. இவ்வாறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரவு முடிந்தது காலையில் சைதாப்பேட்டை ஸ்டேஷன் வந்தது. சித்தப்பா விசுவநாதன் ரயிலடிக்கு வந்து எங்களை அங்கு இறங்கி விடும்படி வற்புறுத்தினர். கடையத்திலிருந்து நாங்கள் புறப்பட்ட விவரம் அவருக்குத் தந்தி மூலமாக அறிவிக்கப்பட்டதென்று நினைக்கிறேன். டிக்கெட் எழும்பூருக்கு வாங்கப்பட்டிருந்தது. நாங்கள் சைதாப்பேட்டையில் சாமான்களுடன் இறங்கி விட்டோம்.

சைதாப்பேட்டையில், சித்தப்பா விசுவநாதன் அப்பொழுது "எல். டி." (L T.) பரீக்ஷைக்குப் படித்துக் கொண்டிருந்தார். அவரது மாமனும் தனது குடும்பத்தாரோடு அங்கு இருந்தார். அவரது தாயார் வள்ளியம்மாளும் கூட இருந்தார். வள்ளிப்பாட்டி, என் தந்தையைத் தனது மூத்தாள் மகனாகக் கருதாது, தன் மகனெனவே மதித்து அன்பு செலுத்தி வந்தார். அவர் என் தந்தையிடம், ஒரு நாள் 'சுப்பையா, நீ பாடிக்கேட்டு ரொம்ப நாளாயிற்று. நீ புதிதாகக் கட்டின பாட்டுக்கள் பாடு, 'என்று சொன்னர்.' வள்ளி, நான் இப்பொழுது புதிதாக எழுதியிருப்பதெல்லாம் காதல் பாட்டுகள், உனக்குப் பிடிக்குமா? நல்ல வேளை ஞாபகம் வந்தது, ஸம்ஸ்கிருதபாட்டொன்று எழுதியிருக்கிறேன். அது உனக்கு பிடித்தமாகயிருக்கும்,' என்று, தானியற்றிய தெகிமுதம் தேகி ஸ்ரீராதே ராதே' என்ற பாடலைப் பாடினர். பின்னர் 'நந்தலாலா' பாட்டுப்பாடியபோது என பாட்டிக்கு மிக்க சந்தோஷமுண்டாயிற்று

சிலநாள் நாங்கள் சைதாப்பேட்டையில் தங்கியிருந்தோம். என் தந்தை 'சுதேச மித்திரன்' காரியாலயத்திற்குப் போய், ஸ்ரீ ஏ. ரெங்கசாமி ஐயங்காரைக் கண்டார், அவர், 'பாரதி', இந்த ஆபீஸில் உமக்கு எப்பொழுதும் ஒரு ஸ்தானம் உண்டு இப்பொழுதே வேண்டுமானாலும் நீர் உமது பதவியை ஏற்றுக்கொள்ளலாம்', என உபசார வார்த்தைகள் சொல்லி உதவி ஆசிரியர் வேலை கொடுத்தார். காலையில் சைதாப்பேட்டையில் ரயிலேறி சென்னை ஜார்ஜ் டவுனில் எர்ரபாலு செட்டி தெருவிலிருந்த சுதேச மித்திரன் காரியாலயத்திற்குப் போவார், சாயங்காலம் மறுபடி சைதாப்பேட்டைக்குத் திரும்பி வருவார்.

சித்தப்பா விசுவநாதன், எங்களுக்குக் குடியிருக்க ஜியார்ஜ் டவுனில் வீடு பார்க்கலானர். தம்புசெட்டித் தெருவில் ஒரு விட்டின் பகுதியில் குடியிருக்க இடம் கிடைத்தது, மாதம் பதினைந்து ரூபாய் வாடகை, சில நாள் அந்த வீட்டில் குடியிருந்தோம். என் தந்தைக்கு மனம் பிடிக்கவில்லை சிறிய அறைக்ள் வாசலில் ஜலதாரையின் துர்க்கந்தம் போகின்ற பாரதத்தைக் குறித்து என் தந்தை பாடிய போது. 'சிறிய வீடுகட்டுவாய் போ, போ, போ,' என்று வெறுப்புடன் பாடியிருக்கிரர். எனவே, மறுபடி வேறு வீடு பார்க்கும் படி ஏற்றபட்டது,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நல்ல மழை காலம். வாசலில் சாக்கடையில்லாத விசாலமான தெருவில் காற்றோட்டமுள்ள அறைகளுடன் கூடிய ஒரு வீடு வேண்டும் வாடகை இருபது ரூபாயக்குமேல் கொடுக்கவும் முடியாது அப்பொழுது ஸ்ரீ எஸ். துரைசாமி ஐயர் ஜியார்ஜ் டவுனிலேயே தம்புசெட்டித் தெருவுக்கு சமீபத்தில் வேறொரு தெருவில் அவரது தமக்கையின் வீட்டில் குடியிருந்து வந்தார், பெரியதொரு பகுதியில், அதனால், அவர் வீட்டில் போய் தங்குவதும் சாத்தியமில்லை. ஸ்ரீ ஹரிஹர சர்மா வீட்டில் மைலாப்பூரில் சில நாட்கள் தங்கியிருந்தோம். அவர் வீடும் மிகச் சிறியது. அங்கு வந்து தங்கும் விருந்தாளிகளின் தொகையோ மிக அதிகம்! ஆகவே, அதுவும் சரிப்படவில்லை.

'ஆர்யா' வீடு

தக்க சமயத்தில் ஸ்ரீ சுரேந்திரநாத ஆர்யா உதவிக்கு வந்தார். ஸ்ரீ ஆர்யா அமெரிக்காவுக்குபோய்ப் படித்துவிட்டு டேனிஷ்மிஷன் (Danish Mission) பாதிரியாக சிறிது காலத்திற்கு முன் சென்னைக்கு வந்து சேர்ந்தார். அமெரிக்காவில் தாம் சந்தித்துக் காதலித்த ஸ்விட்ஜர்லந்து தேசத்து மாது ஒருத்தியை மணம் செய்து கொண்டு அவருடன் 'வெப்பேரி' (Vepery) யில் 'ரண்டல்ஸ்' (Rundalls) ரோடில் ஒரு பெரிய பங்களாவில் வசித்து வந்தார். ஸ்ரீ ஆர்யாவின் மனைவி 'மார்த்தா ஆர்யா' நம் இந்துப் பெண்களைப்போல் உடையணிந்திருப்பாள். எனக்கு அப்பொழுது ஆங்கில பாஷை தெரியாது. அவருக்குத் தமிழ் தெரியாது. நாங்கள் பேசுவது கைஜாடைகளில் மட்டும் தான், எனினும் அவரது அன்பையும், விருந்தினர்களைப் பேணி உபசரிக்கும் தன்மையையும் அவரது செய்கைகளிலிருந்தே தெளிவாக அறிந்து கொள்ளும் விதமாக நடந்து கொள்வார். ஸ்ரீ ஆர்யாவும் அவரது மனைவியும், வேறு வீடு கிடைக்கும் வரை, தங்களுடன் வசிக்கும்படி என் தந்தையிடம் கேட்டுக் கொண்டார்கள். ஸ்ரீ ஆர்யா வீட்டில் சமையல் செய்யும் 'பட்லர்' (Butler) ஒரு ஆதியி திராவிட கிறிஸ்தவர். அதாவது மகாத்மா காந்தியடிகள் பாஷையில் 'ஹரிஜன்'. நானும் என் தந்தையும் ஸ்ரீ ஆர்யாவுடன் சாப்பிடுவதில் ஆட்சேபணை கிடையாது. ஆனால் என் தாயார் சாப்பிடமாட்டார். என் தந்தை, அவரது மனத்துக்கு விரோதமாகப் பிறரை நடக்கும்படி கட்டாயப்படுத்த மாட்டார். அதனால், எங்களுக்குத் தனியே சமையல் செய்துகொள்ள ஒரு அறையும், படுக்க அறையும், என் தந்தைக்குப் படிக்க ஒரு அறையும் காலிசெய்து கொடுத்தார்கள். தவிர, அவர் வீடு முழுவதையுமே நாங்கள் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஸ்ரீமதி ஆர்யா அவர்கள் சாப்பிடும் போதும், தையல் வேலை செய்யும் போதும், பந்து விளையாடும்போதும் என்னைத்தான் கூடவே அழைத்துப் போவார். அவரது பங்களாவின் முன்னால் பெரிய பூந்தோட்டம் உண்டு. சிறிய பூத்தொட்டிகளில் ஜலம் விட்டு அதில் அழகாக பூக்களைக் காம்புடன் கத்தரித்து அடுக்கி அதை மேஜைகள் மீது வைக்கும் ஐரோப்பிய வழக்கப்படி தினமும் காலையில் பூப்பறித்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரப் போவோம். குழந்தைப் பருவத்திலிருந்தே எனக்கு பூச்செடிகள் மீது விருப்பம் அதிகம். பூந்தோட்டங்களிடையே வளரும் பாக்கிய மும் எனக்கு இருந்தது.

எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் புதுவையில் ஸ்ரீ முருகேச பிள்ளையுடன் அவரது வீட்டையடுத்த காடி கானுவிற்குப் பின்புற முள்ள சிறிய தோட்ட்த்தில் பல வித பூச்செடிகளும் ஐரோப்பியக் காய் கறிகளும் பயிரிட்டு, பின் பூக்கள் காய்கள் உண்டாகி அவற்றைப் பறித்து உபயோகப்படுத்தும் வரையில் தினந்தோறும் அவைகளைக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன்.

பின், கடையத்தில் நாராயண பிள்ளையின் தோட்டம். காலை நேரத்தில் சுகமாக வீசும் குளிர்ந்த காற்றில், கண்ணுக்கினிய பசுமை நிறமுள்ள இலைகளும், கண்ணைக் கவரும் வனப்புடைய பூக் களும் நிறைந்த தோட்டங்களில் சிலநிமிஷமேனும் கழித்தவர்கள் இப் பூவுலகில் ஸ்வர்க்க வாசத்தின் இன்பத்தை யுணர்ந்தவர்களா வார்கள். கொத்துக் கொத்தாக மலர்களை பூந்தொட்டிகளில் வைத்து அலங்கரித்தும் கூந்தலில் சூட்டியும் கழுத்தில் மாலைகளாக அணிந் தும் அனுபவிப்பதை விட, அவற்றை இயற்கையின் அற்புத அலங் காரமாக அவற்றிற்குரிய செடிகளிலே அழகாக மலர்ந்திருப்பதைக் காண்பது தான் உண்மையான ஆனந்தம் என்பது என் கருத்து.

ஸ்ரீ ஆர்யா அவர்களை நான் மாமாவென முறையிட்டு அழைப் பதைக் கண்டு, தன்னையும் 'ஆண்டி' (Auntie) என அழைக்க வேண்டு மென ஸ்ரீமதி மார்த்தா ஆர்யா கற்றுக் கொடுத்தார். ஸ்ரீ ஆர்யா அவர்களும் என்னிடம் பேசும் போது 'உன் அத்தை (our auntie) யென்றே குறிப்பிடுவார்.

ஒருநாள், என் தந்தையிடம் பேசிக்கொண்டிருக்கும் போது, 'எனக்கோ குழந்தைகளில்லை; மார்த்தாவுக்கும் இந்தக் குழந்தை மீது அதிகப் பிரியம் ஏற்பட்டு விட்டது. அதனால் பாப்பாவை எனக்குக் கொடுத்துவிடு,' என்று ஸ்ரீ ஆர்யா கேட்டார். 'பாப்பாவைக் கொடுப்பதா? அதைத் தவிர வேறெது வேண்டுமானாலும் கேள். எனக்கு வேறொரு குழந்தையிருந்தால் அதை உனக்குக் கட்டாயம் தருவேன். ஆனால் பாப்பாவைக் கொடுப்பது சாத்தியமில்லை'யென என் தந்தை கூறிவிட்டார்.

மற்றொரு முறை ஒரு நண்பர், 'பாப்பாவுக்கும் பத்து வயது ஆகி விட்டதே; கல்யாணம் செய்ய வேண்டாமா? எனக்குத் தெரிந்த வரன் ஒன்று இருக்கிறது,' என்று சொன்னார். என் தந்தை ஆச்சரியம் ததும்புப் குரலில் 'பாப்பாவுக்கா! கல்யாணமாம்!' என்று கேட்டார். நண்பர், எப்படியும் பாப்பா பெரியவளான பிறகு மண

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முடித்துத் தானே கொடுக்கப் போகிருய். அப்பொழுது பாப்பாவை விட்டுப் பிரியத்தானே வேண்டும்' என்று கேட்டார். உடனே, என் தந்தை 'பாப்பாவுக்குக் கலியாணமா?' என்று கேட்டு நகைக்கத் தொடங்கினுர். நண்பர் முகவாட்டத்துடன் எழுந்து போய் விட்டார்.

ஆர்யா வீட்டில்

வேப்பேரிக்கு அடுத்த புரசைப்பாக்கத்தில் ஸ்ரீ பூவராகன் என்பவர் குடியிருந்தார். பூவராகனை என் தந்தையார் நண்பர் என்று சொல்வது முறையல்ல. வீட்டுப் பிள்ளைகள் போல புதுவையில் எங்கள் வீட்டிலேயே சிறு வயதில் பள்ளியில் படிக்கும் நாளில் இருந்தவர். ஸ்ரீ ஆராவமுதனின் இளைய சகோதரர். ஸ்ரீ ஆராவமுதன் (அமிர்தா) அரவிந்தர் கூடவே வசித்துப் பின் அவர் ஆச்ரமத்திலேயே தங்கி விட்டார். பூவராகன் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறி, பின் மிருக வைத்தியக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். மிக்க எளிய குடும்பத்தில் பிறந்து வறுமையிடையே துன்பத்தில் வளர்ந்த போதிலும், பெருந்தன்மையான குணமும் நல்ல சக வாசமும் சகோதரர்கள் இருவருக்கும் இசைந்திருந்தன.

நாங்கள் வேப்பேரியில் இருந்த நாட்களில் பூவராகன் தனக்கு ஒழிவு நேரம் கிடைத்தபோதெல்லாம் வந்து எங்கள் வீட்டுக்கு வேண்டிய சாமான்கள் வாங்கிவந்து தருவார். என்னையும் வெளியில் உலாவ அழைத்துப்போவார். ஒரு நாள், அவ்வாறு அழைத்துப் போய்த் திரும்ப வீட்டுக்கு வரும் வழியில், ஒரு நண்பரை சற்று தொலைவில் கண்டதும் அவருடன் அவசரமாக வார்த்தையாடுவதற்காகச் சென்ருர். நின்ற இடத்திற்குப் பக்கத்தில் ஒரு சிறிய கடை. அதில் ஒரு கிழவி பலகாரம் சுட்டு விற்றுக்கொண்டிருந்தாள். அவள், 'குழந்தை, நீங்கள் பிராமணுளா' என்று கேட்டாள். நான் 'ஆமாம்' எனறு பதில் சொன்னேன்; அவள் 'ஐயோ பாவம், கையில் காசில்லாதபடியால் வேதத்தில் சேர்ந்து விட்டீர்களாக்கும், இப்படித்தானே குடிகெட்டுப்போச்சு' என்று சொல்லிக் கண்ணீர் சிந்தினுள். எனக்கு அவள் கூறியதன் கருத்து அப்பொழுது விளங்கவில்லை. 'கிருஸ்துவப் பாதிரி வீட்டில் (ஆர்யா வீட்டில்) பிராமணர்கள் வந்து குடியிருப்பதை வேலைக்காரர்கள் மூலம் கேட்டிருப்பாள். வறுமையின் கொடுமையினுல் பல குடும்பத்தார் மதம் மாறியதையும் கண்டிருப்பாள். எனவே, நாங்களும் அவ்வாறு மதம் மாறியவர்கள் என்று தீர்மானித்துவிட்டாள் போலும் !

எல்லா மத வேதங்களையும் நன்ருகக் கற்றறிந்து அவற்றின் குறைகளையும் குணங்களையும் நன்கு ஆராய்ந்து பின் தனக்கு உகந்த மதமொன்றைத் தேர்ந்தெடுத்து அந்த மதாசாரப்படி கடவுளைத் தொழுவோரை யாரும் குறை சொல்ல முடியாது. ஆனுல் கேவலம். பணத்துக்காக மதம் மாறுவோரை பாரத ஸமுதாயம் ஒப்புக் கொள்ள

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முடியாது. பின்னும் சிலர் பிறரால் ஏமாற்றப்பட்டோ மதம் மாறி யிருக்கலாம். அவ்வாறு மாறியவர்களைத் திரும்ப ஏற்றுக் கொள்ள இந்து மதத்தார் மறுத்து விட்டபடியால் இந்துக்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் கணக்கில்லாதது. ஆனல், பின்னுளில், ஆரிய சமாஜத்தார் ஒரு முயற்சி செய்து இக் கெடுதலைத் தீர்க்க வழியேற்படுத்தி விட்டார்கள்.

சில நாட்கள் வேப்பேரியில் கவலையற்று நிம்மதியாகக் கழிந்தன. நாங்கள் சென்னைக்கு வந்த விஷயம் கேள்விப்பட்டு திருவல்லிக் கேணியில் பார்த்தசாரதி கோவிலே அடைக்கலமாகக் கொண்ட குவளைக் கிருஷ்ணன் வந்து சேர்ந்தார். அவருடன் பார்த்தசாரதி கோயிலில் பூஜை செய்யும் பட்டாசாரியொருவரும் வந்தார். திருவல்லிக்கேணியில் குடியிருந்தால் மிக்க சௌகரியமாக இருக்கும். மற்ற இடங்களை விட. கடற்கரை, கோயில் தவிர, குவளைக் கிருஷ்ண னின் மற்ெருரு முக்கிய காரணம், தான் அடிக்கடி வந்து என் தந்தைக்கு குற்றவேல் செய்ய முடியும் என்பது.

குவளைக் கிருஷ்ணன்

குவளைக் கிருஷ்ணனைப் பற்றி என் தந்தை தமது பாரதி அறுபத்தாறில் 'குவளைக் கண்ணன் புகழ்' என்ற பகுதியில்,

> "பார்ப்பாரக் குலத்தினிலே பிறந்தான் கண்ணன்
> பறையரையும் மறவரையும் நிகராக் கொண்டான்;
> தீர்ப்பான சுருதிவழி தன்னில் சேர்ந்தான்.
> சிவனடியார் இவன்மீது கருணை கொண்டார்.
> மகத்தான முனிவரெல்லாம் கண்ணன் தோழர்;
> வானவரெல்லாம்கண்ணன் அடியர் ஆவார்;
> மிகத்தானும் உயர்ந்ததுணி வுடைய நெஞ்சின்
> வீரர்பிரான் குவளையூர்க் கண்ணன் என்பான்"

என்று பாடியிருக்கிறுர்.

குவளைக்கிருஷ்ணனுக்கு எப்பொழுதும் என் தந்தையின் கூட இருப்பதே பரமானந்தம். பிடித்துத் தள்ளினுலும் போகமாட்டார். புதுவையில், என் தந்தை பகலில் நித்திரை செய்வதற்காக படுத்துக் கொண்டவுடன் கிருஷ்ணன் அவருக்கு கால் வருட வந்து விடுவார். என் தந்தை அவரைக் கோபித்து வைதாலும் பொருட் படுத்தமாட் டார். குவளைக்கிருஷ்ணனுடைய வேண்டுகோள் பலித்தது. திரு வல்லிக்கேணி துளசிங்கப்பெருமாள் கோவில் தெருவில் ஒரு வீட்டில் முன் பகுதியொன்று வாடகைக்குக் கிடைத்தது. முன் பகுதியில் பெரிய விசாலமான கூடம்.இரண்டு பெரிய அறைகள், நடுவில் பெரிய சதுரமான முற்றம். அதில் ஒரு தண்ணீர்க் குழாயும் உண்டு. இதைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தவிர பின்கட்டில் சமையலறை, குளிக்குமிடம் முதலியன. மிக்க சௌகரியமாக இருந்தது. மேற்படி வீட்டில் இன்னும் மூன்று குடித்தனக்காரர்கள் இருந்தார்கள். சாதாரணமாக ஒரு வீட்டில் பல குடித்தனக்காரர்கள் இருந்தால் தமக்குள் சச்சரவு செய்துகொள்வது சகஜம். ஆனால் எங்களைப்பற்றிய வரையில் எல்லோரும் மிகுந்த அன்புடனும் ஒற்றுமையுடனுமிருந்து வந்தார்கள்.

எட்டயபுரம் ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர் அவர்களின் பேரனும் ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் அவர்களின் குமாரருமான அம்பி பாகவதர் சென்னைக்கு வந்து சேர்ந்தார். ஒரு நாள் மைலாப்பூரில், ஸ்ரீ ஸ்ரீனிவாச ஐயர் என்ற பிடில் வித்வான் ஒருவரையும் சந்தித்தாராம். அம்பி பாகவதரும் ஸ்ரீனிவாச ஐயரும் மறுநாள் எங்கள் வீட்டிற்கு வந்து என் தந்தையிடம் சங்கீதம் கற்பிப்பதில் தமக்குள்ள அபிப்பிராய பேதங்களைக் குறித்து வாக்கு வாதம் புரிந்தார்கள். ஸ்ரீனிவாச ஐயர் ஒரு மாதத்துக்குள் சுமார் முப்பது ராகங்கள் வரை யாராவது பாடினால் பெயர் கண்டு பிடிக்கக் கூடிய அளவுக்குத் தன்னால் மாணுக்கருக்கு படிப்பிக்க முடியும் என்று கூறினர். அவ்வாறு கற்றுக் கொடுப்பதில் பயனில்லையென்றும் சங்கீதம் பழைய முறைப்படியே கற்கவேண்டுமென்றும் அம்பி பாகவதர் கூறினர். என் தந்தை அவர்களிருவருக்கும் மத்தியஸ்தம் புரிந்து சமாதானப் படுத்தினர்.

என் தந்தைக்கு நண்பர்கள் கூட்டம் மிக அதிகம். எந்த மதத்தவராலும் எந்தக் கொள்கையை உடையவராலும் என் தந்தையின் கவித்திறனுக்காக அவர் தம் அரிய உயர் குணத்திற்காக அவரிடம் அன்பும் மதிப்பும் கொண்டவர்கள் அநேகர். இதுவன்றி அவரிடம் நெருங்கிப் பழகி இணைபிரியா நேசமும் பக்தியும் கொண்டவர்கள் பலர் உண்டு. என் தந்தை முதன் முதலாக 1904-ம் வருஷம் சென்னைக்கு வந்து 'சுதேசமித்திர'னில் உதவி ஆசிரியர் வேலை பார்த்து வந்த அந்த நாளில் அவருடன் நெருங்கிப் பழகிய நண்பர்களில் அநேகர் பின்னாளில் பல துறைகளிலும் தேச சேவை செய்து வந்திருக்கிறார்கள். இதனின்றி, தமது கொள்கைக்கு முற்றிலும் மாறான கொள்கை உடையவரேனும் சரி, அவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டுக் கொண்டு பின் தமதுகொள்கை முறைகளை அவர்கள் பின்பற்றி அனுசரிக்கும்படி அவர்களிடம் தர்க்கம் செய்து வெல்லும் வசிகரத்தன்மை என் தந்தைக்கு இயற்கையாகவே அமைந்திருந்த தென்று நினைக்கிறேன்.

நீலகண்ட பிரம்மசாரி

என் தந்தையின் நண்பர்களில் நீலகண்டபிரம்மசாரி ஒருவர், நாங்கள் திருவல்லிக்கேணிக்கு வந்தவுடன் என் தந்தையை வந்து பார்த்து, தான் சிறைச்சாலையில் பட்ட கஷ்டங்களையும் அதற்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேலான கஷ்டமான நமது தற்கால நிலைமையையும் சொல்லி வருந்தினுர்.

வேலை தருவார் யாருமிலர். கட்டுரைகள் எழுதிப் பிழைக்கலாம் என்றுல் அவர் எழுதும் உணர்ச்சியுள்ள கட்டுரைகளைப் பிரசுரிக்க ஒரு பத்திராதிபரும் ஒப்பவில்லை. முக்கிய காரணம் அவரது கட்டுரை களில் பொதுவுடமை யுணர்ச்சி பொங்கி வழிந்து கொண்டிருந்தது தான். முதலாளித்துவம் தாண்டவமாடிய காலத்தில் பொதுவுடமை கட்சி பேசத்துணிந்தவர்கள் நிலைமை யாவருமறிந்ததே.

ஸ்ரீ நீலகண்டன் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். அவர் தன்னை 'ஐயர்' என்று சொல்லிக்கொள்ளாமல் பிரம்மசாரி என்று தன் பெயருடன் சேர்த்துக்கொண்ட காரணம், அவருக்கு 'பங்கிம் சந்திரர்' எழுதிய 'ஆனந்தமட'த்தில் சந்தானங்களின் தலைவர் அவ்வாறு பெயர் படைத்திருப்பது தான். மறைந்து வாழும் தேசபக்தர்கள் தியாகிகள் கூட்டத்தைச் சேர்ந்தவர். ஸ்ரீ நீலகண்டனும் அவரது நண்பரொருவரும் வெங்கடரங்கம் பிள்ளைத் தெருவில் ஒரு சிறிய வீட்டு மாடியில் குடியிருந்தார்கள். அவர்களிருவரும் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவதுண்டு. என் தந்தை தம் கையில் பணமிருந்தால் அதில் ஒரு பகுதியை நீலகண்டனுக்குக் கொடுத்து வருவார். ஆனுல் சாதாரணமாக என் தந்தையிடம் 'டிராம்' சார்ஜுக்காகக் கொடுக்கப் படும் ஒரு ரூபாயைத் தவிர, வேறு பணமிருக்காது! என் தந்தைக்கோ மாதம் ரூபாய் எண்பது மட்டுமே சம்பளம். அதில் வீட்டு வாடகை ரூபாய் பன்னிரெண்டு. எனக்குப் பள்ளிக்கூடச் சம்பளம். வேலைக்காரி இன்னும் இதர செலவுகள் நடக்கவேண்டும். நீலகண்டனுடன், வசித்த நண்பர் பெயர் எனக்கு மறந்துபோய் விட்டது. அவர் நிலைமை நீலகண்டன் நிலைமையைவிட கஷ்டமானது. எனவே, என் தந்தை, அவருக்கு மாதம் பதினெட்டு ரூபாய் சம்பளத்தில் தன்னிடம் 'செகரட்டரி' வேலை போட்டுக்கொடுத்தார். வீட்டில் சாப்பாடு போடு வது சென்னையில் சாத்தியமில்லை. ஏற்கனவே வீட்டில் அடிக்கடி வரும் விருந்தாளிகளுக்கு குறைவில்லை! நிரந்தரமாக ஒரு விருந்தா ளியை வைத்துக் கொள்வது இயலாதென்று என் தாயார் சொல்லி விட்டார்களாம். அதனுல் தான் மாதம் பதினெட்டு ரூபாய் சம்பளம் போட்டுக் கொடுத்தார், என் தந்தைக்கோ, சுதேசமித்திரன் பத்திரி கைக்கு விஷயங்கள் எழுதிக்கொடுக்கமட்டுமே நாள் முழுவதும் நேரம் சரியாக இருந்தது. இவரது செகரட்டிரிக்கு என்ன வேலை கொடுக்க முடியும்? வேலையுமில்லாது போதிய சம்பளமுமில்லாது எப்படி செகரட் டிரி உத்தியோகம் பார்ப்பது ?

நீலகண்ட பிரம்மசாரி, ஒரு நாள் காலையில், என் தந்தை வீட்டில் இல்லாதபடியால், என்னிடம் ஏதாவது காசிருந்தால் கொடுக்கும்படி கேட்டார், என் கையிலிருந்த இரண்டணுவையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொடுத்தேன். அன்றிரவு பத்து மணிக்கு மறுபடி எங்கள் வீட்டுக்கு வந்தார். என் தந்தையிடம், ஏதாவது பணமிருந்தால் கொடுக்கும்படி கேட்டார், வழக்கம்போல என் தந்தையிடம் பணம் கிடையாது. நீலகண்டன் கண்ணுங் கண்ணீருமாக, 'சுவாமி, இனிமேல் தாங்க முடியாது, யாராவது நல்ல பணக்காரர் வீட்டிற்குப் போய், பய முறுத்தியோ, திருடியோ தான் வயிறு வளர்க்க வேண்டும், வேறு வழியில்லை. நான் சாப்பிட்டு மூன்று நாளாயிற்று. இன்று காலை யில் பாப்பா இரண்டணு கொடுத்தது. இரண்டணுவுக்கு என்ன சாப்பிட முடியும்? வயிறு நிரம்பும்படியாக.இனிப் பொறுக்க முடியாது,' என்று சொன்னுர். என் தந்தை மனம் குமுறினர். 'அட என்ன உலகம்! ஒரு பணக்காரன் சுகமாயிருப்பதற்காக ஆயிரம் ஏழைகள் அவதிப்படுவதா? 'தனியொருவனுக்குணவில்லையெனில் ஜகத்தினை யழித்திடுவோம்! தம்பி நீலகண்டா, கவலைப்படாதே, பராசக்தி உன்னைக் காப்பாற்றுவாள்.'' என்று சொல்லி, பக்கத்தில் குடியிருப் பவர்களிடம் ஐந்து ரூபாய் கடன் வாங்கிக் கொடுத்து நீலகண்டனை அனுப்பினுர். உடனே 'பாரத ஸமுதாயம் வாழ்கவே' என்ற பாடலு-மியற்றினுர்.

நீலகண்ட பிரம்மசாரி தான் குடியிருந்த மாடிக்கு என்னைப் பல தடவை யழைத்துப் போயிருக்கிருர். அப்பா பாட்டுக்கள் பாடச் சொல்லி கேட்பார். அதில் நீலகண்டனுக்குப் பிரியமான பாடல்கள் 'நெஞ்சு பொறுக்குதிலையே — இந்த நிலை கெட்ட மனிதரை நினைத்து விட்டால்' என்ற நொண்டிச் சிந்தில் பாடும் பாட்டும், 'மண் வெட்டிக் கூலி தின்னலாச்சே. எங்கள் வாள் வலியும் வேல் வலியும் போச்சே' என்ற தெம்மாங்கு மெட்டில் பாடும் மறவன் பாட்டும்; மேற்படி பாட்டுக்களைக் கேட்கும் போது நீலகண்டன் மனம் வெதும்பி இரத்தக் கண்ணீர் வடிப்பார், என் தந்தை இறக்கும் போது அவரருகிலேயே நீலகண்டனும் இருந்தார். சில நாளைக்குப் பின் அவரை அரசாங்கத் தார் கைது செய்து விட்டார்கள் என்ற செய்தி தெரிந்தது. பின்பு எங்கு போனுர், யாது நேர்ந்தது என்ற விவரம் தெரியவே தெரியாது!

ஸர் சங்கரன் நாயர்

நாங்கள் திருவல்லிக்கேணிக்கு வந்தவுடன் ஸர். சங்கரன் நாயர் அவர்கள் என் தந்தையை சந்திக்க வேண்டிப்பின் என் தந்தையுடன் நெருங்கிப் பழக மிகவும் ஆவல் கொண்டார். தந்தையார் தமது பாட்டுக்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அவருக்குச் சொல் வாராம். அதையனுபவித்து ஆனந்தங் கொண்ட ஸ்ரீ நாயர் தமது தாய் பாஷையான மலையாளத்திலுள்ள நயம் மிகுந்த கவிதைகளை அப்பா படிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.என் தந்தைக்கோ அப்பொழுது மலையாளம் தெரியாது. மலையாளத்திலுள்ள கவி தைகளை சரிவர இனிமை குன்ருமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும்

Forwarded With Compliments From
THE DEPARTMENT OF CULTURE
GOVERNMENT OF INDIA.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திறன் தமக்குப் போதாதென்று ஸ்ரீ நாயர் என் தந்தையையே மலையாளம் கற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். தன்னைப் போலவே பிறரும் படித்து இன்பமுற வேண்டுமெனும் அவாவினால்!

ஸர். சங்கரன் நாயர் தமது கட்சிக் கூட்டமொன்றிற்கு என் தந்தையை அழைத்துப் போயிருந்தாராம். அதில், பலர் பலவாறு பேசுவதையும் என் தந்தை பொறுமையாகவே கேட்டுக் கொண்டு வந்தாராம். ஆனால் ஒருவர் தம் தாய் நாட்டை இகழ்ந்து பேசுவதை மட்டும் அவரால் பொறுக்க முடியவில்லையாம்! எழுந்து நின்று, ஆங்கிலத்தில் 'துரோகி' (Traitor) என்று கத்தினாராம். பின் அங்கிருந்தவர்கள் என் தந்தைக்கு சமாதானம் கூறியழைத்து வந்தார்களாம்.

ஸ்ரீ நாயர், தாம் மறுபடி இங்கிலாந்துக்குச் செல்லும்போது, என் தந்தையும் உடனழைத்துப் போவதாகக் கூறியிருந்தார். 'பாரதி உமது பெருமையுணர்ந்து போற்ற நம் தாய் நாட்டாருக்குத் தோன்றுமளவும் நீர் அயல் நாட்டில் வசிப்பதே நலம்' என்று கூறுவாராம். ஸ்ரீ நாயர் அவர்கள் விருப்பப்படி மலையாளம் கற்பதற்காக என் தந்தை மலையாள முதல் பாடப்புத்தகம் ஒன்று வாங்கிப் படிக்க ஆரம்பித்தார். பல பாஷைகளையும் எளிதில் கற்றுத் தேர்ச்சியடைவதில் என் தந்தை மிக்க வல்லவர்.

சிறு பிராயமுதல் தமிழே பயின்று வந்த என் தந்தை, பின், திருநெல்வேலிக் கல்லூரியில் ஆங்கிலமும் கற்றார். காசிக்குச் சென்று படிக்க நேர்ந்த போது சமஸ்கிருதமும் ஹிந்தியும் கற்று, பரீக்ஷையில் முதன்மையாகத் தேறினாராம். பின்னர் புதுவையில் பிரெஞ்சு பாஷையும், வங்காளி பாஷையும் படித்தார். முதல் உலக யுத்தம் தொடங்கியதும் ஜெர்மன் பாஷை கற்றார். லத்தீன் ஏற்கனவே பயின்றிருந்தாராம். உருது பாஷையும் அவர் வட நாட்டில் வசித்தபோது கற்றிருந்தார். முன்பு, சென்னையில் வசித்த நாளில் தெலுங்கு படித்தார். கடைசி நாட்களில் அரபி பாஷையும் மலையாளமும் கற்கத் தொடங்கினார்.

என் தந்தையின் முகமதிய நண்பரொருவர் முகமதிய வேதமான குர் ஆனை' தமிழில் மொழிபெயர்த்துத் தரும்படி கேட்டுக் கொண்டார் அதற்காக குர் ஆனை நன்றாகப்படித்துப்பின் மொழிபெயர்க்கவும் ஆரம்பித்தார். அரபி பாஷையிலுள்ள எழுத்துக்களின் உச்சரிப்பை அதன் முறை தவறாது சொல்வதற்காக திரும்பத்திரும்பச் சொல்லிச் சொல்லிப் பழகுவார். அருகிலிருந்து கேட்பவர்களுக்கு அது மிக வேடிக்கையாகத் தோன்றும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருவல்லிக்கேணியில் எழுதிய பாட்டுக்கள்

ஹிந்துஸ்தானி பாஷையில் 'மக்கேக்கோ ஜாயங்கே. மன்னு காயங்கே – ஹாரே நூர்ஜிஹான்' என்று ஒரு பாட்டின் முதலடி பாடுவார். அது அவர் இயற்றியதா அல்லது வேறு யாரேனும் பாடியதா என்பது தெரியாது.

தமிழில், 'அகில லோகமும் ஆனவளே – எங்கள் அம்மா, அம்மா அம்மா' என்று ஒரு பாட்டு எழுத்தில் கண்டால் அதன் எளிய சொற்களின் பாவனை அத்தனை அழகாக இருக்காது. அதை இரவு நேரத்தில் அவருக்கே உரித்தான புதிய பாணியில் பாடுவதைக் கேட்டவர், அதன் ஒவ்வொரு பதத்தின் அசைவிலும் தோன்றும் அழகின் எல்லையைக் கண்டு அகமகிழ்வார்.

'சாகாவரம்' பெறுவதைப் பற்றி அவர் இறப்பதற்குச் சில நாளைக்கு முன் பல கட்டுரைகளிலும் பிரசங்கங்களிலும் கூறியிருக்கிறார்.

பல்லவி

சாகா வர மருள்வாய் — ராமா
சதுர் மறை நாதா — ஸரோஜ பாதா !

என, சடையம் ராமசாமி கோயிலுக்கு எதிரே குடியிருந்த நாளில் ஒரு பாட்டும் எழுதியிருந்தார். சாகாதிருக்கும் வழியைப் பற்றிப்பாடி, இரண்டு வருஷம் முடியும் வரை கூட அவர் உயிருடனிருக்கவில்லை.

சமஸ்க்ருத பாட்டுக்கள்

"கீர்த்தி ஸ்ரீ காந்தா கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹோ,
தீர்த்தாமர கணவந்தித திவ்யாம்ருத
ஸ்ரீராதாபி நந்தித (கீர்த்தி ஸ்ரீ)
மூர்த்தி ஹ்ருத பரப் பிரும்ம முத்ரிபூத நித்யாநந்த—
(கீர்த்தி ஸ்ரீ)
"ராதே. ராதே, த்வமஹமஹம்த்வம், ராதே ஸ்ரீ ராதே
நாதஸ்வரூபிணி நரலோக ப்ரதிஷ்டிதரமே
பாத கமல விஸ்ருதாகிட பாக்யே
பத்ம குசே மத்ஸமே—ராதே ராதே"

மேற்கண்ட இரண்டு சிறிய சம்ஸ்க்ருத பாட்டுக்களும் ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியன்று இயற்றினர். அவைகள், அவர் எழுதிவைத்திருந்த கையெழுத்துப் பிரதிகளுடன் வைக்கப்படவில்லை. எங்கோ காணமற் போய்விட்டன போலும் !

ரஷ்யாவின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்ட தலைவர்கள், லெனின், ட்ராட்ஸ்கீ, நம்தேசத்துப் பெரியார்கள், தலைவர்கள் மீது வாழ்த்துப் பாடல் ஒன்று எழுதினர்.

Forwarded With Compliments From
THE DEPARTMENT OF CULTURE
GOVERNMENT OF INDIA.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"'தொலைப்பேன் கொடுங்கோன்மையை' யென்ற
ட்ராட்ஸ்கி வாழ்கவே';

'நிலைப்பேரானந்தமுற என்னாளும் மண்மிசை
நிறுத்துவேன் இங்குயிரை' என்றவசு ஒளிர்கவே;
'மரணபயத்தை ஒழிப்பேன்!' என்ற மகம்மதலி வாழ்கவே,
'சரணம், அல்லா ஒன்றே' யென்ற ஷவுக்கத்தலி வாழ்கவே"

என்பது அந்தப்பாட்டு. அதுவும் அவர் இறந்தவுடன், காணமற் போன கடிதங்கள் புஸ்தகங்களுடன் மறைந்து விட்டன.

எல்லாவற்றையும்விட முக்கியமானது அவர் எழுதியிருந்த 'ஹிரண்யன்' எனும் கவிதை நாடகம். அதை அவர் பாடிக் காண்பிக்கும் போது மிக்க ரஸமாக அபிநயத்துடன் பாடுவார்.

பாட்டு

ஹிரண்யன் :— "உன்னத மலை முடி மீதினிலிருந்து உருட்டுவேன்" என்றான்.

பிரஹ்லாதன் :—"ஓம் நமோ நாராயணாய" என்றான் சிறுவன்

ஹிரண்யன் :—"இடுப்பினை ஒடிப்பேன், இங்குனை நான் தின்பேன்" என்றான் தீயோன்

பிரஹ்லாதன் :—"ஓம் நமோ நாராயணாய" என்றான் சிறுவன்

ஹிரண்யன் .—"நடுப்பனிக்கடலில் திமிங்கில வாய்க்குனை நான் கொண்டு திணிப்பேன்" என்றான்

பிரஹ்லாதன் :—"ஓம் நமோ நாராயணா" என்றான் சிறுவன்

"ஓம் நமோ நாராயணாய" என்ற வாக்கியத்தைத் திரும்பத்திரும்ப பல நூறு தடவைகள் சொல்லிச் சொல்லி அந்த பக்தி விசித்ரத்துடன் ஒன்றாக லயித்திடுவார். ஹிரண்யன் நாடகம் அவர் எழுதிய காரணம் நாங்கள் துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவில் குடியிருந்தபோது எங்கள் வீட்டிற்கெதிரில் சிறிது தொலைவில், நரசிங்கப் பெருமாள் சன்னதியின் வாசல் இருந்தது. ஒரு நாள் என் தந்தையாரின் சீடர்களில் ஒருவரான பட்டாச்சாரியார் பார்த்தஸாரதி கோயிலிலிருந்து நரசிம்மஸ்வாமி ஸன்னதி வாயில் வழியாக வெளிவர, என் தந்தை திரும்பியபோது, 'அப்படிச் செல்வது வழக்கமில்லை. நரசிம்ஹர் மிகுந்த உக்ர மூர்த்தி. அதனால் பிரதட்சணமாக வேறு வழியாகப் போகலாம்' எனக்கூறினர். அதிலிருந்து உண்டான அற்புதக்கற்பனை நாடகம் தான் "ஹிரண்யன்." அந்த நாடகத்தின் கையெழுத்துப் பிரதிகளும் காணப்படவில்லை.

பார்த்தஸாரதி கோயில் யானை

காலை நேரத்தில் சில சமயம் என் தந்தை பார்த்தஸாரதி கோயிலுக்குப் போவார். அங்கு வாசல் மண்டபத்தில் கட்டியிருக்கும் யானைக்குப் பழம் வாங்கிக் கொடுப்பார். பின் அதனுடன் விளையாட்டாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறிது வார்த்தையாடிவிட்டு வருவது வழக்கம். சில நாளாக கோயில் பக்கம் போகாதிருந்த என் தந்தை ஒரு நாள் வழக்கம் போல யானைக் குப் பழம் கொடுக்கப் போனார். யானைக்கு மதம் பிடித்திருந்ததால் நான்கு கால்களுக்கும் சங்கிலி போட்டுக் கட்டப்பட்டிருந்தது. ஜனங் கள் கம்பி வேலிக்குப் புறம்பே நின்று வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்தார்கள். என் தந்தை உள்ளே சென்ற போது அவரை யாரும் தடுக்கவில்லை போலும்! வழக்கம் போல வாழைப் பழத்தை யானையின் அருகில் சென்று கொடுத்தார். துதிக்கையை நீட்டிப் பழத்தை வாங்கிய யானை, பின் அவரைத் துதிக்கையால் கீழே வீழ்த்தி விட்டது. யானையின் நான்கு கால்களுக்கு மிடையில் விழுந்து விட்டார். கீழே பாருங்கல் பாவியதரை. என் தந்தை எழுந்திருக்கவில்லை. முகத்தி னின்றும் இரத்தம் பெருக்கெடுத்து விட்டது. யானை தன் நண்ப னுக்குத் தீங்கிழைத்து விட்டோமே என்ற பச்சாத்தாபத்துடன் தன் பிழையையுணர்ந்தது போல அசையாமல் நின்று விட்டது. அது தன் காலை ஒரு முறை அசைத்திருக்குமானால் அத்துடன் 'பாரதியார் கதை' முடிந்திருக்கும்! சுற்றி நிற்கும் ஜனங்கள் திகைத்து விட்டார் கள். உள்ளே நுழைந்து அவரைத் தூக்க ஒருவருக்கும் தைரியம் இல்லை. அந்த வேளையில் எங்கிருந்தோ வந்தான் குவளைக் கிருஷ்ணன். தன் உயிரைத் திரணமாக மதித்து உள்ளே குதித்து என் தந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தான். பின்னர் கேட்க வேண்டுமா? ஜனங்கள் அவரைத் தாங்கிய வண்ணம் கோயில் வாசல் மண்டபத்திற்குக் கொண்டுவந்தார்கள். எதிர் வீட்டில் குடி யிருக்கும் ஸ்ரீ ஸ்ரீனிவாசாச்சாரியாருக்கு விஷயம் எட்டியது. அவர் ஓடி வந்து ஒரு வண்டியில் என் தந்தையைப் படுக்க வைத்து ஆஸ்பத்தி ரிக்குக் கொண்டு போனார். குவளைக் கிருஷ்ணனும் கூடவே போனான்.

ஸ்ரீனிவாசாச்சாரியார் பெண் 'ரெங்காள்' என்பவள் எங்கள் வீட்டிற்கு ஓடிவந்தாள். 'சகுந்தா, அப்பாவை ஆனை அடிச்சுடுத்து' என்று அழுதுகொண்டே கத்தினாள். கடவுளே! அந்த ஒரு நிமிஷமும் என் உள்ளம் இருந்த நிலையை எதற்கு ஒப்பிடுவேன்?—அப்பாவை ஆனை அடிச்சுடுத்து—ரெங்காவுடன் பார்த்தஸாரதி கோயில் வாயி லுக்கு ஓடினேன். அதற்குள் அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்விட்டார்கள். எந்த ஆஸ்பத்திரி என்று தெரியாது, என்ன செய்வது?

திருவல்லிக்கேணியில், விக்டோரியா ஹாஸ்டலில் என் தாயாரின் இளைய சகோதரர் வசித்து வந்தார். அவரைப் போய் அழைத்து வருவதற்காக விக்டோரியா ஹாஸ்டலுக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கு அவர் குடியிருந்த அறை நெம்பர் தெரியாது. ஒருவாறு தேடிக் கண்டு பிடித்து அவரிடம் செய்தியைத் தெரிவித்தேன். ஜெனரல் ஆஸ்பத்திரிக்குத்தான் கொண்டுபோயிருப்பார்களென நினைத்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர் அங்கு சென்ருர். பின்பு, நான் வீடு திரும்பி வந்தபோது என் தந்தையை வீட்டுக்குக் கொணர்ந்து விட்டிருந்தார்கள். மேல் உதட்டில் யானையின் தந்தம் குத்தியதால் ஏற்பட்ட காயம். தலையில் நல்ல பலமான அடி. மண்டை சிதைவுற்று இருந்தது. நல்ல காலமாக, அவரது பெரிய தலைப்பாகையிருந்தபடியால் தலை தப்பிற்று.

என் தந்தையின் உயிருக்கு ஆபத்து இல்லையெனக்கேட்டு என் மனம் ஒருவாறு ஆறுதல் அடைந்தது. காயங்கள் சிறிது குணமடைந்து அவர் திரும்ப வேலைக்குச் செல்ல பல நாட்களாயின. யானை அவரைத் தள்ளிய சில காலத்திற்கெல்லாம் ஏதோ ஓர் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக என் தந்தை தனிமையாக நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் படம் (தாடியில்லாமல்) எடுக்கப்பட்டது. யானை தள்ளிய கதையையும் தன் சொந்தக் கற்பனையையும் சேர்த்து ''காளிகோயில் யானை'' என்ற கதையொன்று எழுதியிருந்தார். அது சுதேசமித்திரனில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

பெண் விடுதலை

பெண்களுக்கு ''வோட்டு'' உரிமை வேண்டுமென்று நம் நாட்டிலும் கிளர்ச்சி எழும்பியது. அதற்கு நம் சென்னை மாகாணத்தில் தலைமை வகித்து நடத்த முன்வந்தவர் ஸ்ரீ மார்கரெட் கஸின்ஸ் (Margaret Cousins), டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, சகோதரி சுப்பலெட்சுமி அம்மாள், ஸ்ரீமதி ருக்மணி லட்சுமிபதி முதலியோர். இங்கிலாந்து தேசத்தில், ஸ்திரீகள் வோட்டு உரிமைக்காக அரும்பாடு படவேணடி வந்தது. கூட்டங்களில் குழப்பம் விளைவித்தும், கண்ணுடி ஜன்னல்களை உடைத்தும், சிறைச் சாலைக்குச் செல்லவேண்டியிருந்தது. ஆனல் நமது நாட்டிலோ, வெகு சுலபமாக, மாதர்கள் கேட்டவுடனேயே வாக்குரிமை கிடைத்துவிட்டது! பெண் விடுதலை, பெண்கள் முன்னேற்றம், இவற்றில் பேராவல் கொண்டவராதலால் என் தந்தைக்கு மேற்படி விஷயம் மிக்க மகிழ்ச்சியளித்தது.

சென்னையில், 'பாரதஸ்திரீ மகா மண்டல்' என்று ஓர் சபை ஏற்படுத்தினர்கள். அதில் சேருமாறு என் தாயாருக்கு அழைப்பு அனுப்பினர்கள்.

கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலுள்ள 'சௌந்தர்ய மஹால்' கட்டிடத்தில், பாரத ஸ்திரீ மகாமண்டலின் கூட்டம் ஒருமுறை நடைபெற்றது. கவி ரவீந்த்ரநாத் டாகூரின் உறவினரான ஸ்ரீமதி சரளாதேவி சௌத்ராணி சென்னைக்கு விஜயம் செய்திருந்தார். அவர் மேற்படி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கூட்டம் ஆரம்பிக்க சிறிது நேரத்திற்கு முன்பே என் தந்தை என்னையும் என் தாயாரையும் அழைத்துக் கொண்டு வந்து சௌந்தர்ய மஹாலில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விட்டுவிட்டு, தான் ஏர்ரபாலு செட்டித் தெருவிலிருந்த சுதேச மித்திரன் காரியாலயத்திற்குப் போய்விட்டார்.

ஸ்ரீமதி சரளாதேவி தாம் இயற்றியிருந்த ஹிந்துப் பாடல் ஒன்றைப் பாட விரும்பினுர். தனியாக ஒருவர் பாடுவதைவிட நாலைந்து பேர்கள் சேர்ந்து பாடினுல் மிக்க உத்ஸாகமாக இருக்கு மென்று எண்ணி, என்னையும சபைக்கு வந்தவர்களில் வேறு சில பெண்களையும் கூப்பிட்டு. எங்களுக்கு அந்தப் பாடலைப் பாடும் முறையைக் கற்றுக் கொடுத்தார். நாலைந்து கையெழுத்துப் பிரதி களும் தயார் செய்து ஒவ்வொருவருக்கும் அளித்தார். அந்தப்பாட்டு எனக்கு ஞாபகம் வந்த வரை கீழே குறித்திருக்கிறேன்.

"அதீத கௌரவ வாஹினி மேரி வாணி
காவோ அஜ ஹிந்துஸ்தான்
மஹா ஸபா உன் மாதினி மேரி வாணி
காவோ அஜ காவோ அஜ ஹிந்துஸ்தான் – அதீத
கரோ விக்ரம விபவ பஜ ஸௌரப
பூரித வஹி நமகான்
வங்க விகார அயோத்யா உத்கல
மத்ரஸ மராட்ட கூர்ஜர நேபல
பஞ்சவ ராஜபுதரன்
ஹிந்து பார்ஸீ ஜைன இஸாகி
சீக் முஸல்மான்
காவோ ஸகல கண்ட ஸகல பாஷ
நமோ ஹிந்துஸ்தான்
ஹர ஹர ஹர ஜெய ஹிந்துஸ்தான்
சத் ஸ்ரீ அகால ஹிந்துஸ்தான்
அல்லா ஹோ அக்பர் ஹிந்துஸ்தான்
நமோ ஹிந்துஸ்தான்.
பேத ரிபு நாசினி மேரி வாணி
காவோ அஜ ஐக்யகான்
மகா பல விநாயினி மேரிவாணி
காவோ அஜ ஐக்யகான் — பேத
மிலாவோ துக்கே சௌக்யே சக்யே
லக்ஷே காய் மன பிராண்
வங்க விகார சுயோத்யா உத்கல
மத்ரஸ மராட்ட கூர்ஜர நேபல
பஞ்சவ ராஜ புதரன்
ஹிந்து பார்ஸீ ஜைன இஸாகி
சீக் முஸல்மான்
காவோ ஸகல கண்ட ஸகல பாஷ
நமோ ஹிந்துஸ்தான்
ஹரே முராரே ஹிந்துஸ்தான்
தாதர் ஹோமஸ்த் ஹிந்துஸ்தான்
அல்லாஹோ அக்பர் ஹிந்துஸ்தான்
நமோ ஹிந்துஸ்தான்"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பண்டிதை விசாலாட்சி அம்மாளும் அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். என் தந்தையார் சென்னைக்கு வந்திருக்கும் விவரம் அவருக்கு அதுவரை தெரியாதாம். என் தந்தை, எங்களைத் திரும்ப அழைத்துப்போக வந்தவுடன் அவரைக் கண்டு, தமது புஸ்தகங்கள் சிலவற்றைப் படித்து அபிப்பிராயம் கூறுமாறு கேட்டுக்கொண்டார்.

சகோதரி சுப்பலெட்சுமி அம்மாள் மாதர் சமூகத்திற்குச் செய்திருக்கும் தொண்டு அளவிட முடியாது. அவர் 'சாரதா ஐக்கிய சங்கம்' என்ற ஸ்திரீகள் சபையொன்றைக் கூட்டி மாதமொரு முறை அந்தக் கூட்டத்தில் அரிய உபன்யாசங்களும் பெண்கள் முன்னேற்றத்திற்கு முதல்படியான பெண் கல்வி வளர்ப்புக்கு ஏற்ற பயிற்சிகள் பலவும் செய்து வந்தார். ஸ்ரீமதி மங்களாம்பாள் அம்மையார் (ஜட்ஜ் ஸ்ரீ சதாசிவ ஐயரின் மனைவியார்) அந்த சங்கத்தின் தலைவி. என் தந்தை, புதுவையிலிருந்தபோது பிஜித் தீவிலே அந்நிய மாதர்கள் கூலிகளாக, பத்து ஆண் மக்களுக்கு ஒரு பெண் வீதம் அனுப்பப்பட்டு, அவர்கள் அங்கு அனுபவிக்கும் துன்பத்தை நீக்க வேண்டுமென்று சென்னை மாதர் சங்கத்தின் சார்பாக ஸ்ரீமதி மங்களாம்பாள் சென்னையில் ஓர் பொதுக் கூட்டத்தில் பேசினர். அப்பொழுது என் தந்தை புதுவையிலிருந்து எழுதியனுப்பிய 'கரும்புத் தோட்டத்தில்' என்ற பாடலையும் படித்தாராம்.

பிராணிகளிடத்தில அன்பு

யானை மதம் பிடித்த போது கீழே தள்ளியதையும் அவர் பொருட்படுத்தவில்லை. உடம்பு சற்று குணமானதும் வழக்கம் போல யானைக்கு தேங்காய் பழம் வாங்கிக் கொடுப்பதையும் நிறுத்தவில்லை. மதம் தெளிந்து சுய அறிவு திரும்பப் பெற்ற யானையும் தனது குற்றத்தை யுணர்ந்து மன்னிப்புக் கேட்பது போல, எந்தந்தையைக் கண்டவுடன் துதிக்கையை நீட்டியழைக்கும். ஆறறிவு படைத்த மனிதர்களைப் போலவே மிருகங்களும், அவர் மீது பட்சம் காட்டின.

திருவனந்தபுரத்தில், என் தாயாரின் மூத்த சகோதரியார் தன் மகளுக்கு விவாகம் நடத்திய போது, நானும், என் தாயும், தமக்கையும் மற்றும் பந்துக்கள் பலரும் அங்கு சென்றிருந்தோம். விவாகம் முடிந்தவுடன் இரண்டு நாட்கள் அங்கு தங்கி யிருந்து நாங்கள் அவ்வூர் மிருகக் காட்சி சாலையைப் பார்க்கப் போனேம். என் தந்தையும் அப்பொழுது அங்கு வந்திருந்தார். பலமிருகங்களையும் பார்த்துவிட்டு சிங்கக் கூண்டினிடம் போய்ச் சேர்ந்தோம். அங்கிருந்த காவலாளி கூண்டினிடம் நெருங்கக் கூடாததென எச்சரிக்கை செய்தான். பின் அவன் எங்கள் வேண்டுகோளின் மேல் அந்த சிங்கத்தை கர்ஜிக்கச் செய்ய முயன்ருன். சிங்கம் அவன் சொன்னதை லட்சியம் செய்யாமல் மௌனமாகயிருந்தது. என் தந்தையார், 'ஹே, மிருகேந்திரா! உன்னுடன் சம்பாஷணை செய்ய கவீந்திரனுகிய பாரதி வந்திருக்கிறேன். நமக்கு வணக்கம் கூறு,' என்ருர். உடனே சிங்கம் அதை ஆமோதிப்பதுபோல திக்குகளெல்லாம் நடுங்கும்படி கர்ஜனை செய்தது. கூட இருந்தவர்களுக்கு சந்தோஷமும் ஆச்சர்யமும் உண்டாயிற்று!

முன்னெரு முறை, புதுவையில் எங்கள் வீட்டு வாயில் வழியாக ஒருவன் ஆடு ஒன்றை இழுத்துச் சென்ருன். அது முன் செல்ல

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனமில்லாமல் பரிதாபகரமாக கத்திக்கொண்டே சென்றது. இந்த சம்பவத்தை மாடிமீது நின்று கொண்டிருந்த என் தந்தை பார்த்தார். உடனே கீழே இறங்கி வந்து ஆட்டை யிழுத்துச் சென்றவனை விசாரித்தார். அவன் அந்த ஆட்டை வெட்டுவதற்குக் கொண்டு போவதாகச் சொன்னான். மிருகங்களுக்குள்ள—தனக்கு அபாயம் நேருமென்று முன்னால் அறிவிக்கும் விவரிக்க முடியாத—உணர்ச்சியினால், அந்த ஆடு அவனுடன் வர மறுத்து, பின்வேறு வழியில்லாமல், தனது பயத்தைத் தெரிவிக்கும் அபயக்குரலுடன் கத்திக்கொண்டே சென்றதுபோலும். என் தந்தைக்கு அதன்மீது அளவு கடந்த இரக்கம் உண்டாகிவிட்டது ஆட்டுக்காரனிடம் ஆட்டின் விலையைக் கொடுத்து வாங்கி வீட்டுக்குள் கொண்டுவந்தார். எங்கள் வீட்டில் மாட்டுக்கொட்டில் கிடையாது. வீட்டின் நடு முற்றத்தில் கட்டி வைத்தோம். என் தாயார், நடு வீட்டில் ஆடு ஒன்றைக்கட்டி தழையும் புழுக்கையுமாக வீட்டை அசுத்தம் செய்யக்கூடாதென்று சொல்லிவிட்டார். என் தந்தை ஆட்டைத் தூக்கிக்கொண்டு மாடிக்குச் சென்றார். நானும் வேலைக்காரப்பெண்ணுமாக தழைகளையும், குழைகளையும் வாரிக்கொண்டு போய் மொட்டை மாடியில் போட்டோம். ஆடும், நன்றியறிதலுள்ள பார்வையுடன் தழைகளைத் தின்றது. என் தந்தையார் தாம் செய்த காரியத்தைத் தாமே மனத்திற்குள் மெச்சி, சந்தோஷமாக தமது அறைக்கு எழுதப்போய்விட்டார்.

சாயங்காலமானதும் ஆடு கத்தத் தொடங்கிவிட்டது, ஏதெல்லாமோ செய்து பார்த்தோம், பலனில்லை. பின் என் தந்தை அதற்குப் பாட்டுப்பாடத் தொடங்கினார் அந்த ஆட்டிற்கு "ராதை" யென்ற பெயர் பகலிலேயே வைத்தாய் விட்டது, 'ராதிகே பரமேஸ்வரி' யென்று முடியும் அந்தப் பாடல் எனக்கு ஞாபகமில்லை. அவர் பாடி முடியும் வரை ஆடு கத்தாமல் சும்மா இருக்கும். பின் மறுபடி கத்தத் தொடங்கிவிடும். இரவு முழுவதும் இந்தக் கோலாகலம் தான். தம்மால் ஆட்டை வைத்து சமாளிக்க முடியாதென்று கண்ட என் தந்தை அம்மாக்கண்ணுவிடம் அதை வளர்த்து வரும்படி கொடுத்துவிட்டார்.

கடையம் பழைய கிராமத்தில் கோயிலுக்கெதிரில் கழுதைகள் கூட்டங் கூட்டமாக எப்பொழுதும் மேய்ந்து கொண்டிருக்கும், இரவு நேரத்தில் அவைகளின் அட்டகாசம் சொல்லிமுடியாது, சும்மா நின்றுகொண்டேயிருக்கும். பிறகு திடீரெனப் பெருங் குரலிட்டுக் கத்திக்கொண்டு ஓடும்.

ஒரு நாள், சிறிய அழகான கழுதைக் குட்டியொன்றை அக்கூட்டத்தின் நடுவே என் தந்தை கண்டார். அதன் கண்ணழகை அருகில் வைத்துப் பார்க்க ஆவல் கொண்டு, கழுதைக் குட்டியை வாரியணைத்து, தோள்மீது தூக்கிக் கொண்டு வந்தார். இந்தச் செய்தியைக் கேட்ட கிராமத்தார் அவரை 'பித்தன்' என்பதற்குத் தக்கதோர் சான்று கிடைத்ததென் றெண்ணி மனமகிழ்ந்தார்கள்!

கடைசி நாட்கள்

என் தந்தையார், தமக்குகந்த தொழிலான பத்திரிகைக்கு வியாசம் எழுதுவதிலும் பாட்டுகள் புனைவதிலும், நண்பர்களுடன் சல்லாபம் கடற்கரைக் கூட்டங்கள், நிபுணர்களுடன் சங்கீத ஆராய்ச்சி முதலிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வற்ருலும் சிறிது மனச்சாந்தி பெற்றவராக கூடியவரை உற்சாகத்துடனிருந்து வந்தார். ஆனால் யானையினால் தள்ளப்பட்டு நோயில் வீழ்ந்த பின், அவரது உடல்நிலை அத்தனை திருப்திகரமானதாக இல்லை. மிகுந்த பலஹீனமாகவே காணப்பட்டார். ஸ்ரீ வ. வே. சு. ஐயர் "தேசபக்தன்" பத்திரிகையை அப்பொழுது நடத்தி வந்தார். அவரும் அடிக்கடி என் தந்தையாரை சந்தித்துப் பேசுவார். சில சமயங்களில், காலைவேளையில் தெருக்கள்தோறும் பஜனை செய்துகொண்டு போவோம். என் தந்தை ஒரு 'அடி' பாடுவார். நாங்கள் அதைத் திரும்பப் பாடுவோம். ஸ்ரீ ஐயருக்குப் பாடத் தெரியாது, எனினும், ஆவல் மிகுதியால் கூடியமட்டில் எல்லோருடனும் சேர்ந்துபாட முயற்சிப்பார். திருவல்லிக்கேணியில் சில பெரிய தெருக்கள் வழியாகச் சென்று, பார்த்தஸாரதி கோயில் வாசலில் வந்து பஜனை முடிவடையும்.

இவ்வாறு நாட்கள் சென்று கொண்டிருந்த போது. என் தந்தையார், திடீரென வயிற்றுக்கடுப்பு நோயால் பீடிக்கப்பட்டார் ஏற்கனவே, மிகுந்த பலஹீனமடைந்த உடலானபடியால் வியாதியின் கடுமையைத் தாங்க முடியவில்லை. உற்ற நண்பர்கள் சிலர் எப்பொழுதும் வந்து கூட இருந்து உதவினர்கள்.

ஸ்ரீ வ. வே. சு. ஐயரை, 'தேசபக்தன்' ஆசிரியர் என்ற ஹோதாவில், அவரது பத்திரிகையில் வெளியான கட்டுரை ராஜத்வேஷம் உள்ளது என்ற குற்றத்திற்காகக் கைது செய்தார்கள். ஸ்ரீ ஐயர், போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகும்முன், வாரண்டுச் சேவகர்கள், போலீஸ் உத்தியோகஸ்தர்கள், மற்றும் சில நண்பர்கள் யாவரும் பின்தொடர. நோயுற்று படுத்த படுக்கையாக இருந்த என் தந்தையாரிடம் கடைசி முறையாக விடை பெற்றுச் சென்ருர்.

கடைசிவரை, தாம் பிழைத்தெழுந்து விடுவோம் என்று தான் என் தந்தை எண்ணியிருந்தார். சாகாதிருக்கும் வழியைப்பற்றி சதாகாலமும் பிரசங்கம் புரிந்தவருக்கு சாக மனம் வருமா?

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தொன்றும் ஆண்டு, செப்டம்பர் மாதம், பதினொன்ரும் தேதி—சாயங்காலம் விளக்கேற்றும் நேரம் 'இன்றிரவு தப்பினல் தான் பிழைப்பார்'—அதாவது இனி மேல் நம்பிக்கையில்லையென்று வைத்தியர் சொல்லிவிட்டார். ஏது நேருமோ வெனக் கிலிபிடித்தமனதுடன், என் தந்தை படுத்திருக்கும் அறைவாயிலில் உட்கார்ந்திருந்தேன். சில நாட்களாகவே என் தந்தையார் மருந்து சாப்பிடமறுத்து விட்டார். மிகுந்த சிரமத்துடன் கட்டாயப்படுத்தித்தான் மருந்து கொடுக்கவேண்டி வந்தது. அன்று 'அப்பாவுக்கு மருந்து நீ கொடுத்தால், ஒருவேளை கோபிக்காமல் சாப்பிடுவார்' என்று என் தாயார் என்னை மருந்து எடுத்துக் கொடுக்கும்படி சொன்னர். மங்கலான விளக்கு வெளிச்சம். நான் மருந்தென்று நினைத்து, பக்கத்தில் கிளாசில் வைத்திருந்த 'பார்லி' தண்ணீரை அவரிடம் கொடுத்தேன். மருந்து வேண்டாமென்ருர். உடனே அவர் மனதில் என்ன தோன்றியதோ? என் கையிலுள்ள கிளாஸை வாங்கி ஒரு வாய் குடித்தார். 'நீ கொடுத்தது மருந்து இல்லையம்மா! கஞ்சி,' என்று சொல்லிவிட்டுக் கண்ணை மூடி விட்டார் எனக்கு மறுபடியும் அவரை ஹிம்சை பண்ணி மருந்து கொடுக்க மனமில்லை. அப்படியே வெளியில் கூடத்தில் வந்து படுத்திருந்தேன். தூங்கிவிட்டேன் போலும்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Presented With Compliments from
THE DEPARTMENT OF CULTURE
GOVERNMENT OF INDIA.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Checked
Any Other

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar